தமிழரசு
மலர் 4. இதழ் 18
16 – 3 – 1974
பொதுமக்கள் ஓய்வு ஊதியம்
100
அரசு ஊழியர்கள் மட்டுமின்றிப் பொதுமக்களும் ஓய்வு
ஊதியம் பெறும் அரிய திட்டத்தை முதல்வர் கலைஞர் அவர்கள்
அறிவித்துள்ளார்கள்.



மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

1973—74-ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும், 1974—75-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீடுகளையும் அவையின்கண் வழங்கிட விழைகிறேன்.

''கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங்கொல்லோ உலகு''

எனும் குறள்மொழிக்கொப்பக் கடமையாற்றிடும் இந்த அரசு, என்றும்போல் அண்ணா வழி நின்று தமிழகம் செழிக்க, இந்த நிதி நிலை அறிக்கையைத் தமிழ் மக்களின் திருமுன் வைக்கிறது.

அனைத்திந்திய அளவில் இன்று பெரியதொரு பொருளாதார நெருக்கடி குமுறிக்கொண்டிருக்கிறது. உற்பத்திக் குறைவும், பற்றுக்குறையும் கட்டுக்கடங்காத விலையேற்றமும், தேசிய மட்டத்தில் புரையோடிக் கொண்டிருக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்கள் மட்டுமின்றி, தொழிலுக்கு அடிப்படைத் தேவைகளான மூலப் பொருள்கள், உலோகங்கள், எண்ணெய், உரம் போன்றவைகள் போதிய அளவிலும், தங்கு தடையின்றியும் கிடைப்பதற்கு வழியில்லாத சூழ்நிலை நாட்டின் பொருளாதாரத்தை வாட்டிக்கொண்டிருக்கிறது. நாட்டளவில் தோன்றியிருக்கும் இந் நோய் களைந்தெறியப்படாத வரையில் அது நமது மாநிலத்திலும் பரவத் தொடங்குவதைத் தடுத்து நிறுத்துவது இயலாததாக ஆகிவிடக் கூடும். இந் நிலையில் நீண்ட கால வளர்ச்சிக் கொள்கைகளை உருவாக்குவதும், திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துவதும் மிகக் கடினமான பணியாகிவிட்டது. தேசிய மட்டத்தில் பொருளாதார நிர்வாகம் சீராகக் கையாளப் படாததால் எழுந்துள்ள இத்தகைய சிக்கல் குறித்து விவாதித்துத் தீர்வு காண முதலமைச்சர்கள் மாநாடு ஒன்று உடனடியாகக் கூட்டப்பட வேண்டுமென்று நாம் பல முறை வலியுறுத்தியிருக்கின்றோம். இது குறித்து விவாதித்து முடிவுகளை எடுக்கப் பல் வேறு கருத்துக்களைத் தமிழக அரசின் சார்பில் நான் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் விளக்கிக் கூறியிருக்கின்றேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

இடர்ப்பாடும் இன்னலும் உறுதியற்ற நிலையும் தலைகாட்டும் இப் பின்னணியில் நாட்டின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் எப்படி வகுக்கப்பட வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். 53,411 கோடி ரூபாய் அளவிலான திட்ட வரைவு அறிவிக்கப்பட்டு அதனை தேசிய வளர்ச்சி மன்றமும் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால், விலைவாசி உயர்வினாலும், மூலப் பொருள்கள் கிடைக்காமையாலும் திட்டத்தின் அளவு தேய்ந்துகொண்டே

முதல்வர் கலைஞர் அளித்த

ஏழை மக்களுக்கு இனிய தென்றல்! எழில்நாடு வளம்பெறப் புதிய திட்டம்!

வருகிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்குத்தேவையான கருவிகளாம் நாணயக் கொள்கை, வரி விதிப்புக் கொள்கை ஆகியவை மத்திய அரசினிடத்தே உள்ளன. பணவீக்கத்தை மட்டுப்படுத்துகிற முயற்சியிலும் மத்திய அரசு ஆர்வம் காட்டாமல் விலைவாசி ஏறிக் கொண்டே போகிற சூழ்நிலையில் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்ற முழக்கம் மட்டும் எழுப்பப்படுமேயானால் எண்ணியவாறு திட்டம் செயல்படுவதற்குப் பதிலாக நாம் விரும்பி ஏற்றுக் கொள்ள முடியாத ''திட்ட விடுமுறை'' வலிய வந்து நுழைந்து விடுமோ என்று அஞ்சுகின்றேன். இந்த அச்சத்தை உறுதிப்படுத்துகிற வகையிலே தான் மத்திய அரசு நமது மாநிலத்திற்காக நாம் வகுத்தளித்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவதில் இன்னும் ஒரு திட்ட வட்டமான முடிவிற்கு வராமல் இருக்கிறது. நமது மாநிலத்திற்கு, 1,532 கோடி ரூபாய்க்கான ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். நமது மாநிலத் திட்டக் குழு கோடிட்டுக் காட்டிய நீண்ட காலத் திட்டத்திற்கான அடிப்படை நோக்கங்களைக் கருத்தில் கொண்டு நமது திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைக் குறித்து மத்திய அரசினருடன் பல முறை பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளோம். மாநில அளவில் திட்டம் தீட்டுவதற்கு வெளிச் சந்தையில் நமது தேவைக்கான கடன் எழுப்புவது, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவது இவையெல்லாம் மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவை. மேலும், மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட அளவு நிதி உதவியும் வழங்கிட வேண்டும். ஆனால், இதுவரை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் உதவியின் அளவும், ஒப்பளிக்கப்படும் கடன்களின் அளவும் நிர்ணயிக்கப்படவில்லை. இந்த நிலையில் நமது மாநிலத்திற்கான ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வரைவை, அவை முன் வைப்பதற்கு இயலாததற்கு வருந்துகிறேன்.

மாநிலத் திட்டம் என்பது அம் மாநிலத்திலே ஏற்படுகிற மொத்த வளர்ச்சிப் பணிகளின் ஒரு பகுதியே என்பதை இம் மா மன்றம் நன்கு உணரும். வளர்ச்சிப் பணிகளின் ஏனைய முக்கியமான பகுதிகள் மத்தியத் துறை, தனியார் துறைத் திட்டங்களாகும். மத்தியத் துறைத் திட்டத்திலும், தனியார் துறைத் திட்டத்திலும் செய்யப்படுகிற அனைத்திந்திய முதலீட்டில் நியாயமான பகுதி தமிழ்நாட்டுக்குக் கிடைக்கச் செய்வதன் அவசியத்தை நாம் அனைவரும் வற்புறுத்தி வந்துள்ளோம். அனைத்திந்திய அளவில் பல்வேறு தொழில்களிலும் போக்குவரத்திலும் மத்திய அரசு ஏராளமான முதலீடு செய்து வருகிற போதிலும், தமிழ்நாட்டிற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்கு,

1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்துள்ளது. ஐந்தாவது திட்டக் காலத்திலேனும், இந்த அநீதி இழைக்கப்படக் கூடாது என்று மத்திய அரசிடம் பல முறை வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் மத்திய அரசுத் திட்டங்களில் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் புதிய திட்டப் பணிகளுக்கு வழிவகை செய்யப் படவே இல்லை என்பதை நான் தேசிய வளர்ச்சி மன்றத்தில் சுட்டிக் காட்டினேன். நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலை, அதனைச் சார்ந்து 1,000 மெகா வாட் மின் உற்பத்தி நிலையம், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம், புதிய உரத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை போன்ற புதிய திட்டங்களைக் குறித்த முடிவுகளில் விரைவான போக்கைக் காண முடியவில்லை. அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் பிரதமரும் திட்ட அமைச்சரும் நம் முறையீடுகளை விரைவில் கவனித்துத் திட்டத்தில் சேர்ப்பதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தனர். திட்டத்தின் இறுதி வடிவத்தில் நாம் அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ள இவை சேர்க்கப்படுமென நம்புகிறேன்.

மத்திய நிதி உதவியிலும் முதலீடுகளிலும் தமிழ்நாட்டிற்கு நியாயமான பங்களிக்குமாறு கேட்கும் பொழுது மத்திய அரசின் நிறுவனங்களும் அதிகாரிகளும் அதைத் தட்டிக் கழிக்க ஒரு விபரீதமான கருத்தைக் கூறுகிறார்கள். ''தமிழ்நாடு மிக முன்னேற்றமடைந்த மாநிலம். ஆகவே, தமிழ்நாட்டிற்கு அதிக உதவி தேவையில்லை'' என்பதுதான் அந்தக் கருத்தாகும். கல்வி, மருத்துவம் போன்ற பணிகளுக்கு இம் மாநிலம் செய்கிற அதிகச் செலவு, மேலும் இம் மாநிலத்திலுள்ள தனி நபர் வருமானத்தின் அளவு, இவைகளை மட்டும் கருத்தில் கொண்டு இப்படி அவர்கள் வாதிடுகிறார்கள்.

முன்னேற்றப் பாதையை நோக்கி நமது மாநிலம் நடைபோடுவதையே ஒரு குற்றமாகக் கருதி, முழுமையான முன்னேற்றம் அடைந்துவிட்டதாகக் கூறி, முன்னேற்றத்திற்கான நிதி ஆதார வாயில்களின் கதவுகளைத் தாளிடுவது முறையல்ல என்பதை நான் பல முறை விளக்கியிருக்கிறேன்.

நிதி ஆணைக் குழு

நிதி வசதிகளை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதில் தற்போது கையாளப்பட்டு வரும் முறைகள் மன நிறைவு தருவதாக அமையவில்லை. ஆவலுடன் எதிர்பார்த்த ஆறாவது நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தமிழ்நாட்டை ஏமாற்றத்திற்கு ஆளாக்கியுள்ளன. கடன் தவணைகளில் சலுகை வேண்டுமென்று நம் மாநிலத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கை ஒன்று மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டதல்லாமல் வேறு பயனெதுவும் கிட்டவில்லை.

பின் தங்கிய மாநிலங்கள் என்ற காரணத்தைக் காட்டி வேறு சில மாநிலங்களுக்கு, தேவைக்கு மேலாகவே ''நிர்வாகத்தின் தரத்தை உயர்த்துதல்'' (Upgrading Standards at administration) என்ற கணக்கில் நிதி வசதிகளை வாரி வழங்கிய ஆறாவது நிதி ஆணைக் குழு நம்முடைய மாநிலத்திற்குப் பெரிய அநீதியை இழைத்துள்ளது.

பல்வேறு சமூகப் பணிகளுக்கு அனைத்திந்திய அளவில் நபர் வாரியாகச் செய்யப்படுகின்ற செலவைவிடக் குறைவாகச் செலவு செய்யும் மாநிலங்களுக்குக் கூடுதல் மானியங்கள் அளிப்பதை ஆறாவது நிதி ஆணைக் குழு தன்னுடைய கொள்கையாகக் கொண்டது, மாநிலங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வை மேலும் பெருக்குவதற்குக் காரணமாக அமையும்.

தன்னாலியன்ற வரை வசதிகளைத் திரட்டி, சிக்கனமாகவும், சீராகவும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ள நம்மைப் போன்ற மாநிலங்களுக்குக் கிடைத்த பரிசு, அந்தப் புள்ளி விவரங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வேறு சில மாநிலங்களுக்கு அதிக உதவி கொடுத்து நமக்குக் குறைத்துவிட்டதுதான்.

ஆண்டுத் திட்டம் 1974—75

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டுத் திட்டத்தின் அளவும் இன்னும் இறுதியாக வரையறுக்கப்படவில்லை. இது குறித்து, திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவரிடம் நான் பல முறை நேரில் பேசினேன். வரும் ஆண்டிலும், நடப்பு ஆண்டில் கொடுக்கும் அளவிலேயே உதவி கொடுப்பதாக மத்திய அரசு கூறியிருப்பதை நாம் எதிர்த்து வாதாடியுள்ளோம். மது விலக்கினாலும் பேரிழப்பு ஏற்படுகிறது. நிதிக் குழுவின் பரிந்துரைகளும் இழப்பை ஈடுகட்டுவதாக இல்லை. இந்த நிலையில் நடப்பு ஆண்டு உதவியே, வரும் ஆண்டுக்கும் மத்திய அரசு வழங்குவதாக இருந்தால் நடப்பாண்டைவிட வரும் ஆண்டு நம் திட்டத்தின் அளவு குறைந்து விடுவதை எப்படித் தடுக்க முடியும்?

நடப்பு ஆண்டில் 129 கோடி ரூபாய்க்கான திட்டம் செயலில் இருக்க, வரும் ஆண்டிற்கு 109-ல் இருந்து 118 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டுத் திட்டம் இருக்கலாம் என்று திட்டக் குழுவினர் பரிந்துரைத்தார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அளவு 25,000 கோடி ரூபாயாக இருக்க, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அளவு 53,411 கோடி ரூபாய் என்று தேசிய மட்டத்தில் கூறிவிட்டு, வரும் ஆண்டின் திட்டம் நடப்பு ஆண்டின் திட்டத்தைவிடக் குறைவாக அமைவது பொருத்தமாக இருக்காது என்று நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். இப்பேச்சு வார்த்தைகளின் பயனாகக் கூடுதல் உதவி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். ஆகவே, 1974—75-ல், 150 கோடி ரூபாய் அளவுள்ள திட்டத்தை நிறைவேற்ற இயலும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

திட்டமிடாத திட்டம்—
அது,
கற்பனையில் பெரிதாகவும்
காரியமாற்றுவதில் சிறிதாகவும்
வடிவெடுக்கும் நிலைமை—
அதிலும்
நிச்சயமற்ற தன்மை—

இத்தகு காரிருளுக்கிடையிலேயும் தமிழகத்தின் எதிர்கால நல் வாழ்வுக்கான ஒளிவிளக்கை அணைந்து போகாமல் காப்பாற்ற நமது சக்திக்கேற்ப, நிதி வசதிகளைத் திரட்டுவதிலும் நிர்வாக இயந்திரத்தை இயக்குவதிலும் முனைப்பாக இருந்து பல புதிய வளர்ச்சித் திட்டங்களை இயன்ற அளவு நிறைவேற்ற நமது அரசு முன் வந்துள்ளது. சமூக நல, பொரு

ளாதார மேம்பாட்டுக்குத் தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சார்ந்த ஒத்துழைப்பைப் பயன்படுத்திக் கொள்வதில் அரசு, கண்ணும் கருத்துமாயிருக்கும்.

வேளாண்மை

தமிழகத்தின் உயிர் நாடித் தொழிலாக விளங்குகின்ற வேளாண்மை வளர்ச்சிக்கு இந்த நிதி நிலை மதிப்பீட்டில் பல தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சிறு பாசனம், பெரும்பாசனம் குறித்த செலவு, வேளாண்மை விசையேற்றங்களினால் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பை நிறைவு செய்யக் கொடுக்கப்படும் உதவித் தொகைகள் தொடர்பான ஏனைய செலவினங்கள், வேளாண்மை இயக்குநரின் கீழ் இயங்கும் வேளாண்மைத் துறைச் செலவு உட்பட வேளாண்மை மேம்பாட்டிற்காக 1974—75-ல்



செய்யப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கம் சுமார் 68.81 கோடி ரூபாயாகும். இவற்றிற்கும் மேலாக, வேளாண்மை மேம்பாட்டிற்காக நிதி உதவும் நிறுவனங்களின் ஆதாரங்களையும் நாம் முழு அளவில் பயன்படுத்தி வருகிறோம். இந்த ஆதாரங்களைக் கொண்டு, 1974—75-ல், நீண்ட காலக் கடனாக 17 கோடி ரூபாயும், குறுகிய கால—நடுத்தர காலக் கடன்களாக 81 கோடி ரூபாயும் கொடுக்கப்படும். 1974--75 நிதி நிலைத் திட்ட மதிப்பீட்டில் குறிப்பாக அயன மண்டலப் (Tropical) பழ ஆராய்ச்சி நிலையம் ஒன்றினையும், குடுமியான் மலையில் உள்ள அண்ணா பண்ணையில் அரசு வேளாண்மைப் பயிற்சி நிறுவனம் ஒன்றினையும் நிறுவுதல், ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்துதல், மாநில அரசுப் பண்ணைக் கழகம் (State Farms Corporation) ஒன்றினை அமைத்தல் ஆகியவை அடங்கும். சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் அவற்றைச்சுற்றிலும் சாலை மேம்பாட்டிற்காக ஒரு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1974—75-ஆம் ஆண்டில், 67.93 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் உயர் விளைச்சல் தரும் பயிர் வகைகளைப் பயிரிடும் திட்டம் முனைந்து மேற்கொள்ளப்படும். பயிரிடு தேவைப் பொருள்களான உரங்கள், பூச்சி கொல்லி மருந்து ஆகியவை நமது தேவைக்கும் நாம் எதிர் பார்க்கும் அளவிற்கும் மிகவும் குறைவாகக் கிடைப்பது ஆளுநர் உரையிலேயே குறிப்பிடப்பட்டது. இந்நிலையில், உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் போன்ற பொருள்களின் விலை உயர்வு, பற்றாக்குறை ஆகியவற்றை நாம் சமாளிக்க வேண்டும். நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் உரங்களையேனும் மாநிலத்தில் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த நமக்கு அதிகாரமளிக்கும்படி மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம். உற்பத்தி செய்யப்படும் உரங்களின் பெரும் பகுதியினைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பைத் தனிப்பட்ட வியாபாரிகள் கையில் விட்டு வைத்துள்ள மத்திய அரசின் தற்போதைய கொள்கை, உரங்களைச் சரியான முறையில் பகிர்ந்தளிப்பதற்குத் தடையாக அமைந்துள்ளது. தேசிய அளவிலும் அனைத்து நாடுகள் அளவிலும் உள்ள உரப் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு, மத்திய அரசு இக் கொள்கையை மறு பரிசீலனை செய்து நாம் கோரிய படி உரப் பகிர்ந்தளிப்புக் கட்டுப்பாட்டு முறையைச் செயலுக்குக் கொண்டு வர

மாநில அரசுக்கு அதிகாரமளிப்பதில் இனியும் காலம் தாழ்த்துவது நல்லதல்ல.

கால்நடை வளர்ப்பும் மீனளமும்

கால்நடை வளர்ப்புத் துறைக்காக 5.26 கோடி ரூபாயும், மீனளத் துறைக்காக 5.32 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள கோழிப் பண்ணை வளர்ச்சிக் கழகம் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. படித்த இளைஞர்கள் சுமார் 500 பேருக்கு இக் கழகம் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

1974—75-ஆம் ஆண்டில் மேலும் 25 கால் நடை மருந்தகங்கள் தொடங்கப்படும். தமிழ் நாடு பால் வளர்ச்சிக் கழகம், பால் வளத்துறை இவற்றின் ஆதரவின் கீழ் இம் மாநிலத்தில் பால் பண்ணை வளர்ச்சி தொடர்ந்து விரிவு பெற்று வருகிறது. பால் வளப் பெருக்கத் திட்டம் (Operation Flood Programme) தொடர்ந்து செயல்படும். இதற்கென 1974—75-ஆம் ஆண்டில் மொத்தம் 3.80 கோடி ரூபாய் செலவிடப்படும்.



1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 69,000 லிட்டர் பால் கிடைத்ததற்கு மாறாக, இப்போது இத் திட்டத்தின் பயனாக 1,05,000 லிட்டர் பால் கிடைக்கிறது. மேலும், இத் திட்டத்தின் காரணமாக சுமார் 6,000 பேர்களுக்கு, பெரும்பாலும் கிராம மக்களுக்கு, கடன் உதவியும் அதன் தொடர்பாக வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மீனளத் துறையின் படகு கட்டும் பணி விரிவடைந்து வருகிறது. மீனளத் துறையின் வாணிகத் தன்மைகளை முழு அளவில் வளர்ச்சி பெறச் செய்து பயன்படுத்திக் கொள்வதற்காக மீனள வளர்ச்சி அமைப்பு ஒன்றை நிறுவ அரசு கருதியுள்ளது. படகு கட்டுதலும், வழங்குதலும் இத்துறையின் வேறு பல நடவடிக்கை

களும் இவ்வமைப்பின் பொறுப்பிலிருக்கும்.

பாசனம்

பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் 30.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாற்றுக் கால்வாய்களுக்கு மேம்பாடுகள் ;

வடஆர்க்காடு மாவட்டத்தில் சாத்தனூர் கால்வாய்க்கு நீர் விடும் அணைக்கட்டின் மேல் பகுதியில் வலது பக்கக் கால்வாய் வெட்டுதல் ;

மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில், ஆயக்குடி கிராமத்தில், வரதமா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் ;

கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம், வட்ட மலைக் கரை ஓடைக்குக் குறுக்கே நீர்த் தேக்கம் அமைத்தல்

கோவை மாவட்டம், பவானி வட்டத்தில் காக்கையனூர் கிராமத்தருகே வறட்டுப் பள்ளத்தின் குறுக்கே நீர்த் தேக்கம் அமைத்தல் ;

கோவை மாவட்டம், கோபி வட்டத்தில் குண்டேரி பள்ளத்தின் குறுக்கே நீர்த் தேக்கம் அமைத்தல் ;

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் குண்டாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் அமைத்தல்.

மேலும், சிறுபாசன சிறப்புத் திட்டங்களுக்காக நாம் 4.51 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். தற்பொழுது, இத் திட்டத்தின் கீழ் 725 வேலைகள் நடந்து வருகின்றன. இவை தவிர, பாசன வசதிகளின் பராமரிப்புக்கும் சீரமைப்புக்கும் 11.44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அரசு மேற்கொண்ட நீர்ப் பாசன வசதிகளில் பல, ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இவைகளைச் சீர்செய்து தரத்தை உயர்த்துவதன் மூலம், விவசாயிகளுக்குப் பயன் கிடைக்குமென்ற வகையில் இதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டி, செயல்பட, வரும் ஆண்டில் 50 இலட்சம் ரூபாய். தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிமராமத்து

வாய்க்கால்களில் குடிமராமத்து செய்யும் பணி ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படுகிற இடங்களிலெல்லாம் பல்லாண்டுகளாகச் சரிவர நடைபெறவில்லை என்பதை அரசு அறிவித்துள்ளது. இப்பணியை நிறைவேற்ற விவசாயிகள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையைக் கொடுக்கத் தயங்குவதும், ஏக்கருக்கு 2.5 ரூபாய் செலவு செய்யலாமென உயர் வரம்பு வைத்து வரையறை செய்திருப்பதால் அத் தொகை இப் பணியை மேற்கொள்ளுவதற்குப் போதாமல் இருப்பதும் இதற்குக் காரணங்களாகும். ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்குப் பயனளிக்கிற வாய்க்கால்களில் குடிமராமத்து செய்யும் பணியை 1971-லிருந்து தஞ்சை மாவட்டத்தில் பொதுப் பணித் துறை நேரடியாக நிறைவேற்றியுள்ளது. எல்லா மாவட்டங்களிலுமே இவ்வாறு செய்யலாமென அரசு இப்போது முடிவு செய்துள்ளது. இப்பணிக்காகும் செலவை அரசும் ஆயக்கட்டுதாரர்களும் 4 : 3 என்ற விகிதாசாரத்தில் பகிர்ந்து கொள்வர். இப் பணியைப் பொதுப் பணித் துறை நிறைவேற்றுவதற்கும் பயனடைபவர்களிடமிருந்து பங்குத் தொகை வசூலிப்பதற்கும் சட்டம் கொண்டு வரப்படும். இந்த ஏற்பாட்டின் கீழ், சுமார் 4,000 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால்களில் குடிமராமத்துப்பணியைப்பொதுப் பணித் துறை மேற்கொள்ளும். முக்கியமான இக் கால்வாய்களை உரிய தரத்துக்கு மேம்படுத்த இவ் வேற்பாடு பெரிதும் உதவும்.



நிலத்தின் கீழுள்ள நீர்வளம்

நிலத்தின் கீழுள்ள நீர் வளங்களை ஆராய்ந்து பயன்படுத்தும் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. 1970-ல் நிறுவப்பட்ட இந்தத் துறை ஆண்டுக்கு ஆண்டு விரிவடைந்து தேவைகளை நிறைவு செய்து வருகிறது. இந்தத் துறைக்குத் துணையாக, நிலத்தின் கீழுள்ள நீர்வளங்களை ஆராயும் நிறுவனம் (Ground-Water Research and Training Institute) ஒன்று அமைத்திடவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவிரிப் பிரச்சினை

தொன்றுதொட்டுத் தமிழகத்தின் நிலவளம் பெருக்கிட நீர் வளம் வழங்கிடும் பெரிய தோர் பாசன ஆதாரமான காவிரியாறு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி நமக்குத் தொடர்ந்து பயன் பட வேண்டும் என்ற நமது நியாயமான வாதத்திற்கு ஏற்ற முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நீண்ட காலமாகத் தாமதப்பட்டு வந்துள்ளது. தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநில முதல்வர்களின் கூட்டத்தின் தொடர்பாக மத்திய அரசு நிறுவிய தகவல் ஆராயும் குழு (Fact Finding Committee) தனது அறிக்கையை மத்திய பாசன-மின்விசை அமைச்சகத்திடம் அளித்துள்ளது. அந்த அறிக்கையின் மீது மத்திய அரசு விரைவில் முடிவு காணவேண்டுமென்று நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

மின்சாரம்

நம் மாநிலத்தின் நபர்வாரி மின்விசை பயன்படுத்தப்படும் அளவு 1967-ஆம் ஆண்டில் 98 யூனிட்டுகளாக இருந்தது. நடப்பு ஆண்டில் 133 யூனிட்டுகள் என்ற அளவை எட்டியுள்ளது. இது நமது தொழில் துறை, வேளாண்மைத்துறை, மக்களின் வசதிகளை நிறைவு செய்யும் பணி ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்தைக் காட்டுகிறது.

1969-ல் அறிவிக்கப்பட்ட எல்லா கிராமங்களுக்கும் மின்னொளி வழங்குதல் என்ற

தீவிரத் திட்டத்திற் கிணங்க, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 60,000 கிராமங்கள், குக்கிராமங்களில், 97 சதவீத கிராமங்களுக்கு மின்னொளி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மொத்தமுள்ள சுமார் 24,000 அரிசனக் குடியிருப்புகளில் இந்தத் திட்டத்தின்படி சுமார் 23,000 குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

இந்த அரிசனக் குடியிருப்புகளில் எரிகின்ற தெரு விளக்குகளுக்கு ஆகும் மின் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, தவிர்க்க முடியாத நிலையில் மின்சாரப் பற்றாக் குறை ஏற்பட்டதால் தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் மிகக் கடுமையான பிரச்சினைகளை நாம் சந்திக்க நேர்ந்தது இந்த அவைக்கு நன்கு தெரியும்.

மேட்டூரிலும் தூத்துக்குடியிலும் புதிய அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கும், நெய்வேலியில் 1,000 மெகாவாட் அனல் மின் விசை நிலையம் ஒன்றுக்கும் அனுமதி வழங்க வேண்டிய அவசியம் பற்றி நாம் மத்திய அரசிடம் பன்முறை வற்புறுத்திக் கூறி வந்துள்ளோம். தூத்துக்குடியில் அனல் மின்விசை நிலையம் நிறுவ மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனினும், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கும் அத்துடன் இணைந்த மின்விசை உற்பத்தி நிலையம் நிறுவுவதற்கும் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. மேட்டூரிலும் ஓர் அனல் மின்விசை நிலையம் நிறுவிட வேண்டும் என்கின்ற நமது வேண்டுகோளும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேற்கு மலைத் தொடர்களிலும், ஒகேனக்கலிலும் நிறுவப்பட வேண்டிய நீர் மின்விசை உற்பத்தி நிலையங்களையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தன் அவசர அவசியத்தையும் நாம் பன்முறை எடுத்துக் கூறியுள்ளோம்.

நமது அன்றாட மின்விசைத் தேவை சராசரியாக 235 இலட்சம் யூனிட்டுகளாகும். அவற்றில் 50 சத வீதம் தொழில் துறைக்கும் 24 சத வீதம் வேளாண்மைத் துறைக்

கும் மீதமுள்ள 25 சதவீதம் மற்ற உபயோகங்களுக்கும் செலவிடப்படுகிறது. மாநிலத்தில் நெய்வேலி உட்பட மின் விசை உற்பத்தி அளவு 196 இலட்சம் யூனிட்டுகளாகும். எனவே, 39 இலட்சம் யூனிட்டுகள் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்தப் பற்றாக்குறையை அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை விலைக்குப் பெற்று நிறைவு செய்தாக வேண்டியுள்ளது. அண்டை மாநிலங்களிலும் மின்விசைத் தேவைகள் நாளுக்கு நாள் உயர்ந்து செல்கின்றன. அதன் விளைவாக, உற்பத்தி அளவுக்கும் தேவைப்படும் அளவுக்கும் வேறுபாடு விரிவடைந்து கொண்டே செல்கிறது. இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகும், மத்திய அரசு நமது மின்சாரத் தேவையின் அளவைக் குறைவாக மதிப்பிட்டு, நமது திட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதில் காலம் தாழ்த்துவது எதிர்காலத்தில் நமது மாநிலப் பொருளாதார வளர்ச்சியில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முடிந்தவரையில் நமது மாநிலத்து மின்சாரப் பற்றாக் குறையை ஈடுகட்டுவதற்கு அண்டை மாநிலங்களில் கிடைக்கின்ற அளவுக்கு மின்சாரத்தை வாங்கிப் பயன்படுத்த முயற்சி செய்யும்போது அதற்கு அதிக விலை கொடுத்தாக வேண்டியிருக்கிறது. 1969-ஆம் ஆண்டில் கேரளாவிலிருந்து யூனிட் ஒன்றுக்கு

ஐந்து பைசா என்று வாங்கிக் கொண்டிருந்ததற்கு மாறாக, இப்போது யூனிட் ஒன்றுக்கு எட்டுப் பைசா வீதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைப் போலவே, நெய்வேலியிலிருந்து நமக்குக் கிடைக்கும் மின்சாரத்திற்கு 1969-ல் யூனிட் ஒன்றுக்கு 5.9 பைசா என்று வாங்கிக் கொண்டிருந்ததற்கு மாறாக, இப்போது ஒரு பகுதி மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 8.48 பைசா வீதமும், இன்னொரு பகுதி மின்சாரத்திற்கு இதைவிட இன்னும் அதிகமாகவும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி வாங்கப்படுகிற மின்சாரத்தையும், நாம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தையும் உயர் அழுத்த (High Tension) மின்சாரத்திலிருந்து குறைந்த அழுத்த (Low Tension) மின்சாரமாக மாற்றிப் பயன்படுத்தும் கிராமப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும்போது 20 பைசாவுக்கு மேலாக அடக்கச் செலவாகிறது. இந்த நிலையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது வேளாண்மைத் துறைக்கு நாம் யூனிட் ஒன்றுக்கு மிகவும் குறைந்த கட்டணம் தான் வசூலித்து வருகிறோம். எனவே, இதனால் ஏற்படும் இழப்பை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ளத் தமிழ்நாடு மின் வாரியம் உபரி கட்டண (Surcharge) உயர்வுகள் சிலவற்றை அறிவித்துள்ளது. வேளாண்மைத்துறை, வீட்டு விளக்கு, வீதி விளக்கு ஆகியவற்றுக்கு இந்த உபரிக் கட்டண உயர்வு கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கைத்தறி



கைத்தறி நெசவாளர் துயர் தணிப்புக்காக 1974-75-ல் 2.01 கோடி ரூபாய்க்கு அரசு வகை செய்துள்ளது. இது தவிர, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி செய்து வருகிறோம். தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை 1972-73-ல் 9.17 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாறாக, நடப்பு ஆண்டில் 12 கோடி ரூபாயாகப் பெருகியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். வரும் ஆண்டில், இது மேலும் பெருக வழிவகைகள் செய்துள்ளோம். நடப்பு ஆண்டில் போதுமான நூல் கிடைக்காததால் அவதிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணமாகத் தலைக்கு ரூபாய்

100 வீதம் வட்டியில்லாக் கடனாகச் சுமார் 1 கோடி ரூபாய் அரசு வழங்கியுள்ளது. இந்த ஒரு கோடி ரூபாய்க் கடனையும் நெசவாளர் வேண்டுகோளுக்கிணங்க அரசு ரத்து செய்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டில் உற்பத்தியாகும் பருத்தி நூலில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதியைத் தமிழ்நாட்டிலுள்ள நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்கின்றன. நாம் உற்பத்தி செய்யும் இந்த நூலை நமது மாநிலத்து நெசவாளர்களுக்கு வழங்கும் அதிகாரம் மைய அரசின் நூல் துணித் தொழில் ஆணையாளரிடமே உள்ளது. கூட்டுறவுத் துறையில் உள்ள நூற்பாலைகளின் மூலமும் அர்சின்கீழ் உள்ள நூற்பாலைகளின் மூலமும் கூட்டுறவுத் துறைகளிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் தேவைகளை நாம் நிறைவு செய்ய இயலும் என்று நடப்பாண்டில் அனுபவத்தில் பார்த்தோம். ஆனால், கூட்டுறவுத் துறைக்கு வெளியேயுள்ள நெசவாளர்களின் தேவையை முழுமையாக நிறைவு செய்வதுதான் பெரும் பிரச்சினையாக உள்ளது.

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளுக்கு நிரந்தரமான பரிகாரம் காண்பதுதான் நம்முடைய கொள்கை.

அந்த அடிப்படையில் திரு. சந்தானம் குழுவினர் சில நல்ல ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை நியாயமான விலையில் ஆலைகளிடமிருந்து வாங்கி வினியோகிப்பது—கூட்டுறவுக்கு அப்பாற்பட்ட நெசவாளர்களையும், நூல் வழங்குவதற்குக் கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வருவது—கைத்தறிக்கு என்று வேட்டி, துண்டு, சேலை, துப்பட்டி. போன்ற இரகங்களைச் சட்ட ரீதியாக ஒதுக்குவது — அனுமதி இல்லாத விசைத்தறிகளை வளர விடாது தடுப்பது—என்ற பரிந்துரைகள் சந்தானம் குழுவினரால் தரப்பட்டுள்ளன.

இதை அரசு ஏற்றுச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது சம்பந்தமாக ஏற்கெனவே இந்தியத் தலைமை அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

தொழில்கள்



ஏற்றுமதி, இறக்குமதி, நிதிக் கொள்கை, தொழில் உரிமம் வழங்கும் முறை, நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் அணுகு முறை போன்றவைகள் மத்திய அரசின் ஆதிக்கத்தில் உள்ள இந்தச் சூழலில் நமது இடைவிடாத பெரு முயற்சிகளின் காரணமாகப் பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும், தனியார் துறையிலும், தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இயன்றவரையில் செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் பல்வேறு பணிகளில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. ஆலங்குளத்திலுள்ள பொதுத் துறையைச் சேர்ந்த சிமெண்ட் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு நான்கு இலட்சம் டன் என்ற தனது உற்பத்தித் திறனை, ஆண்டொன்றுக்கு ஏழு இலட்டம் டன் என்று அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தற்போது மேற்கொண்டு வருகிறது. அரக்கோணத்திலுள்ள எஃகு ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 50,000 டன் என்பதிலிருந்து 1,00,000 டன்னாகப் பெருக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் 85 கோடி ரூபாய் அளவில் உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டு விரைவில் உர உற்பத்தி தொடங்க இருக்கிறது. மின் அணுக் கருவிகள் (Electronic Instruments) காஸ்டிக் சோடா, மீன்பிடி இழு படகுகள் (Fishing Trawlers), சாயம் போன்ற ரசாயனப் பொருட்கள் (Dyes and Chemicals), வெப்பந்தாங்கிக் கற்கள் (Refractories) முதலிய உற்பத்துககான துடடங்களுக்குக் கூட்டுத் துறையில் அனுமதிக் கடிதம் பெறப்பட்டு, பல்வேறு கட்டங்களில் பணிகள் நடந்துவருகின்றன.

1967-69-ல் நேர்ந்த அனைத்திந்திய தொழில் மந்தத்தால் நலிவுற்ற நிலையிலிருந்த தொழிற்கூடங்கள் பலவும் மாநில அரசின் உதவியால் புத்துயிர் பெற்றுள்ளதை உறுப்பினர் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பர். அவைகள், தற்போது அரசின் உதவி காரணமாக, இக்கட்டான நிலையைக் கடந்து, முன்னேற்ற நிலைக்கு வந்துவிட்டன. கோவையிலுள்ள டெக்ஸ்டூல் கம்பெனி தற்போது ஆண்டொன்றுக்குச் சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களைத் தயாரித்து வருகிறது. அதே போல், இதுவரை மூடிக் கிடந்த தருமபுரி மாவட்ட லாஸ்கோ கலவை எஃகு உற்பத்தி நிறுவனம், மாநில அரசின் முயற்சிகளால் புத்துயிர் பெற்று, தற்போது மிகவும் மதிப்புமிகுந்த கலவை எஃகுப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. நிதி வசதி இடர்ப்பாடுகளாலும், உற்பத்தியான பொருள்களுக்குச் சந்தையின்மையாலும் மூட நேரிட்ட சக்தி பைப் நிறுவனமும், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனமும் ஏற்கெனவே அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் நல்ல நிர்வாக வல்லுநர்களை நியமிப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. மேலும், அவைகளுக்குத் தேவையான கடனுக்கு உறுதியளிப்பதன் மூலமும் வேண்டிய நிதி வசதி அளிப்பதன் மூலமும் நாம் அத்தொழில்களைச் சீர்படுத்துவதற்கு உதவிகளை இதுவரை செய்துள்ளோம். அடுத்த கட்டமாக, மேற்கூறப்பட்டுள்ள கோவை டெக்ஸ்டூல் கம்பெனி, தர்மபுரி லாஸ்கோ நிறுவனம், சக்தி பைப் நிறுவ

னம், சதர்ன் ஸ்ட்ரக்சுரஸ்ல் நிறுவனம் ஆகிய நான்கும் மத்திய அரசின் அனுமதியுடன் நாட்டுடைமையாக்கப்படு மென்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசும் விரைவில் இதற்கு அனுமதி அளிக்கு மென்று எதிர்பார்க்கிறேன்.

நொடித்த நிலையிலிருந்த 13 பஞ்சாலைகளை அரசு மேற் கொண்டு, மாநிலப் பஞ்சாலை—துணித் தொழில் கழகத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. சுமார் 10,000 தொழிலாளர் களைக் கொண்ட, இந்தப் பஞ் சாலைகள் திறம்பட இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளின் நிதி நிலையையும் நிர்வாகத்தை யும் சீரமைப்பதில், இம் மாநில அரசும், மாநிலப் பஞ்சாலைக் கழகமும் பெரும் பங்கு கொண் டுள்ளன. தற்போது மத்திய அரசு நாம் எடுத்து நடத்தி வருகிற இந்த 13 பஞ்சாலை களை நாட்டுடைமையாக்க எண்ணியிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தக் கொள்கை யை நாம் வரவேற்பதோடு இந்த 13 பஞ்சாலைகளும் நாட் டுடைமை ஆக்கப்பட்டு அவை மாநில அரசின் உரிமைப்பாட் டுக்குக் கீழ் வர வேண்டுமென் பதை நான் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். நொடித்துப் போன இந்த ஆலை களைத் திறமையான நிர்வாகத் தால் மேம்பாடடையச் செய் தது மாநில அரசு தான் என் பதையும் நினைவூட்டுவது என் கருத்துக்கு வலிமை சேர்ப்ப தாகும்.

சிறு தொழில் துறைகளில் தொழில் வளர்ச்சியை ஊக்கு விக்கும் நமது அரசின் கொள் கை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) தனது நடவடிக்கைகளை விரிவு படுத்தியுள்ளது. 1974-75-ல் எட்டுக் கோடி ரூபாய்க்கான வரவு-செலவுத் திட்டத்தை அது கொண்டிருக்கும். தமிழ் நாடு அரசு தொழில் ஊக்கக் கழகம் (சிப்காட்) இதுவரை மொத்தம் 42.67 கோடி ரூபாய் மூலதனச் செலவில் 153 தொழிற்கூடங்களுக்கு உதவி செய்துள்ளது. இராணிப் பேட்டையில்ஏற்படுத்தப்பட்ட தொழில் வளர் மையம் நன் முறையில் மேம்பாடடைந்துள் ளது.

இது போல் பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர் மையம் மேம்படுத்தும்



திட்டம் மேற்கொள்ளப் பட விருக்கிறது. இதோடு சேலத் தில் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற் பேட்டையையும், சென்னைக்கு அருகே கடற்கரைப் பகுதியில் மின்சார மின்னணுப் பொருட் களைத் தயாரிப்பதற்கான சீர் செய்யப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டை யையும் உருவாக்கும் பணி யினைத் தொழில் துறை தொடங்கியுள்ளது. தூத்துக் குடி, இராமநாதபுரம் கடற் கரைப் பகுதியில் உப்பை அடிப் படையாகக் கொண்டு பிற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவுவதற் கான திட்டமும் உருவாக்கப் பட்டு வருகிறது.

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த வரையில் இனி மேல் தனியார் துறையில் தொடங்க அனுமதிப்பதில்லை என்றும், பொதுத் துறையில் கரும்பு உற்பத்தியாளர்களை மட்டும் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு தொடங் கப்படுவது என்றும் அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக் கிறது. இவற்றிற்கான இயந் திரங்களை வாங்குவதற்கு முன் பணமாக 1974-75 வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1.5 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்துள்ளோம்.

கரும்பு பயிரிடும் நிலங்க ளுக்கு ஏற்கெனவே கொடுக்கப் பட்டிருந்த விதிவிலக்கை 1971 -ஆம் ஆண்டு நாம் கொண்டு வந்த நில உச்ச வரம்புச் சட் டத்தின்படி ரத்து செய்ததன் அடிப்படையில், திரு ஆரூ ரான் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமாக இருந்த 3,421 ஏக்கரா நிலத்தை அரசு எடுத்துக் கொண்டு ''தமிழ் நாடு கரும்புப் பண்ணைக் கழகம்'' எனப்படும் தனியான நிறுவனம் ஒன்றை அமைத்துள் ளது. அந்த ஆலைக்கு ஏற் கெனவே குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்த 3,097 ஏக்கராவும் இந்த நிறுவனத்



தின் கீழ் கொண்டு வரப்பட் டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்காக மாநில அளவில் நாம் ஏராள மான திட்டங்களைத் தொடங்கி நடத்தி வருகிறோமென்றாலும், இன்னும் பல திட்டங்கள் இந்திய அரசின் இசைவை எதிர்நோக்கிக் காத்துக்கொண் டிருக்க வேண்டியுள்ளன. நாம் தொடங்கக் கருதியுள்ள புதிய திட்டங்களான தூத்துக் குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கடலூரில் புதிய உரத் தொழிற்சாலை, மணலியில் பெட்ரோ-கெமிகல் தொழிற் சாலை, நைலான் தொழிற்சாலை, பற்றவைப்பு இல்லாத குழாய் கள் (Seamless pipes) தயா ரிக்கும் தொழிற்சாலை போன்ற இன்னும் பல, இந்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்து நிற்கின்றன. மேதகு ஆளுநர் அவர்களின் பேருரையில் கூட மத்திய அரசுத் துறைத் தொழில் திட்டங்களில் தமிழ் நாட்டுக்கு மிகச் சிறிய பங்கே அளிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பாதுகாப்புக் கண்ணோட்டத் தில் பார்த்தாலும், பாது காப்புத் துறையின் உற்பத்தித் தொழில்களை அமைப்பதற்குத் தமிழ்நாடு மிகச் சிறந்த இட மாகும்என்று நாம் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளோம். பாது காப்பு உற்பத்தித் துறையில் புதிய தொழிற்கூடங்களை நமது மாநிலத்தில் அமைக்க வேண்டுமென்று நாம் விடுத்து உள்ள வேண்டுகோள்களை மத்திய அரசு நமக்குப் பயன் தரும் வகையில் ஏற்றுக்கொள் ளும் என உறுதியாய் நம்பு கிறோம்.

மக்கள் நல்வாழ்வு

மருத்துவம், குடும்ப நலத் திட்டப் பணிகளுக்கான கட்டி டங்கள் கட்டுவதற்காக ஒதுக் கப்பட்ட 4.2 கோடி ரூபாயை யும் சேர்த்து, மருத்துவ, மக்கள் நல்வாழ்வுப் பணி

களுக்கு 1974—75-ல் 48.34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் தொடர்பாக 1974—75-ல் மேலும் 40 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மாநில அரசு நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும். 1972 முதல் மாநில அரசின் நிர்வாகத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ள இத்தகைய மருந்தகங்களின் எண்ணிக்கை மொத்தம் 102 ஆகும். 1974-75-ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளில் சில—

திருப்பூரில் 90 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ;

மதுரையில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ;

வேலூரில் பொன் விழா கட்டிடத் தொகுதி ;

இராஜபாளையத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஆகியவையாகும்.

ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கூடுதலாக 160 படுக்கைகள் கொண்ட வார்டுகள் ;

மேலும், காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ள அண்ணா புற்றுநோய் மருத்துவ நிறுவனத்தின் முதற் கட்டப்பணிகளுக்காக 33.92 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது.

வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் வட்டத்தில் பிற மருத்துவ மனைகளிலும் எக்ஸ்-கதிர் (X-Ray) வசதிகளை மேம்படுத்துவதற்கும் வகை செய்துள்ளோம். ஆறு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பல்வேறு மருத்துவ வல்லுநர்களை (Specialists) நியமிப்பது, செவிலியர்கள் வேலையின்மையைக் குறைப்பதற்கும் தற்போது வேலையில் உள்ள செவிலியர்களின் வேலைப் பளுவைக் குறைப்பதற்குமாக 200 செவிலியர்களை நியமிப்பது, தருமபுரி, நாகப்பட்டினம், கும்பகோணம் மருத்துவ மனைகளுக்குக் கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவது ஆகிய பணிகளும் புதிய திட்டங்களில் அடங்கும். சென்னை அரசினர் பொது மருத்துவ மனைக்கு 56 இலட்சம் ரூபாய் செலவில் பெருந் திட்டம் ஒன்றை மேற்கொண்டு, அதற்காக வரும் ஆண்டில் 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வருகிற ஆண்டில், கூடுதலாக 150 உதவி மருத்துவர்களின் பதவிகளும் ஏற்படுத்தப்படும். வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், பிற மருத்துவ மனைகளிலுமாக இருபது சித்த மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்திய முறை மருத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சென்னையில் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்கவும் நாம் கருதியுள்ளோம்.



1972-ல் தொடங்கப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு மருத்துவத் துறை தனது பணியைத் தொடர்ந்து நன்கு செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் இதுவரை 62,265 பேருக்கு இலவச மருத்துவச் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கப்பட்டுள்ளதோடு, இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் தரப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு குறித்த திட்டங்களுக்காக மத்திய அரசு கொடுத்து வந்த உதவி, பெரும் அளவு குறைந்துவிட்டாலும், நம் மாநில நிதியிலிருந்து கூடுதலாக நிதி ஒதுக்கி 6.51 கோடி அளவுக்கு ஒதுக்கீட்டினைக் கொண்டு வந்துள்ளோம்.

கல்வி



1956-57-ஆம் ஆண்டில் கல்வி வளர்ச்சிக்காக இம் மாநிலத்தில் செலவு செய்யப்பட்ட 10.59 கோடி ரூபாய்க்கு எதிராக, 1974-75ஆம் ஆண்டில் 110.15 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருப்பது, கல்வியின் வளர்ச்சியில் தமிழக அரசு கொண்டுள்ள அளவற்ற ஆர்வத்துக்குச் சான்றாகும். நம் மாநிலத்தில் 6 முதல் 11 வயது வரையுள்ளோரின் எண்ணிக்கை 60.24 இலட்சம். இதில் 54.38 இலட்சம் மாணவர்கள் பள்ளியில் பயின்று வருகின்றனர்.



இது 90.2 சத வீதமாக அமைகிறது. அதுபோல 11—14 வயது எல்லைக்கு உட்பட்டவர்களில், 52.3 சத விகிதமும் 14—17 வயது வரம்புக்கு உட்பட்டவர்களில் 33 சத விகிதமும் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். இந்த சதவீதத்தை மேலும் உயர்த்தி இப்பொழுது பல காரணங்களால் பள்ளிகளில் சேர இயலாத மாணவ மாணவியரையும் பள்ளிக்கு ஈர்ப்பதே, அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் நம்முடைய தலையாய குறிக்கோளாக இருக்கும்.

பள்ளி வகுப்புகளில் பயிலும் 76 இலட்சம் மாணவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்க 2.39 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பொழுது சராசரியாக 34 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை நம் மாநிலத்தில் ஏற்பட்டிருப்பது, கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்ட அனைவருக்கும் நிறைவு அளிக்கக்கூடியதாகும்.

வழக்கமாக ஒவ்வோர் ஆண்டும் நியமிக்கப்படும் கூடுதல் ஆசிரியர்களுக்கும் மேலாக 1973—74-ல் ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 10 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஆசிரியர்களுக்குப் பாதி ஊதியம் தான் அளிக்க வேண்டுமென்று மைய அரசு நிபந்தனையிட்டுள்ள போதிலும், எஞ்சிய தொகையை மாநில அரசு தன்னுடைய வருவாயிலிருந்து ஈடு செய்ய முன் வந்து, இந்த 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் முழுச் சம்பள விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளது, கல்வியின் தரத்தை உயர்த்தப் பெரிதும் துணை செய்யும் என்று நம்பப்படுகிறது.

இதுவரை கல்வி பயில வாய்ப்புப் பெறாத சமூகத்தின்



அடித்தளத்திலுள்ள குழந்தைகளுக்கும் பள்ளிக் கல்வி வாய்ப்பு கிட்டுவதற்கான சிறப்பான சாதனையில் தமிழகம் வெற்றி கண்டுள்ளது. இனி நம்மை எதிர் நோக்கியுள்ள தலையாய பணி, கல்வியின் தரத்தை உயர்த்துவதேயாகும். இது அரசினால் மட்டும் சாதிக்கக் கூடியதன்று. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வித் துறை நிபுணர்கள் ஆகியோர் ஒருமித்து மேற்கொள்ளும் முயற்சிகளினால்தான், நாம் கல்வியின் தரத்தை உயர்த்த முடியும். அரசைப் பொறுத்த வரையிலே, பாடப் பயிற்சித் திட்டங்களில் மாறுதல்கள் செய்வதற்கும், முற்போக்குப் பயிற்சி முறைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் வளர்ச்சியில் முனைந்த கவனம் செலுத்த மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு தனிப் பகுதியாக அறிவியல் வளர்ச்சி நிலையம் ஒன்று அமைக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் ஆசிரியர்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவதற்கு வகை செய்யும் பொருட்டு, ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் சென்ற சில ஆண்டுகளில் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் வேலை நிலைமைகளில் முன்னேற்றம் காணப் பற்பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. கைத்தொழில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, அவர்களில் 573 பேருக்கு முழு நேர வேலையும் அதற்கான ஊதியமும் 1973—74 முதல் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிகளில் பணியாற்றும் 2.39 இலட்சம் ஆசிரியர்களில் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளில் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆசிரியர்களுக்குச் சட்ட பூர்வமான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. வேலை உத்தரவாதமளித்து இந்த ஆசிரியர்களுக்கு நியாயமானஎல்லாப் பாதுகாப்புக்களையும் அளிக்கும் வகையிலும், அதே சமயத்தில் தனியார் பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகளின் தொண்டுக்கு இடையூறாக அமையாத வகையிலும், தனியார் பள்ளிகள் சீரமைப்புச் சட்ட முன் வரைவு சென்ற ஆண்டு சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் உள்ள 178 கல்லூரிகளில் 51 அரசின் நேரடிப் பொறுப்பில் நடத்தப்படுகின்றன. 127 தனியார் கல்லூரிகள். தனியார் கல்லூரிகளுக்கு அரசு வழங்கும் மானிய அடிப்படைகளைத் தெளிவுபடுத்தித் கோர்வையாக்கச் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சி, கல்லூரி நிர்வாகங்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

இந்த 178 கல்லூரிகளில் 104 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 74 கல்லூரிகள் மதுரைப் பல்கலைப் கழகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு பல்கலைக் கழகத்துடன் 30 அல்லது 40-க்கு மேற்படாத கல்லூரிகள் இணைந்திருப்பதே கல்லூரிக் கல்வியின் வளர்ச்சிக்குச் சாலச் சிறந்தது என்பது நிபுணர்களின் கருத்து. இந்த அடிப்படையில் தமிழகத்தில் இப்பொழுது இயங்கி வரும் 3 பல்கலைக் கழகங்களுக்கு மேலாக இன்னும் ஓரிரண்டு பல்கலைக் கழகங்களையாவது அமைப்பது அவசியமாகும். புதிதாகத் திறக்கப்படும் பல்கலைக் கழகங்களுக்கு மைய அரசினால் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக மானியக் குழுவின் ஒப்புதல் பெற வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. மிகப் பல பல்கலைக் கழகங்கள் ஒரு சில மாநிலங்களில் அமைந்துள்ள நிலையையும், தமிழகத்தில் மூன்றே மூன்று பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள நிலையையும் மனத்திற் கொண்டு, தமிழகத்தில் புதிய பல்கலைக் கழகங்கள் அமைக்கப் பல்கலைக் கழக மானியக் குழு அனுமதி வழங்குமென்று அரசு நம்புகிறது.

இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்கள், பல துறைகளையும் ஒருங்கிணைத்து, பொதுக் கல்வி வளர்ச்சியில் நாட்டம் செலுத்த வேண்டியிருப்பதால், பொறியியல் கல்வியிலும் தொழில் நுட்பக் கல்வியிலும் அவை சிறப்பான கவனம் செலுத்த இயலாமல் போகின்றது என்பதை எடுத்துக் காட்டி, தமிழ் நாட்டிலுள்ள பொறியியல் கல்லூரிகள் அனைத்தையும் சேர்த்துப் பொறியியல் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்க வேண்டுமென்று சென்ற சில ஆண்டுகளாக இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. இக் கருத்தைப் பல்கலைக் கழக மானியக் குழு அமைத்த பல்வேறு நிபுணர் குழுக்கள் வந்து பரிசீலித்துச் சென்ற பின்பும், மைய அரசிடமிருந்து இந்தப் பல்கலைக் கழகத்தைத் தொடங்க இது வரை அனுமதி கிடைக்காதது நமக்கு மிகுந்த வருத்தத்தையும் மனச் சோர்வையும் அளிக்கின்றது. நாம் இந்த முயற்சியை மேற்கொண்டதற்கு நீண்ட காலத்துக்குப் பின்பு, இம்முயற்சியில் கவனம் செலுத்த முற்பட்ட அண்டை மாநிலம் ஒன்று, மைய அரசின் அனுமதி பெறாமலேயே, தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை நிறுவி, இப்பொழுது இயங்கி வருவதையும் நாம் காணும்போது, விதிமுறைகளைப் பின்பற்றிச் செல்ல வேண்டுமென்று உறுதியாய் இருப்பவர்களுக்குத் தான் தேவையற்ற பல இடைஞ்சல்களும் இடுக்கண்களும் ஏற்படுத்தப்படுகின்றனவோ என்று அஞ்சும் நிலை உருவாகிறது. இந்நிலைக்கு விரைவில் பரிகாரம் தேடி, தமிழகத்தில் 1974 — 75-ஆம் ஆண்டிலிருந்தே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்கு, மைய அரசு இசைவு தருமென்று எதிர்பார்க்கின்றேன்.

நம்முடைய மாநிலத்திட்டக் குழு அடுத்த 12 ஆண்டுகளில் கல்வியின் வளர்ச்சி எவ்வகையில் அமைய வேண்டும் என்ப

(தொடர்ச்சி 54-ஆம் பக்கம்)

உங்கள் உயர்வுக்கு வசதியான வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளுங்கள்

கரகம் — தமிழ்நாட்டின் பிரபல கிராமிய நடனம்

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

ரூ.1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

64-வது குலுக்கல் நாள்:

28-3-1974

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்



கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது!

விலங்குக் காட்சிச் சாலைக்குப் போகிறோம். நான்கு பக்கக் கம்பிகளுக்கிடையே அடைபட்டிருக்கும் விலங்குகளை வேடிக்கை பார்க்கிறோம். அப்போதெல்லாம் 'அந்த விலங்குகள் சுதந்தரமாகத் திரியும் போது பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்று நிச்சயம் நமக்கு எண்ணத் தோன்றும்.

அந்த எண்ணம் நிறைவேறுகின்ற வகையில், இன்று தமிழகத்தின் பல்வேறு இடங்களில் விலங்கு உய்விடங்கள் (சரணாலயம்) உள்ளன.

முன்பெல்லாம் காட்டுப்பக்கம் போகவே அஞ்சுவார்கள். ஆனால், இன்று காட்டுக்குப் போகக் கதி கலங்கத் தேவையில்லை ; புலியைப் பார்த்துக் கிலி அடையவும் தேவையில்லை. புலியென்ன கரடி, சிங்கம், யானை முதலான கொடிய விலங்குகளைக் கூட நேரில் கண்டு மகிழலாம். ஏன், யானை மீது ராஜா மாதிரி உட்கார்ந்து கொண்டு உலாக் கூட வரலாமே!

இதெல்லாம் எப்படி முடியும்? சரணாலயத்தில் சரணடைந்தால் முடியாதா என்ன?

தமிழ் நாட்டில் பல்வேறு வன விலங்குகளும், பன்னிறப் பறவைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பறவைகளையும், வன விலங்குகளையும் நேரில் கண்டு மகிழ்ந்திட, தமிழகத்தில் ஆறு உய்விடங்கள் உள்ளன. அவை : 1. முதுமலை வனவிலங்கு உய்விடம், 2. முண்டந்துறை புலிகள் உய்விடம், 3. கோடிக்கரை வன விலங்கு உய்விடம், 4. கிண்டி மான் பூங்கா, 5. வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம், 6. ஆனமலை வனவிலங்கு உய்விடம்.

இவற்றில், முண்டந்துறை புலிகள் உய்விடம்தான் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில் உருவாக்கப் பெற்றிருக்கிறது என்பதை நாம் பெருமையோடு சொல்ல வேண்டும்.

இந்த உய்விடம் திருநெல்வேலி மாவட்டம் முண்டந்துறையில் அதாவது அம்பாசமுத்திரத்திலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்கே புலி தவிர சிறுத்தை, ஓநாய், சாம்பூர் காட்டுப் பன்றி, கருங்குரங்கு ஆகிய வனவிலங்குகளும் உள்ளன. திருநெல்வேலி மாவட்ட வடக்கு, கோட்டங்களைச் சார்ந்த சிங்கம்பட்டி மற்றும் பாபநாசம் போன்ற இடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள காடுகளில் சுமார் 200 சதுர மைல்கள் வரை இந்த உய்விடம் பரவியுள்ளது.

அட்டை சொல்லும் கட்டுரை

புலி இன்று இந்தியாவின் தேசிய விலங்கு என்பது நமக்குத் தெரியும். 1967-ஆம் ஆண்டு முதல், சிங்கம் இந்தப் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருந்தது. இந்தியாவில் இப்போது 177 சிங்கங்கள்தான் உள்ளன. ஆனால் புலிகளின் எண்ணிக்கையோ 2,000. நமது நாட்டில் 10 மாநிலங்களில் புலிகள் உள்ளன.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியக்காடுகளிலுள்ள விலங்குகளில் புலி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்து வந்துள்ளது. மறைந்து வரும் இந்த அரிய வனவிலங்கை அழிவிலிருந்து காப்பாற்றி பராமரிப்பதற்காகவே இதனைத் தேசிய விலங்காகத் தெரிந்தெடுத்துப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.

புலி, அறிவியல், பொருளாதாரம், கலாசாரம், உயிர் வாழ்க்கைச் சூழ்நிலை போன்ற பல துறைகளிலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதும், கண்கவர் வனப்புடன் திகழ்வதும் அதை இந்த இடத்துக்கு உயர்த்தியிருக்கிறது என்று நாம் கூறலாம்.

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பார்கள். அப்

படியானால் அதன் இரையாக எது இருக்கும்?

அடித்துத் தின்பதற்கு ஏதுவாகப் பெரிய விலங்குகள், தூங்குவதற்கு நிழலுடன் கூடிய வசதியான இடம், தாகத்தைத் தணித்துக் கொள்ள நீர் இவை மூன்றும் புலிக்குத் தேவை!

புலி எப்போது வேட்டையாடும்?

மனிதன் பகலில் வேட்டையாடினால், சாதாரணமாகப் புலி இரவில் வேட்டையாடுகிறது. மப்பும் மந்தாரமாகவோ, குளிர்ந்தோ இருக்கும் பகல் நேரங்களிலும் புலி இரை தேடுவதுண்டு. யானை, காட்டெருது, எருமை போன்ற பல வகை விலங்குகளை இது வேட்டையாடும். மான், நீல எருது, காட்டுப் பன்றி, கரடி, முள்ளம்பன்றி ஆகியவற்றை இது அடித்துக் கொல்லும்.

சில சமயங்களில் இரைக்கு வன விலங்கு கிடைக்காவிட்டால், புலிக்கு உணவு நாம் தான்! ஆம், கால்நடைகளையும், மனிதர்களையும் தம் உணவு வகைகளாக அவ்வப்போது இது சேர்த்துக் கொள்வதுண்டு!

கனமான உடல் இருந்தாலும் புலி துடிப்புடன் இருக்கிறது. புலி நீரைக் கண்டு அஞ்சுவதில்லை. எளிதில் நீந்திவிடுகிறது. புலிக்குச் சொந்தம் கொண்டாடும் தன்மை அதிகம். அது வாழும் எல்லைக்குள் எவரையும் சாதாரணமாக அண்டவிடுவதில்லை. (சர்க்கஸ் புலி இதற்கு விதிவிலக்கு!)

புலியின் 'இல்லற வாழ்க்கை'யைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

ஆண்டு முழுவதும் எந்தப் பருவத்திலும் புலி உடலுறவு கொள்கிறது என்றாலும், பொதுவாக மழைக் காலத்திற்குப் பிறகுதான் இது அதிகம். பிப்ரவரி முதல் மே மாதம் வரையிலான காலத்தில் குட்டிகள் பிறக்கின்றன. கருவுற்றவுடன் பெண் புலி ஆண் புலியை அருகில் வரவிடுவதில்லை. சினையான பிறகு 105 லிருந்து 110 நாட்களில் குட்டிகள் பிறக்கின்றன. சாதாரணமாக,ஈற்றில்;இரண்டு அல்லது மூன்று குட்டிகள் பிறக்கும். சில சமயங்களில் ஆறு குட்டிகள் பிறப்பதும்



உண்டு. குட்டிகள் 6 மாதக் காலம் வரை இருப்பிடத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கும். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? பிறகு தாய்ப் புலியுடன் சென்று அவை வேட்டையாட ஆரம்பிக்கின்றன. தாய்ப் புலியுடன் குட்டிகள் இரண்டாண்டுகளோ, கூடவோ தங்கியிருக்கும். சாதாரணமாகப் புலி 20 ஆண்டுகள் வாழ்ந்திருக்கும்.

புலி என்றதும் நமக்கு வெள்ளைப் புலியும் நினைவுக்கு வருகிறது. இது எப்படி இருக்கும்? மஞ்சள் நிறப் புலிக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

பனி போல் வெண்மை, உடலில் லேசான கறுப்பு நிறத்திலோ, சாம்பல் நிறத்திலோ அழகிய வரிகள், இதுவே வெள்ளைப் புலியின் கண்கவர் தோற்றம். இந்தப் புலியின் மூக்கு கறுப்பாக இல்லாமல் சாம்பல் நிறத்திலிருக்கிறது. இந்தச் சாம்பல் நிறம் வாய் உட்புறத்தின் சிவப்பு நிறத்தோடு கலந்து பார்க்க அழகாக இருக்கும். இதன் பாதம் சிவப்பு; நடந்தால் பூனைபோல் சத்தம் ஏற்படாத அமைப்பு.

இந்த நூற்றாண்டு துவக்கத்தில் வெள்ளைப் புலிகள் அசாம், ஒரிசா, மத்தியப் பிரதேசக் காடுகளில் வசித்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால், இப்போதிருக்கும் வெள்ளைப் புலிகள் இனம், ரேவா காடுகளில் ஒன்பது மாதக் குட்டியொன்று பிடிபட்டதிலிருந்துதான் ஆரம்பம். ரேவா மகாராஜா இதை கோவிந்த்கட்டிலுள்ள தம் அரண்மனைக்குக் கொண்டு வந்து 'மோகன்' என்று பெயரிட்டார். மோகனுக்கும், பெண்புலி பீகத்திற்கும் பிறந்த குட்டிகள் ஒன்றுகூட வெள்ளைப் புலியாக இல்லை. ஆனால், மோகனுக்கும் ராதா என்ற வேறொரு பெண் புலிக்கும் வெள்ளைப் புலிக் குட்டிகள் பிறந்தன. ராதாவுக்குப் பிறந்த குட்டிகள் நான்கு. இந்த இனத்தின் ஆதியான 'மோகன்' அதன் 20-வது வயதில் இறந்தது.

உலகில் இன்று 39 வெள்ளைப் புலிகள் இருக்கின்றன. இவற்றில் 25 இந்தியாவில் இருக்கின்றன. இலண்டனில் இருப்பவை 10. அமெரிக்காவில் இருப்பவை நான்கு. இந்தியாவில் தில்லியில் 13 வெள்ளைப் புலிகள் இருக்கின்றன. கல்கத்தாவில் இருப்பவை 7. ரேவா அரண்மனையில் இருப்பவை 5.

மஞ்சள் நிறப் புலியைக் காட்டிலும் வெள்ளைப் புலிகளின் நீளம், எடை, பருமன் எல்லாம் அதிகம். ஆனால், பழக்க வழக்கங்களில் எந்த வேறுபாடும் இல்லை.

கூட்டுறவே நாட்டுயர்வு என்கிறோம். அதைப் போலக் காட்டு வளமே நாட்டு வளம் என்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். வனத்துறை வழங்கும் வளங்கள் பலப்பல. வனம் அழிந்தால் வான் பொய்த்து விடாதா?

வான் பொய்த்து விட்டால் — மழை வளங் குன்றி விட்டால் மன்பதையில் உயிர்கள் வாழ்ந்திட இயலுமா? இதனைக் கருத்தில்கொண்டே வனத்தினைப் பாதுகாக்கும் நோக்கோடு வனத்துறை தோன்றியது. 1856-ல் டாக்டர் கிளோகார்ன் அவர்களை வனத் துறை பாதுகாப்பாளராக நியமனம் செய்ததிலிருந்து, இத் துறை துவங்க ஆரம்பித்தது. 1882-ல் தமிழக வனத்துறைச் சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. அதன் பின்னர் மாநிலத்தில் உள்ள காடுகள் அனைத்தும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, திட்டம் இடப்பட்டு ஒதுக்கப்பட்டன.

வேளாண்மைக்கு அடுத்தபடி, காடுகளே நிலப் பயன்பாட்டில் முக்கிய இடம் பெறுவதாகும். விவசாயமும், காடுகளும் மக்களுக்குப் பல வகையில் பயனளிப்பவையாகும். விவசாயம் மக்களுக்கு உணவு அளிப்பதோடு விலங்குகளுக்குத் தீவனங்களையும் அளிக்கிறது. அதே போலக் காடுகளும் வெட்டு மரங்கள், விறகு, உரம் ஆகியவற்றை அளிக்கின்றன.

இவை தவிர, முக்கியமாக நிலவளப் பாதுகாப்பிற்கும், நிலத்தில் ஈரப் பசையைக் காப்பதற்கும், சுற்றுப்புறக் காற்று பாழ்படுதலைத் தடுக்கவும் காடுகள் பெரிதும் உதவுகின்றன.

இவ்வாறு மக்களுக்கு வற்றாத செல்வத்தை வாரி வழங்கிடும் சுரங்கமாகக் காடுகள் விளங்கி வருகின்றன. இதனைப் பாதுகாத்து வளர்க்கவும், நாட்டின் இயற்கை வளத்தையும், தொழில்களுக்கான மூலப் பொருள்களையும் மேம்படுத்தவும் தமிழக அரசு வனத்துறையின் மூலம் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

காட்டிலே கிடைக்கும் செல்வங்களை மட்டுமல்லாது, காட்டிலே வாழும் விலங்கினங்களையும் அழியாமல் பாதுகாப்பதும் வனத் துறையின் தலையாயப் பணிகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

''காடுகளில் வாழும் விலங்குகள் இயற்கையின் சமநிலை வழுவாதிருக்கப் பெரிதும் உதவுகின்றன. ஆனால் நாமோ இச் செல்வங்களைப் பேணிக் காப்பதில் போதிய அக்கறை செலுத்துகின்றோமா என்று கேட்டால், இல்லையென்ற பதிலே வருகிறது.

''தொழில் முன்னேற்றம் என்ற பெயரில் ஆண்டுதோறும் நாம் காடுகளை அழித்து வருகிறோம். அங்குள்ள வாயில்லா விலங்குகளின் அழி நிலையை நினைத்தோமா என்றால் இல்லை. இந் நிலை நீடித்தால் வன விலங்குகளைக் காட்சிச் சாலையில் தான் கம்பிகளுக்குப் பின்னாலோ அல்லது சோளக் கொல்லை பொம்மை போல

அவைகளின் தோலைக் கொண்டு செய்யப்பட்ட உருவம் ஒன்றையோதான் நமது சந்ததியினர் கண்டிட முடியும்.

''இந் நிலை நமது காடுகளில் பண்டைய நாட்களில் வாழ்ந்த பல விலங்கினங்களுக்குத் தற்போது ஏற்பட்டிருக்கிறது. எடுத்துக் காட்டாகப் புலியினை எடுத்துக் கொள்வோம். முன்பெல்லாம் பல முறை புலிகள் காடுகளை அண்டியுள்ள கிராமங்களில் வழி தவறி வந்து விட்டதையும், அவைகளைக் கொன்று, பின் அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்றதையும் நாம் அறிவோம். ஆனால் இப்போதோ மனிதர்களின் புலி வேட்டை வேட்கையினால் புலிகளைக் காண்பதே அரிதாகி விட்டது.

''எனவே, இயற்கையானது

நமக்கு அன்புடன் வாரி வழங்கியுள்ள அடவிச் செல்வத்தை நாம் பேணிப் பாதுகாத்து, வன வாழ் விலங்கினங்களுக்கு ஊறு விளைத்திடோம் என்ற உறுதிப்பாட்டினை நாம் 'மேற்கொண்டிட வேண்டும்......'' என்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், கடந்த ஆண்டு வனவிலங்கு வார விழாவின் போது விடுத்த வேண்டுகோளை இங்கு நினைவு கூர்தல்வேண்டும்.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் நம் நாட்டில் சுமார் 50,000 புலிகள் இருந்தன. ஆனல், இன்று இந்த இனமே அழிந்து போய்விடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனை எண்ணியே புலி வேட்டையைத் தடை செய்யும் சட்டம் இந்தியாவில் கடந்த ஆண்டு அமல் செய்யப்பட்டது.

ஒரு காலத்தில் வட இந்தியக் காடுகளில் எங்கும் காணப்பட்ட சிங்கம் இப்போது குசராத்தில் கிர் காடுகளில்தான் காணப்படுகிறது. அதைப் போல நீலகிரி வரையாடு, கருங்குரங்கு போன்ற இனங்கள் அறவே இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சதுப்பு நில மான், நான்கு கொம்புடைய மான், பனிச்சிறுத்தை, காஷ்மீர் மான், கஸ்தூரி மான், இந்திய நாரை, சிவப்புத் தலை வாத்து, வெள்ளை நிறக் காட்டு வாத்து ஆகியவையும் மறைந்து வருகின்றன. இத்தகைய அவல நிலை அகல இயற்கைச் செல்வங்களைப் பாதுகாக்க மக்களுடைய முழு ஒத்துழைப்பும் தேவை.

மனத்தில் சிறிதும் இரக்கம் இன்றி பொழுது போக்குக்காக வேட்டையாடுவோரே! கொஞ்சம் சிந்தியுங்கள்! பண்டைய இயற்கைச் செல்வங்களை—விந்தை உயிர்களை வாழ விடுங்கள்!

புலி இனம் மறைவதைத் தடுப்பதற்காக மைய அரசு ரூ. 5 கோடி செலவில் இயக்கமொன்றைத் துவக்கவிருக்கிறது. புலி இனத்தைக் காப்பதற்காக 'உலக வன விலங்கு நிதி நிறுவனம்' பத்து இலட்சம் டாலர் நிதி திரட்டி வருகிறது. இதில் ஒரு பங்கு இந்தியாவுக்கும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று இந்தியக் காடுகளிலும், தமிழ்நாட்டுக் காடுகளிலும் பல்வேறு விந்தை விலங்குகள், பறவையினங்கள், ஊர்வன, நீர் வாழ்வன முதலியன சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன. இந்தியாவிலிருந்தும், மேலை நாட்டிலிருந்தும் தமிழகத்திற்கு வரும் பயணிகளுக்குத் தக்க வசதிகளைத் தமிழ்நாடு அரசு செய்துள்ளது—செய்து வருகிறது; விலங்கின உய்விடங்களில் பயணிகள் தங்கியிருந்து கண்டு களிக்கத்தக்க வகையில் அழகிய இல்லங்களையும், இருப்பிடங்களையும் அமைத்திருக்கிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திடும் வகையில், தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றது.

எனவே, வன வளம் பெருகிட, விலங்கினங்கள் அழியாமல் பாதுகாத்திட வனத்துறையோடு நாமும் ஒத்துழைப்போம்.

கணக்கில் புலியாய்த் திகழுவோம்; வீரத்தில் புலியெனப் போரிடுவோம். ஆனல் புலியோடு—மற்ற மற்ற விலங்கினத்தோடு 'வேட்டைப் புலி'யாய் மட்டும் நாம் விளங்கிட வேண்டாம்!

—பி.வி.ஜி.

* அதிசய நீர் ஊற்று நிபுணர் *

குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விபரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2 : 3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு 20 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

K. கந்தசாமி,
(Ex. Member of the British Society of Dowers, London.)
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி அஞ்சல் — கோயமுத்தூர்-6
தொலைபேசி எண் 31912.

ADVT—

சேலத்துப் பட்டு

சேலம் மாவட்டத்திலுள்ள பெரும்பாளையத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்ற உற்சாகம் மிக்க உழவர், தமது ஒரு ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடி பயிர் செய்து, ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பட்டுப் புழுக் கூடுகளை உற்பத்தி செய்திருக்கிறார். அவர் சிறு அளவில் இதை மேற்கொண்டுள்ள போதிலும், இது பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகும்.

சென்ற ஆண்டு பட்டுத் துணிகள் ஏற்றுமதி 51 விழுக்காடு அதிகரித்தது. இந்தியப் பட்டுத் துணிகள் மேற்கு ஜெர்மனிக்கு மிக அதிகமாக ஏற்றுமதியாகின்றன. அதற்கு அடுத்தபடியாக பிரான்சுக்கும், மலேசியாவுக்கும் இவை ஏற்றுமதியாகின்றன.

சென்ற ஆண்டில் பட்டுப் புடவைகள் ஏற்றுமதி மூலம் ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாயும், உடைகள் தயாரிப்பதற்கான பட்டுத் துணிகள் ஏற்றுமதி மூலம் இரண்டு கோடியே 19 இலட்ச ரூபாயும் அன்னியச் செலாவணி கிடைத்தது.

இருமுனை



கண்ணை யிழந்தவர் காட்சி இழந்திவண்
கவ்வுந் துயரினில் வாடுகின்றார்
கண்ணைப் படைத்தவர் தீயவை கண்டுதம்
கண்புதைத் தின்னலைக் கூடுகின்றார்.

எண்மை தருமுயர் கல்வி இலையென
இங்குப் பலர்மனம் கூம்புகின்றார்
எய்திய கல்வியின் நன்மை யிழந்தவர்
ஏசியக் கல்வியைத் தேம்புகின்றார்

மண்ணில் திருவிலர் வாழத் திகைத்துளம்
மண்டும் வறுமையில் துஞ்சுகின்றார்
மன்னும் திருமிக வாய்த்த நிலையினர்
வாரிக் கொடுத்திட அஞ்சுகின்றார்!

எண்ணில் உலகினில் மானிடர் யாவரும்
எய்தும் துயரினைத் தேர்ந்திடலாம்
இன்று மனிதரின் நெஞ்சம் அழுகையை
எய்தித் தவிப்பதை ஓர்ந்திடலாம்!

செல்வம் படைத்தவன் சேயோ தனைமிகச்
சீருறக் காப்பவர் தோளிறங்கிச்
செம்மண் நிலத்தினில் ஆடி மகிழ்ந்திடச்
சிந்தை புரிந்திவண் ஏக்கமுறும்

கொல்லும் வறுமையில் குன்றிக் குலைபவன்
கொண்ட மகவுயர் தோளமர்த்திக்
கொஞ்சி மகிழ்பவர் இல்லை எனக்கெனக்
கூவி அழுதுளம் வாட்டமுறும்

நில்லா உலகினில் நிற்கும் வரையிலும்
நெஞ்சம் களித்திட வேட்டமுற்று
நேடிப் பொருளினை ஈட்டத் திரிபவன்
நித்தம் கவலையில் தோய்ந்திடுவான்.

பொல்லா உலகினில் எல்லாம் மறைந்திடும்
பொன்றி மறையுமுன் பல்பணிகள்
போற்றிப் பிறர்க்கே புரிய நினைப்பவன்
புக்க இடரிடை ஓய்ந்திடுவான்.

ஈரோடு தமிழன்பன்

16-3-3

காதி கிராப்ட் – கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.







தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை–600001



காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

காவடிப் பாரம், சுமப்பவனுக்குத்தான் தெரியும்!

இது உண்மை.

ஆதிமூலத்தேவரின் தலையில் சுமந்திருக்கும் அல்லது, சுமத்தப்பட்டிருக்கும் சுமையை அவரே அறிய முடியும்.

அதே மாதிரி, வீரமணியின் மனத்தில் சுமந்திருக்கும் அல்லது சுமத்தப்பட்டிருக்கும் சுமை அவனுக்குத்தான் அர்ப்பணம்.

'அப்பா விடுகதை போடாமல் இருக்க வேண்டும்' — இவ்வாறு அவன் கவலைப்பட்டான். கவலையில் அச்சமும் மேலோங்கியிருந்தது. இப்பொழுது தன் தந்தை பேசப் போகும் விஷயம், அவர் சுட்டன மாதிரி, தன்னோடு சம்பந்தப்பட்ட மங்களகரமான காரியம் பற்றியதுதான் என்பதை அறிந்ததும் அவனுக்குத் தன் திருமணம் பற்றிய சிந்தனைதான் எடுத்த எடுப்பிலே தொடுத்து நின்றது. கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப்பயிர் என்னும் விவரத்தை அவன் அறிவான். ஆகவே, அந்த நீண்ட பந்த பாசத்துக்குத் தன் கனவுப்படி ஆளாவதோ, அல்லது தன் கனவைச் சிதைத்து ஆளாக்கப்படுவதோ

அவனுடைய மன அந்தரங்கத்தைப் பொறுத்த காரியம் என்பதுதான் அவனுடைய சொந்தக் கருத்தாக அமைந்திருந்தது. இந் நிலையிலே, தன் தந்தை புதிராகப்புதிர் போட்டு விடாமல் இருந்தால் தேவலாமே என்றும் எதிர்பார்த்தான்; கவலையும் அச்சமும் சூழ்ந்திட எதிர்பார்த்தான். இதற்கு மத்தியில், குடும்பத்தின் கவுரவத்தை உயிர்க் கழுவில் நிறுத்தி வைத்துச் சோதிக்கக் காத்திருக்கும் சூழ்நிலையை வேறு முதற் காரியமாகச் சமாளித்து, சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும். இது அவனது குடும்பத்தின் மானப்பிரச்சினை!

பெரியவர், முற்றத்திற்குத் திரும்பினார். இடம் மாற்றிக் கட்டிலில் அமர்ந்த வேளையில், தாழ்வாரச் சுவரின் தொங்கலில் பதுங்கி யோடிய கடுவன் பூனை, மண் சுவரின் சுண்ணாம்புப் பூச்சைப் பெயர்த்துத் தள்ளிய தன் வினைவாக, அவர் தலைமீது ஒட்டடையும் தூசும் மண்ணும் சிதறவே, அவர் 'பழைய குருடி கதவைத் திறடி!' என்ற மாதிரி, பழைய திண்ணைக்கே திரும்ப வேண்டியவரானார். அமிர்தாஞ்சனம் நெற்றிக்குத் தாவிற்று.

பிறவி என்கிறதே ஒரு கடனுட்டம் தான். பட்ட கடனுக்குப் பட்டுத் தீர்க்கக் கடமைப்பட்டதுதான் இந்தப் பிறப்பு. படைச்சவன் மனுசனை வாய் பேச வச்ச ஒரு குற்றத்துக்காக, மனுசன் வாய் பேசத் தெரியாத மிருகத்தைக் காட்டிலும் கேடாக எம்புட்டோ குற்றங்களைச் செய்கிறான். ஆனால் அவன் செஞ்ச குற்றங்களை அவனே சுமந்து அறுவடை செய்ய வேண்டியவன் என்கிற சத்தியத்தை அவன் மறந்தே போயிடுறான், பாவம்! அதனாலேதான் அவன் தர்மத்தை மறந்து, அன்பை மறந்து, பண்பை மறந்து, நீதியை மறந்து, ரோசம் கெட்டு, மானம் கெட்டு ஈனத் தனமாய் ஆடுறான்; பணத்தைக் கட்டிக்கிட்டு ஆடுறான். ஆனா, மண்ணிலே பிறந்தவன் மண்ணுக்கே உடையவன் என்கிற தடயம் கேவலம் இந்த மனுசனுக்குப் புரியவே புரியாதோ? ஊம் . . . பூனைக்கு மத்தியிலே தான் எலிப் பண்ணையும் பேரன் பேத்தி எடுத்துக்கிட்டிருக்குது! . . ''

ஊர் நாட்டாண்மைத் தேவருக்கு மூச்சு வாங்கியது; பின் வாங்கியது.

5. எழிற்கனவு காதலா? காமமா?

''அப்பா!''

''இருக்கேன் மகனே, இருக்கேன்! உன் கிட்டே என்னென்னமோ சொல்லணும்னு இருக்கேன்!''

''சொல்லுங்கப்பா!''

''சொல்லத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்; சொல்லவும் தான் போறேன். கதிர் பறியத் தலைப்பட்ட நிலத்திலே வாய்க்கால் வழியே முறைத் தண்ணி ஒரு சீராய்ப் பாய்ஞ்சோடுற தொப்ப, என்னோட நெஞ்சடியிலே ஒழுங்கு முறையாக ஊர்ப்பட்ட எண்ணங்கள் ஓடிக்கிட்டு இருக்கையிலே, வேறே சில நினைப்புக்கள் என் மனப் போக்குக்குச் சவால் விடுறதாட்டம் குறுக்குமடை பாய்ச்சுது. இப்படியான அவலக் குழப்பத்துக்கு நடுவிலே போராடிக்கிட்டிருக்கக் கூடிய எனக்கு, எதை, எப்படி ஆரம்பிக்கிறதின்னு மட்டுப் பட மாட்டேங்குது. சே!

கார்த்திகைப் பனி மூட்டத்தில் கணப்பின் சந்நிதியில் குளிர் காய்கிற மன உணர்வை அடைந்தான் வீரமணி; உணக்கையாய் இருந்தது. சுறுசுறுப்போடு நிமிர்ந்து அமர்ந்து கொண்டான். காவிரித் தரணியாம் தஞ்சையிலே தேர்வின் தீர்ப்பை நாளிதழ் வாய் மூலமாக அவன் அறிவதற்குள் அவன் அனுபவித்த தொல்லைகள் மீண்டன.

''வீரமணி!''

''ஊம்; பேசுங்க அப்பா!''

''தம்பி, உன்னைத் தவம் இருந்து, விரதம் பிடிச்சு, முந்நூறு நாள் சுமந்து பெற்ற புண்ணியவதி வள்ளியம்மை இருந்த வரைக்கும் இந்த வீட்டிலே மகாலட்சுமி அல்லும் பகலும் கொழிச்சுக்கிட்டே இருந்தாப்பா. ஒரு முட்டுமுடை ஏற்பட்டது கிடையவே கிடையாது. வானம் பார்த்த பூமியானாலும் வெள்ளாமை விளைச்சலுக்குப் பாடு வந்தது

இல்லே; மகசூல் கையைக் கடிச்சது கிடையாது. காலம் மானமாய் ஓடிச்சு. உன் ஆத்தா செத்துச் சிவலோகம்பறிஞ்சா. அப்பவே பிடிச்சது சனியன். பொய் இல்லே! முன்னே ஒரு தக்கம் செப்பிஞப்பிலே, அந்தச் சீதேவியோடே சகலமுமே போயிடுச்சு. வயல் காட்டிலே வாரத் தகராறு, குத்தகைச் சங்கடம் அது இதுன்னு அக்கம் பக்கம் முளைச்சதாட்டம் நம்ப சம்பந்தத்திலேயும் தொல்லைகள் சகட்டு மேனியாய் கலாட்டா பண்ணிடுச்சு. வயலிலே களை முளைச்சாக்க, களை எடுத்து மருந்தடிச்சு, உரம் தூவிப் பயிர் பச்சையைப் பேணிக் கண்காணிக்கிருமே, அப்படி நம்ப குடும்பத்தையும் செய் நேர்த்தி பண்ணத் துவங்கினேன். எலுமிச்சம் மன் கம்மாய் உள் வாயிலே இருந்த நம்பனுக்குக் குடிக் காணியாட்சி பாத்தியம் கொண்ட நிலங்கள் அல்லாத்தையும் சீராக்கி, சொந்தப் பண்ணை வச்சுச் சோதிச்சுப் பார்த்தேன். அந்த நடவடிக்கை, முடிஞ்ச முடிவிலே என்னைக் காலை வாரிவிட்டு என்னையே சோதிச்சுப்புடுச்சு! . . . உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்கிற வாசகம் பொய்யாகல்லே. இது சம்பந்தமான காரியங்களுக்கு, தாய் வீட்டிலே இருந்த இருப்புப் பெட்டகத்திலே கூட அழகு காட்டின, காசுமாலை, மகர கண்டி முதலான நகை நட்டுக்கள் பலியாச்சு! . . .''

பெரு மூச்சோடு நெட்டி பறித்தார் பெரியவர்; தொடர்ந்த பேச்சுக்குத் தொடர் சேர்க்க எத்தனம் செய்தார்.

''வீரமணி, எட்டுக் கண் விட்டெரிய நாம கொடிகட்டி வாழ்ந்த கதைக்கு மையத்திலே 'ஏழரை நாட்டான்' சனி கன்னக்கோல் வச்சுப் புகுந்துக்கிட்ட சோகத்தை உன்னிப்பாய்க் காதிலே வாங்கிக்கப்பா! . . . .நெற்றி வேர்வை நிலத்திலே சிந்த, மண்ணை நம்பி மண்ணிலே மனசைப் பதிச்சு, ராத்திரி-பகல்னு பார்க்காமல் உழைச்ச உழைப்பு நல்ல பலன் காண்பிக்கல்லே! விழலுக்கு இறைச்ச நீராச்சு. இதுக்கு ஊடேதான் நீ உன் சின்னப் படிப்பைப் பட்டுக்கோட்டையிலே முடிச்சே. பெரிய படிப்புக்கு விவசாயத்தைப் படிச்சுக்கிட வேணும்னு மண்ணு பேரிலே உனக்கு

இருந்த பாசத்திஞலே நீ சொன்னே!''

''தம்பி, இந்தக் காலக் கட்டத்திலேதான் நம்ப ஆவணத்தான் கோட்டையிலே உன் அம்மான் ராமையாத் தேவனைக் காரணமாய்க் கொண்டு கட்சி முளைச்சு, ஊர் ரெண்டுபட நேர்ந்திச்சு. ஊர்க்கார்வாரிலே அம்பலம் பண்ணிக்கிட்டிருந்த பெரியட்டான் புரத்துக்காரங்க குடி வரி தண்ட உன்னுடை அம்மான் வீட்டைப் பாதிச் சாமத்திலே தட்டியிருக்காங்க. அக்கரைச் சீமையிலேருந்து பசையும் பச்சாப்புமாய் ராமையா வந்திருந்த புதுசு. வரி கேட்க வந்தவங்க அகராதி படிக்கவே, இவனுக்கு மூக்குக்கு மேலே கோபம் புட்டுக்கிட்டு வந்திருக்குது. ரெண்டு தரப்புக்கும் பேச்சுத் தடிச்சு, கை கலப்பும் மூண்டுச்சு. கூடப் பிறந்த அக்காளை எனக்குக் கட்டிக் கொடுத்தவன் ராமையா. அவனுடை மானத்துக்கு ஈனமோ, வில்லங்கமோ வந்தால் என் நெஞ்சு பொறுக்குமா? பொறுக்கல்லே, தம்பி! அவன் மானத்தைக் காக்க, நான் களத்திலே குதிச்சேன். நம்ம மேலக் குடியிருப்பு ஒரு கட்சியும், கீழக் குடியிருப்பு இன்னொரு கட்சியுமாகப் பிரிஞ்சுது. ஊர்ச் சண்டை அறந்தாங்கித் தாஞ மட்டுக்கும் நீண்டு, கச்சேரியையும் எட்டிடுச்சு. ரோசமும் வீம்பும் கொண்டு என் கைப் பணத்தையும் தண்ணியாய் வாரி இறைச்சேன். கட்சி சேர்க்க வேணுமா? ஆளுங்களைக் கூட்டித் திரட்டி, கச்சை கட்ட வேணுமா? இது சமயம், ராமையாகிட்டே கடன் உடன் வாங்கத் தலையெடுத்தாச்சு. . . உன் படிப்பை உத்தேசிச்சு முதலிலே நீ கோயம்புத்தூருக்கு அலைஞ்சு, கடைசிலே சிதம்பரத்திலே திகைஞ்சுது உன் பட்டப் படிப்பு; அந்தப் படிப்பை உத்தேசிச்சும் ராமையா கிட்டே ஒரு நம்பிக்கையோட நாலைஞ்சு வருசம் கடன் பட நேர்ந்திடுச்சு. என்கிட்டே கொடுக்காத ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் சேர்த்து, நையம்பாடி என்னை நோட்டெழுதித் தரச் சொல்லிட்டு மறு நாள் முதல் காளாஞ்சி விசயமாய் நியாயத்தை முன்னிட்டு அவனுக்குப் பாதகமாய் நான் நின்ன கோபத்திலே, என் பேரிலே அநியாயமாகக் கோபப்பட்டான். முடிஞ்ச முடிவிலே, என்னைப் பிராது பண்ணித் தனக்குச் சாதகமாய்த் தீர்ப்பையும் 'நிறைவேற்றி' வாங்கி வச்சுக்கிட்டான் அவன்! . . ''

''வீரமணி! அந்த நாளையிலே உன் தாய் மாமன் ராமையாவோட மானம், மரியாதையை நிலைநிறுத்திக் காப்பாத்த வேண்டி, அவனுக்காக நான் என் தலையைக் கொடுத்தேன். அந்த நன்றியைக் கூட மறந்திட்டான் அந்தப் படுபாவி! ரோசம் கெட்டவன், இப்போ தன்னுடை பரம வைரிகளோட ராசியாகிக் கூடிக்கிட்டான்! மானங் கெட்ட ராமையாப் பயன் என் மானத்தை வாங்கப் போருனும்! மனப்பால் குடிக்கிருன்! . . .சாலைச் சந்தியிலே சவடால் பேசலயா அவன்? அந்த நயவஞ்சகப் பாவி எப்படிப்பட்ட சூதோடு அப்படிச் சவால் விட்டிருப்பான் என்கிற துப்புக் கூடவா எனக்குப் புரியாது? பாவியிலேயும் பாவி பைத்தியக்காரப் பாவி! . . . பரம்பரை பரம்பரையாய் உசிருக்கும் மேலாகக் கட்டிக் காத்துகிட்டு வருற நம்ப குடும்பத்து மானத்தை—மரியாதையை— கவுரவத்தைப் பங்கப்படுத்தறதுக்கு இந்தப் போகுடிப்பயலுக்கு வயதுபோதுமாக்கும்? நாறப் பொட்டச்சி செங்கமலச் சிறுக்கி பின்னுடி அலைஞ்சு திரிகிற இவனுடை சுரணை கெட்ட மானத்தை இவனுடை தட்டுக் கெட்ட பணமா நாளைக்குக் காப்பாத்தப் போகுதாம்? . . .நான் மட்டும் உயிர் தரிச்சிருந்தேனுல் என்னைச் சோதிக்க நினைக்கிற அந்தக் கிராதகன் ராமையாவுக்கு ஈரலிலே பித்தா, இல்லே, எலும்பிலேதான் பித்தா அப்படின்னு ஒரு கை பார்க்காமலா இருப்பேன்? . . .''

கருக்கரிவாள் மீசையை எத்துணை ரோசத்துடனும் ஆத்திரத்துடனும் முறுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறார் தேவர்! . .

வீரமணியின் மனக்கொதிப்பு அடங்கவில்லை. பற்கள் ஒன்றோடொன்று உராய்ந்து மோதிக் கொண்ட சத்தமும் ஓயக் காணோம். சுருள் முடிகளை இடது கை விரல்களால் கோதி நெருடி விட்டான். வலது கையிலிருந்த தமிழரசியின் கடிதத்தைச் சுற்றின நினைவையே அவன் மறந்து விட்டான் போலும்!

இளைஞர் சங்கத்தை அடுத்திருந்த ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் புறப்பட்ட மணியொலி வடக்கில் தொடங்கி, மேற்கே மறுகி மிதந்து வந்து கொண்டிருக்கிறது.

காசி, பெருங்காய டப்பாவும் கையுமாக வந்தார். ஆடுகல் இடுக்கில் ஒளிந்திருந்த தம்பிக்கோட்டை வீச்சரிவாளை தேடிப் பிடித்து, கைப்பிடியைத் தாங்கிப் பெருங்காயத்தைத் துண்டு பண்ணினார். பெருங்காய வாசனையை நுகர்ந்தவராக எழுந்தார். ''சோறு வடிச்சாயிடுச்சுங்க, ஐயா!'' என்று சேதி தெரிவித்தார்.

''சோறு வடிச்சிட்டா, சாப்பிடுறதுதானே, காசி?'' என்றார் பெரியவர்.

வீரமணி சிரிக்க முயன்றான்.

''தலை இருக்க வாலை ஆடச் சொல்றீகளா, பெரியவுகளே! என் சாப்பாட்டுக்கா இப்போ அவதி? நீங்களும் சின்னவரும் காலா காலத்திலே சாப்பாட்டை முடிச்சுக்கிட்டா, அது போதுமுங்க. ரெண்டு மாமாங்கத்துக்குக்கிட்டே உங்க நிழலிலேயே அண்டிக் கிடக்கிற கால் படி அரிசி ஆத்மா இது. என் சோற்றைக் குறளியா கொண்டு போயிடும்? சரி, எந்திருங்க. மத்தியான்னச் சாப்பாடு முடிஞ்சு பள்ளிக்கூடம் கூடத் தொடங்கியிருச்சுங்க,'' என்றார் சமையல் காசி.

''நான் போய்; தக்காளி ரசத்துக்கு ரவை பெருங்காயம் போடணும்'' என்றும் கூறினார்.

புகையிலைச் சக்கையைக் காறி உமிழ்ந்தார் முதிய மனிதர். பெருங்காயத்தின் நெடி அவருக்கு இதமளித்திருக்கலாம். பெருங்காயம் வைத்திருந்த பாண்டம் அவர் சிந்தனையில் ஆலவட்டம் சுற்றியதோ, என்னவோ? ''தம்பி, மூச்சுள்ள மட்டும் பேச்சு மாளாது. ஏந்திரு. சோறு உண்ணுவோம். நாம் ஒரு வேளை கூடப் பட்டினி கிடக்க உன் ஆத்தா மகராசி சம்மதிக்க மாட்டா; காசியும் அப்படித்தான்!'' என்றார். பின்னர், முகத்தில் ஒரு தெளிவைக் காட்டி மைந்தனை நோக்கி விழித்தார். ''தம்பி, உனக்குப் பிடிக்குமேன்னு வத்தல் குழம்பு ஆக்கச் சொன்னேன். பூண்டுப் பல் உண்டனவே போட்டிருப்பான் காசி. நித்திலி கச்சப் பொடியை மசாலா தூவி வறுத்திருப்பான். என்பாடு வேட்டைதான். உன் பேரைச் சொல்லி நானும் மூக்குப் பிடிக்கச் சாப்பிடப் போறேன்'' என்றார்.

வீரமணி பதனமாக முறுவல் அணிந்தான். இடுக்கண் இடைவிளைந்த பூஞ்சிரிப்பு. துன்பத்திற்கு மத்தியில் அவனால் சிரித்திட முடிகிறது. வள்ளுவர் வல்லவர்!

''தம்பி, நீ போய் சிதம்பரம் கடுதாசியை நிதானமாய்ப் படிச்சிட்டு வா. அதுக்குள்ளே நான் மூஞ்சி கழுவி, சாமி கும்பிட்டுட்டு வந்திட்றேன். நாம ரெண்டு பேரும் சுடுசோறு சாப்பிடலாம். அந்திக் கட்டுக்குள்ளாற நான் சிலட்டூர் அரிதி போய், போனதும் வந்தது மாய்த் திரும்பியாகணும்,'' என்று குறிப்புத் தந்தார், தேவர்.



ஆடும் சிதம்பரத்தினின்றும் ஆடாமல் அசையாமல் வந்து, இப்பொழுது ஆடிய சைந்த மணியமாய்த் தன் கை விரல்களிலே காட்சியளித்த உறைக்கடிதத்தை-உறை கிழிக்கப்பட்டிருந்த கடிதத்தைப் படித்துப் பார்க்க முனைந்தான் வீரமணி.

''அன்பிற்கினிய அன்பர் திருமிகு வீரமணி அவர்கட்கு, அஞ்சலிகள்.

'காதல் ஓர் எழிற்கனவு' என்று ஒரு நாவலாசிரியர் குறிப்பிட்டிருந்ததை நான் நாளும், பொழுதும் நினைத்துக் கொள்வது உண்டு.

காதல் மாதிரியே, காலமும் ஒரு அழகான கனவுதான். கனவுக்கு அழகு கூட்டி அழகுக்குக் கனவு காட்டும் காரணத்தினால்தான், காலத்தை எழிற்கனவு என்று குறிப்பிட்டேன் நான்.

நீங்களும் நானும் நட்பின் பின்னணியிலே அன்பின் பெயரால் பின்னிப் பிணைந்திருக்கும் சக்திக்கு-மகத்தான சக்திக்கு 'அன்பு' என்று மட்டுந்தான் பெயர் சூட்டப் போகிறீர்களா?-அப்படியேதான் காலமும் சொல்லிக் காட்ட வேண்டுமா?

'அன்பு எதையும் கேட்காது; கொடுக்கவே செய்யும்!' -இது அண்ணலின் அமுத மொழி.

நம் இருவரைப் பொறுத்த அளவிலே, என் அன்பு கொடுக்கத் தவம் இருக்கிறது.

ஆனால், உங்கள் அன்பு எதையும் என்னிடம் கேட்டால் தானே?

ஆகவேதான், நட்பின் பெயரால் உங்களிடம் அன்பைக் கேட்கிறேன். எனக்குரிய அந்த அன்பைக் கேட்கிறேன்.

அண்ணாமலைப் பூவெளியிலே நாம் சந்தித்திருக்கின்றோம்.

தில்லைப் பெருவெளியிலே பேசியிருக்கிறோம்.

இதுகாறும் வாய்விட்டுப் பேசிய நாம் இருவரும் இனி மனம் விட்டுப் பேச வேண்டாமா?

நான் பேசிவிட்டேன்.

இனி, தாங்கள்தான் பேச வேண்டும்.

உங்கள் அன்பைப் பேசச் சொல்லிக் கேட்க வேண்டுமெனக் கனவு காண்கிறது என் அன்பு.

அன்பைத் தாருங்கள்.

பதிலையும் தாருங்கள்.

அன்பு மறவாத,
தங்கள்,
ராம. தமிழரசி.

பி. கு.
கிண்டித் தொழிற்பேட்டையில், ஆகஸ்ட் இருபதில் இயங்க விருக்கின்ற எங்களின் பென்சில் தொழிற்சாலைக்குத் தங்களது ஒத்துழைப்புக் கிடைக்குமேயானால், நான் மட்டுமல்ல என் அருமைத் தந்தையாரும் மகிழ்வார்கள். அன்புக்கு அன்பு பரிவர்த்தனை என்கிற தார்மீக அடிப்படையிலேயே இவ்வேண்டுதலை மறுபடி விடுத்துள்ளேன். மற்றப்படி, இதற்குப் 'பண்டமாற்று' அந்தஸ்து ஏதும் கொடுக்கவில்லை நான். தாங்களும் கொடுக்கலாகாது. அன்புப் பதிலை என்னோடு அப்பாவும் ஆவலோடு எதிர் பார்ப்பாராம்!

—தமிழரசி.''

உயிர்நிலையாக இயங்கின அன்போடு கடிதத்தைப்படித்து முடித்தான்; அழகிற்கு அரசியான தமிழரசி அன்பிற்கு அரசி என்பதை அவன் தத்ரூபமாக அறிந்திருக்கின்றான். அவள் தமிழுக்கும் அரசிதான் என்ற உண்மையையும் இப்பொழுது அவன் அறிந்தான். அவள் கடிதத்தை அவனுடைய இலக்கிய ரசிப்பு மனம் வெகுவாக நேசித்தது. கடிதத்தில் அவள் அள்ளிச் சொரிந்திருந்த அள்ளக் குறையாத அன்பைப் பெரிதும் பாராட்டினான். 'ஆனால், அக்கடிதத்தில் குமாரி தமிழரசி பேசாமல் பேசியிருக்கும் அந்தப் பேச்சுக்குப் பொருள் என்ன? அந்தப் பொருளுக்கு விடை என்ன? விடையை யார் சொல்ல வேண்டும்? நான் அல்லவா? நான் என்ன விடை சொலலுவேன்? என்ன மறுமொழி கூற வேண்டும்? நான் ஓ....! தமிழரசி என்னைக் காதலிக்கிறாள்!... விழிகளின் ஈரம் இதழ்களைச் சுட்டிருக்கலாமோ?

''தம்பி, வா...வா!''

ஆதிமூலம் ருசித்துச் சுவைத்து உணவு கொண்டார். நடந்த நடப்புக்கள் சகலத்தையும் மறந்துவிட்டவர் போல ஒருகணம் தோன்றினார். நடந்த கதை எதையுமே அவர் மறக்கவில்லை என்று சுட்டும் வகையில் மறுகணம் அவர் காணப்பட்டார். ஆனால் அவர் நாட்டமெல்லாம் இப்போது சாப்பாட்டில்தான்.

''இன்னம் ஒருவாட்டி மட்டும் பூண்டுக் குழம்பு ஊத்தட்டுங்களா?''

''ஆத்தாடியோ! தாங்காது! ...தாங்காது!''

''தம்பிக்கு?....''

''வேணும்..வேணும்!''

''நான் கிழம் கட்டை; உறைப்பு தாளாது. நீ வயசுப் பிள்ளை. அதிலேயும் உனக்குத் தான் உறைப்பு ஏகமாய்ப் பிடிக்குமே?''

''சரிங்க; கொஞ்சமாய் ஊத்துங்க, காசி''

''தக்காளி ரசத்தில் உப்பு முனைப்பாம்; பெருங்காயம் தூக்கலாம்.

காசிக்கு முகத்தில் ஈ ஆடவில்லை.

கட்டித்தயிரும் வடுமாங்காய் ஊறுகாயும் என்றால் இருவருக்குமே நிரம்பவும் பிடித்தம். ஒரு பிடி சாதம் கூடுதலாகவே செல்லும்—

''ஆவன்னா-தீனா!''

வெண்கலக் கடைக்குள் புகுந்த யானைக்கு முன்னே வரும் மணியோசையாகக் குரலை முன்னே அனுப்பிவிட்டு, பின்னே வந்தார் செட்டித் தெரு நல்லதம்பிச் செட்டியார். அவர் குரல் மணியடித்ததற்கு மாற்றாகக் கேட்கும். ஆனால் அவரை யானை என்று பல்மேல் பல்போட்டு நாக்கில் நரம் பின்றிச் சொல்ல முடியுமா? ஒரு சிதம்பர ரகசியம் உண்டு. அவர் குடைவள்ளல். வீட்டை விட்டு வெள்ளோட்டம் புறப்பட்ட குடை வீடு சேர்ந்தால் தான் உண்டு! உஸ்......

''யாரு, நானாவா? வாங்க. இப்பத்தான் உங்களைப்பத்தி நெனச்சேன். உங்களுக்கு ஆயுசு நூறுங்க!''

''திருவாளர் தர்மர்-அதாகப்பட்டது, எமதர்மர் ஏமாந்திருந்தால், எனக்கு சர்வ நிச்சயமாய் நூறுவயசுதான். ஆனா நடப்பு வயசு அம்பத்திநாலே தான்!''-லேவாதேவிச் செட்டியார் பல்லெல்லாம் தெரியக் காட்டினார். தேவை இல்லை.

''குழந்தை குட்டிங்க சுகம் தானே?''

''அதுக சிவப்பு முக்கோணத்துக்குள்ளே நல்ல சுகம்தாங்க!'

''இலை போடச் சொல்றேன். கை நனைங்க. கவுச்சிகூட புழங்குது'' என்றார் தேவர். நல்லதம்பியின் பூடகமான குடும்ப நலக்குறிப்பில் எழுந்த ரசனை மாறவில்லைதான்!

''வாரப்பதான் சாப்பிட்டு வந்தேன். ஈரல் கறின்னா எங்க ராசாவுக்கும் ராணிக்கும் ரொம்ப ஆசை. உங்க சாப்பாடு ஓடியா போகப்போகுது? உங்க சோற்றைச் சாப்பிடாதவுக பாவம் செஞ்சவங்களாச்சுங்களே, தேவர் ஐயா!''

'அதெல்லாம் பழங்கதைங்க, செட்டியாரே!''

''நல்லாச் சொன்னீகளே? தருமத்துக்குப் பழங்கதை என்ன, புதுக்கதை என்ன—? தர்மம்னா தர்மம்தானுங்களே? ரெண்டு கையும் பத்தாமல் செஞ்ச குடும்பமாச்சுங்களே இது?''

தேவர் மெய்யுணர்ந்து களையோடு சிரிக்கலானார். வட்டிலை விட்டு எழுந்தார். இந்தா வந்திட்டேனுங்க,'' என்று சொல்லி அண்டாவை நாடினார்.

நல்லதம்பி பதற்றம் நீக்க முந்திக்கொண்டு, பெரியவரின் சிறு கரங்களைப் பரிவுடன்பற்றி ''வட்டிச் சோத்தைத் துட்டி வச்சிட்டா ஏந்திருப்பீங்க? எனக்குச் சமாதானப்படாது. கப்பலுக்கா பயணப்படப்போறேன்? இல்லை. எனக்குத் தலை போற அவசரமா என்ன?'' என்றார்.

''தலைபோற அவசரத்துக்கு நோட்டு சாட்டுகூடப் பூரிக்காமல், வெறும் நம்பிக்கையின் பேரிலே கைமாற்றுத் தோதாய் கொடுத்தீங்களே நீங்க? நான் மறக்க ஏலுமா? நீங்க கொடுத்த ஐநூறு ரூபாய்க் காசைக் கொண்டுதானுங்களே நாலு தாக்குக் கடலைக் கொல்லையிலே பீப்பாய் மூலம் தண்ணி

அடிச்சி, பூச்சிபொட்டு அரிச்சது போக, மிச்சம் சொச்சத்தை அரிச்சு எடுத்து உருவாக்க முடிஞ்சுதுங்க?......'' நன்றி மறக்காமல் பேசினார்; சுத்தமாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தார் தேவர்.

வீரமணி, கைகழுவி வந்த தந்தையை நெருங்கினான்; இடுப்பில் செருகியிருந்த பொட்டலத்தை எடுத்தான். ''இதிலே தஞ்சாவூர்ப்பயணச் செலவுச் சிட்டையும் மீதிப்பணமும் இருக்குதுங்க,'' என்று நீட்டினான்; முகப்புப் பக்கம் நாடினான்.

இருப்புப் பெட்டகச் சாவியும் கையுமாக மீண்டார் பெரியவர்.

''ஆவன்னா-தீனாவுக்கில்லே.. நீங்க பிள்ளை வளர்த்ததாட்டம் அத்தனை பாசத்தோடவும் அம்புட்டுக் கண்டிப்போடவும் வேறே யாராலேங்க வளர்க்க முடியும்? உங்க மாதிரி ஒருத்தர் இந்தச் சுற்றுவட்டம் பதினாறு ஊர்ப்புறத்திலேயும் இனிமேல் பிறந்து தலையெடுத்தால்தான் உண்டு. மறுதாரம் கல்யாணம் பண்ணிக்கிட்டா, வீட்டுக்குவருற புண்ணியவதி இந்தத் தாயில்லாப் பிள்ளையை ஓரவஞ்சனையாய் நடத்தி, இந்தப் பிள்ளை கண்ணைக் கசக்க நேர்ந்தா என்ன ஆகிறது என்கிற அந்த ஒரே கவலையிலே தானுங்களே அந்த நாளையிலே உச்சத்திலே ஆண்டப்பகூட நீங்க ரெண்டாந்தாரம் கட்டிக்கிட ஒப்பவே மாட்டேன்னு வைராக்கியமாய் மறுதளிச்சிட்டீங்க? உங்க ரோசமும் வைராக்கியமும் ஊரறிஞ்சதாச்சுங்களே? என்னமோ, காலம் வெல்லலே! உங்க இஷ்டப் பிரகாரம் ஒரு நல்ல மருமகள் நாளைக்கு வந்து சேர்ந்திட்டா, முன்னைமாதிரி மறுபடியும் இந்த வீடு விளக்கெரிஞ்சு, சீரும் சிறப்புமாய் விளங்கக் 'குறியா' பார்க்க வேணும்?'' என்றார் நல்லதம்பி.

''நூற்றிலே ஒரு தாக்கல் தானுங்க, நல்லதம்பி. என் வீட்டிலே காலடி எடுத்து வைக்கிறதுக்குத் தகுதி படைச்ச ஒரு மருமகள் சம்பந்தமாய்த்தான் நானும் யோசிச்சுக்கிட்டிருக்கேன். ஆவணியிலே அந்த நல்ல காரியம் முடிஞ்சுதின்னா, நீங்க சொன்னாப்பிலே முன்னே எங்க வள்ளியம்மை ஆளுறப்ப இந்த வீடு பூத்துக் குலுங்கினது கணக்கிலே மறுபடியும் சீதேவி சிரிச்சுத் 'தன்னானே-தன்னான்னே' என்று கும்மி கொட்ட ஆரம்பிச்சிடுவான்னு தான் எனக்கும் நல்ல நம்பிக்கை கைகூடி இருக்குது!''

''உங்க நல்ல மனசுக்கு நல்லது கட்டாயம் நடந்தே தீரும். மகமாயி நல்ல விளக்கைச் சத்தியமாய் ஏற்றி வச்சிடுவாங்க, ஐயா!''

தேவரின் இமைகள் நனைந்தன. சூன்யத்தை நோக்கி அவருடைய நலிந்து மெலிந்த கைகள் குவிந்தன. பிரார்த்தனைக்குக் காணிக்கை வேண்டும்; முத்துக்கள் சிதறின. தன் நிலை எய்தினார். விரலிடுக்கில் ஒடுங்கியிருந்த நோட்டுக் கற்றையை நீட்டினார். ''செட்டியார். ஐயா உங்க கையிலே கைமாற்று வாங்கின கடன் ரூபாய் ஐநூறும் இருக்கு. எண்ணிப் பார்த்துக்கிடுங்க. எல்லாம் அசல் நோட்டுங்க. சரி பார்த்துக்கிடணும்,'' என்றார். பிறகு, வலதுகை உள்ளங்கையில் ஒளிந்திருந்த பத்து ரூபாய்த் தாளை நீட்டி, ''ஆனி முதல் தேதிக்கடுத்தத்திலே கடன் தந்தீங்க. இன்னைக்கு ஆடி முதல்நாள். ஆக, ஒரு மாசத்துக்கு உண்டான நடைமுறை வட்டியை எடுத்துக்கிட்டுப் பாக்கியைத் தரணும்,' என்று நிறுத்தினார்.



நல்லதம்பி பணத்தை ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக எண்ணிச் சரிபார்த்து மடியில் வைத்துக் கொண்டபின், ஏறிட்டு விழித்தார். ''நம்பளுக்குள்ளே வட்டிவாசிப் பேச்சு வரலாமுங்களா? அடிநாளிலே ஆபத்துச் சம்பத்துக்கு எனக்கு உதவலீங்களா? புதுப் பணக்காரர் ராமையாத் தேவரிலிருந்து பழைய பணக்காரர் 'சோவன்னா மானா' வரைக்கும் யார்தான் உங்ககிட்டே கை நீட்டலேங்க? பத்து ரூபாயை ஞாபகத்தோடு உள்ளே வச்சுக்கங்க!'' என்று கூறினார்; தாம்பூலம் தரித்துக் கொண்டு வெளியேறினார் 'கொடுக்கல் வாங்கல்' நல்லதம்பி.



முகப்பில் வானொலிப் பெட்டியைத் திருகிக் கொண்டிருந்தான் வீரமணி.

''வீரமணி, வழித்தடத்திலே ஒரு நல்ல தகவல் காதுக்கு எட்டுச்சு. அதுக்குத் தக்கனை உங்க அப்பாரும் அனுசரணையாய்ப் பேசினாங்க. நான் நடைவழியிலே கேள்விப்பட்டதுபோலே, கொள்வினை-கொடுப்பினை நல்ல விதத்தோட கைகூடி, நீங்க உங்க அம்மான் மகள் அன்னக்கொடி கழுத்திலே உங்க ஆசைக்கொப்ப மூணு முடிச்சுப் போட்டுப்பிட்டால் எவ்வளவோ சிலாக்கியம்தான்!''

வீரமணி வாய் நிரம்ப-மனம் நிரம்பப் புன்னகை புரிந்தான். அவன் முன்னிலையில் கனவின் வட்டம் சுழல ஆரம்பித்தது. கனவுக்கிளி அன்னக்கொடி கனவுகாட்டி, அழகு கூட்டி, காலத்தைச் சுற்றி வளைத்துச் சிரிக்கத் தலைப்பட்ட ரகசியம் அவனுக்குப் புரியாத புதிர் ரகசியமல்ல——

காலம் ஓர் எழிற்கனவு தானா?

அப்படியென்றால், காதலும் ஓர் அழகுக் கனவேதானா?.....

(வளரும்)

கேளுங்கள் பதில் கொடுக்கப்படும்



வினா: நான் ஒரு சிறிய விவசாயி. அரசினர் வெளியிடும் நெல்வகைகளை எல்லாம் சிறிய அளவில் சாகுபடி செய்து வருகின்றேன். தற்போது மழையின்மை காரணமாக கிணற்றில் நீர் குறைந்து விட்டது. அதனால் புன்செய்ப் பயிர் செய்ய ஆவல் உள்ளது. எனவே வெள்ளைப் பூண்டு பயிர் செய்யும் விதத்தைத் தமிழரசில் வெளியிடும்படி கோருகின்றேன்.

—பி. கே. இராஜகோபால் நாயகர்,
இலட்சுமிபுரம் கிராமம்,
மாமண்டூர் அஞ்சல்,
செய்யார் வட்டம்.

விடை: தற்பொழுது தமிழ்நாட்டில் கொடைக்கானல் மலையின் மேல், கடல் மட்டத்திலிருந்து 3,000 முதல் 5,000 அடி வரையுள்ள பகுதியில் ஏறக்குறைய 3,000 ஏக்கரில் மானாவாரி பயிராக வைகாசி பட்டத்திலும், பாசனப்பயிராக கார்த்திகைப் பட்டத்திலும் வெள்ளைப் பூண்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. எனவே, தங்கள் ஊரில் வெள்ளைப்பூண்டு நல்ல மகசூல் தரும் என்று எதிர்பார்க்க முடியாது! தங்களுக்கு வெள்ளைப் பூண்டு பயிரிட வேண்டும் என்ற ஆர்வம் இருப்பின், ஒரு சிறு தளையில் பயிரிட்டு பார்க்கலாம்; நல்ல மகசூல் கிடைத்தால் அடுத்த பருவத்தில் அதிக பரப்பில் வெள்ளைப் பூண்டு பயிரிடுவதே சிறந்தது.

தங்கள் கிணற்றில் தண்ணீர் குறைந்த அளவே கிடைக்கிறது என்று கூறுவதால், அதைக் கொண்டு தண்ணீர் அதிகம் தேவைப் படாத சூரியகாந்தி, எச்.பி.1 அல்லது எச்.பி. 4 கம்பு, மக்காச்சோளம், 'அஞ்சுகம்' பாசிப் பயறு போன்ற குறுகிய கால வயதுள்ள பயிர்களைச் சாகுபடி செய்வதே பயனுடையதாக இருக்கும். எனவே, தாங்கள் இம்முயற்சியில் ஈடுபடுவதே நல்லது.

வெள்ளைப் பூண்டு பயிரிட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் தங்களுக்கு இருப்பின், பின்கண்ட முறைகளை மேற்கொண்டு வெள்ளைப் பூண்டு சாகுபடி செய்யலாம்.

வெள்ளைப் பூண்டு பயிரிட நல்ல மண் வாகும், வளமும் தேவை. மணற்பாங்கான நிலமே சிறந்தது. கரிசல் நிலம் போன்ற களிமண் பாங்கான நிலம், பூண்டு பயிரிட ஏற்றதல்ல! வெள்ளைப்பூண்டு பயிரிட, நிலத்தை நான்கு முறை நன்றாக உழுது, கட்டிகளை உடைத்துவிட்டுப் புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி தொழுஉரம், 250 கிலோ 12:24:12 'காம்ப்ளெக்ஸ்' உரத்தையோ அல்லது உருளைக்கிழங்கிற்கு இடும் 6:12:6 என்ற 4-ஆம் எண் கலப்பு உரத்தில் 250 கிலோவையோ அடியுரமாக இட வேண்டும். பிறகு வெங்காயம் நடுவதற்குச் செய்வதுபோல் நிலத்தைப் பாத்திகளாக பிரித்துக் கொள்ள வேண்டும் அல்லது பார்கள் அமைத்துக் கொள்ளலாம்.

நல்ல தரமான பூண்டின் பற்களைப் பிரித்து, திரட்சியான பெரிய பற்களை மட்டுமே விதைக்கவேண்டும். ஒரு ஏக்கர் நடுவதற்கு 300 பட்டணம்படி பூண்டுப்பற்கள் (ஏறத்தாழ 200 கிலோ) தேவைப்படும்.

பாத்திகள் அல்லது பார்களில் தண்ணீர்விட்டுப்பூண்டுப் பற்களை 10 சென்டிமீட்டர் × 10 சென்டிமீட்டர் (4 அங்குலம் × 4 அங்குலம்) என்ற இடைவெளியில் 2 முதல் 3 அங்குல ஆழத்தில் நடவேண்டும். நட்ட 15 முதல் 20 நாட்களில் முதல் களைஎடுக்க வேண்டும். பிறகு 10 நாட்கள் கழித்துத் தண்ணீர் விடவேண்டும். அதன் பின் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்சி வரவேண்டும். நட்ட 45 முதல் 50 நாட்களில் 2-வது களையும், 75 முதல் 80 நாட்களில் மூன்றாவது களையும் எடுக்க வேண்டும். மூன்றாவது களை எடுக்கும் காலத்தில் பூண்டு உருவாகத் துவங்கும். பூண்டு அறுவடைக்கு 10 நாட்கள் முன்பாக தண்ணீர் நிறுத்தப்பட வேண்டும். குருத்து இலைக் காய்ந்தும், தாள் பழுப்பு நிறமாக மாறியும் இருந்தால், பூண்டு அறுவடைக்குத் தயார் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

பூண்டுச் செடிகளைப் பிடுங்கி வயலிலேயே குவியலாகப் போட்டு, 3 நாட்கள் கழித்து, அவற்றை வெய்யிலில் உலர்த்தி முடிகளாகக் கட்டவேண்டும். இவ்வாறு கட்டிய பூண்டின் வேர்களைத் தரையில் தேய்த்து நீக்கிவிட்டுப் பிறகு அவைகளை வீட்டில் புகைப்படும்படி கம்புகளில் கோர்த்து பக்குவப் படுத்தி வைக்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் பூண்டு பயிரிட்டால், ஏக்கருக்குக் குறைந்தது 50 முதல் 60 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 50 கிலோ கொண்டது) மகசூல் கிடைக்கும்.



வினா: நான் மேல்நாட்டு மாடுகளைக் கொண்டு நவீன முறையில் ஒரு நடுத்தரப் பால்பண்ணை அமைக்க விரும்புகின்றேன். இவைகளுக்கு மிகச் சிறந்த இடம் தமிழ்நாட்டில் எங்கு உள்ளது? இத்திட்டத்திற்கு மத்திய, மாநில அரசின் உதவியுண்டா? எங்கே, எப்படி விண்ணப்பிப்பது?

—மு. தயாளன்,
சி. 49-6,
பொன்மலை (அஞ்சல்)
திருச்சி மாவட்டம்.

விடை: மேல்நாட்டு மாடுகளைக் கொண்டு ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில் பால்பண்ணை அமைக்கலாம். பால்பண்ணை அமைப்பதற்கான உதவிகள் பற்றி அறியவும், அவைகளைப் பெறவும் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

நிருவாக மேலாளர்,
தமிழ்நாடு பால்வள நிறுவனம்,
ரித்தர்டன் சாலை,
வேப்பேரி,
சென்னை-600007.

வினா: டி.எம்.வி. 3 எள் பயிரிட விரும்புகின்றேன். 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தில் 100 கிலோவை அடியுரமாகப் போட்டால் அதிக மகசூல் பெறலாம் என்று ஒரு நண்பர் கூறுகிறார். இது அதிகம் என்பது என் கருத்து. எனவே, டி.எம்.வி. 3 எள் பயிரிட ஆராய்ச்சி அடிப்படையான உர அளவு என்ன என்பதைத் தெரிக்கவும்.

—வி. வேணுகோபால்,
விழுப்புரம்,
தென்னார்க்காடு மாவட்டம்,

விடை: திண்டிவனத்திலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், 1967, 1968, 1970 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் கோடைப் பருவத்தில் நடத்தப் பெற்ற சோதனைகளிலிருந்து 'டி.எம்.வி. 3' எள் இரகத்தை இறவையாகப் பயிரிட ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எருவும், 14 கிலோ தழைச் சத்தும், 9 கிலோ மணிச்சத்தும் இடுவதே இலாபகரமானது என்பது தெரிய வருகிறது. அச்சோதனைகளில் தனியாக மணிச்சத்தையும், சாம்பல் சத்தையும் இடுவது, எள் மகசூலில் எந்தவித மாற்றத்தையும் தரவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது. ஆனால் தழைச்சத்தையும், மணிச்சத்தையும் சேர்த்து இடுவது குறிப்பிடத் தகுந்த வகையில் இறவை எள்ளின் மகசூலைப் பெருக்கி உள்ளது. மேற்கூறப்பட்ட அளவிற்கு மேல் அதிக அளவில் உரமிடுவது பயனுடையதல்ல என்பதும் தெளிவாகியுள்ளது. ஆகவே எக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழுஎரு, 14 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச் சத்து, ஆகிய அளவில் உரமிட்டு, டி.எம்.வி. 3 எள் பயிரிடுவதே சிறந்ததும், சிக்கனமானதுமான வழியாகும்.

வினா: கோபர்கான் பயறு, கார்கான் பயறு என்று புதிய பயறு வகைகள் வந்துள்ளதாக கேள்விப்பட்டேன். இந்த ரகங்களில் எது அதிக மகசூல் கொடுக்க வல்லது? இவைகளின் சாகுபடி முறைகள் யாவை?

—வி. தங்கவேல்,
சிதம்பரம்,
தென்னார்க்காடு மாவட்டம்,

விடை: 'கோபர்கான்' (Kopargoan), 'கார்கான்' (Khargoan), 'அஞ்சுகம்' (Pusa Baisaki), 'ஜலாகான்' (Jalagoan) என்பவை புதிதாகத் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டுள்ள பச்சைப் பயறு (பாசிப்பயறு) வகைகளாகும்! தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் அமைந்துள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1970-ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற சோதனைகளில் மேற்கூறிய இரகங்கள் பின்கண்டவாறு மகசூல் கொடுத்துள்ளன.

இரகத்தின் பெயர் (1)	ஏக்கர் மகசூல் (கிலோ) (2)
'கார்கான்'	554
'ஜலாகான்'	481
'கோபர்கான்'	415
'அஞ்சுகம்'	390

இந்நான்கு இரகங்களும் 27-1-70-ல் விதைக்கப்பட்டு



3-4-70-ல் அறுவடை செய்யப்பட்டுள்ளதால், இவைகள் 67 நாட்களில் அறுவடைக்கு வந்துள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே இவைகளின் வயதை 65 முதல் 70 நாட்கள் எனக் கொள்ளலாம். இவைகளை இறவையாகப் பயிரிடுவதே சிறந்தது.

இந்த இரகங்களைப் பொதுவாக ஆண்டு முழுவதும் இறவையில் பயிரிடலாம். ஆனால் பிப்ரவரி, மார்ச்சு, ஜூலை—ஆகஸ்ட் ஆகிய இரு பட்டங்களில் விதைத்தால் அதிக மகசூல் பெறலாம். இந்த இரகங்களைத் தனிப்பயிராகவும் அல்லது கலப்புப் பயிராகவும் சாகுபடி செய்யலாம். இவைகளைப் பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு, 10 கிலோ தழைச் சத்து (50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா) 20 கிலோ மணிச்சத்து (125 சூப்பர் பாஸ்பேட்) இட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 100 கிலோ 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தை அடியுரமாக இடுவது நல்லது.

தனிப்பயிருக்கு ஏக்கருக்கு 10 கிலோ விதையையும், கலப்புப் பயிருக்கு ஏக்கருக்கு 3 கிலோ விதையையும் விதைப்பது சிறந்தது. விதைகளை 30 சென்டிமீட்டர் (1 அடி) × 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நான்காம் நாள் முளைநீர் விட வேண்டும். பிறகு 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. விதைத்த 15-ஆம் நாளும், 45-ஆம் நாளும் களை எடுத்தல் வேண்டும்.

தனிப் பயிரில் குறைந்தது ஏக்கருக்கு 400 கிலோ மகசூலும், கலப்புப் பயிரில் ஏக்கருக்கு 150 கிலோ மகசூலும் பெற இயலும். எனவே, இவைகளைப் பிப்பரவரி-மார்ச்சு மாதத்திலும், ஜூலை-ஆகஸ்ட் மாதத்திலும் இறவையாகப் பயிரிடலாம்.

வினா: என்னுடைய நிலத்தில் நெற்பயிரிட்டு வருகிறோம். அதில் ஒவ்வொரு முறையும் வேலம் பாசி தோன்றி பயிரின் வளர்ச்சியைப் பெரிதும் கட்டுப்படுத்துகின்றன. இதனால் மகசூல் பாதிக்கின்றன. இடும் உரம் அனைத்தையும் அவையே

சாப்பிடுகின்றன. எனவே, வேலம் பாசியைப் போக்குவதற்கு ஏதாவது வழி சொல்லவும்.

—பா. இராசேந்திரன்,
இராந்தம் கிராமம்,
மோரணம் அஞ்சல்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை : நெற் பயிரிடும் நிலத்தில் பாசி தோன்றியிருந்தால், அவைகளை சுட்ட சுண்ணும்பு—மயில் துத்தம் (Copper sulphate) கலந்த கலவையைத் தூவி அழித்திடலாம்.

முதலில் நிலத்திலுள்ள தண்ணீரை வடித்திட வேண்டும். வயல் தண்ணீரை வடித்துவிட்டு சுட்டச் சுண்ணும்பு—மயில் துத்தக் கலவையைத் தூவுதல் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, தண்ணீரை வடிக்க வயலுக்கு வெளியே ஆழமான வாய்க்கால் வெட்டியேனும் வடித்தல் வேண்டும்.

வயலிலுள்ள தண்ணீர் வடிந்த பிறகு ஏக்கருக்கு 1 கிலோ சுட்ட சுண்ணும்புத் தூளையும், 1 கிலோ மயில் துத்தத்தையும் கலந்து வயலெங்கும் ஒரே சீராகத் தூவி விட வேண்டும். இக் கலவையைக் கூடுமான வரை பயிர்களின் மேல் படாமல் தூவ வேண்டும். பிறகு வயலில் இலேசாகத் தண்ணீர் விட வேண்டும். இரண்டு நாட்களுக்குப் பிறகு அத் தண்ணீரை வடித்து விட வேண்டும்.

இவ்வாறு செய்த பிறகும் வேலம் பாசிகள் உயிருடன் இருப்பது தெரிய வந்தால், 10 நாட்களுக்குள் இரண்டாம் முறையாக மேற்கூறியவாறே சுட்ட சுண்ணும்புத் தூளையும், மயில் துத்தத் தூளையும் தூவுதல் சிறந்தது. இதனுல் வேலம் பாசி அறவே ஒழிந்து விடக் கூடும்!

வினு : இறைவை நிலக்கடலைக்கு ஏற்ற பருவங்களையும், அதற்கு ஜிப்சம் போட வேண்டிய அவசியத்தையும் தெரிவியுங்கள்.

—இரா. சண்முகம்,
லால்குடி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விடை : டிசம்பர்—பிப்ரவரி

முதல் ஏப்ரல்—மே வரையான பட்டம் இறைவை நிலக்கடலை பயிரிடச் சிறந்தது. 'ஜிப்சம்' போடுவதால் நிலத்தில் தோன்றும் களர் தன்மை நீங்குவதுடன், நிலக்கடலையின் மகசூலும், தரமும் உயர்கிறது. ஏக்கருக்கு 80 கிலோ 'ஜிப்சம்' போட வேண்டும்.

வினு : நிலக்கடலைக்குப் போராக்ஸ் போடும்படி கூறுகிறீர்கள். போராக்ஸ் போடுவதால் என்ன பயன்? எவ்வளவு போட வேண்டும்?

—எஸ். சுப்ரமணியன்,
பெரிய குளம்,
மதுரை மாவட்டம்.

விடை: 'போராக்ஸ்' என்பது கடைகளில் விற்கப்படும் 'வெண்காரம்' என்ற பொருளையே குறிக்கும். 'போராக்ஸ்' போடுவதால் நிலக்கடலைச் செடிகளில் அதிக காய்கள் தோன்றவும், பருப்புகள் நன்கு திரண்டு முதிர்வதற்கும் உதவுகிறது. 'போராக்ஸ்' போடுவதால் 16 சதம் அளவிற்கு நிலக்கடலையில் அதிக மகசூல் கிடைத்துள்ளது. மானுவாரியில் ஏக்கருக்கு 4 கிலோ வீதமும், இறைவை நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 8 கிலோ வீதமும் 'போராக்ஸ்' போடும்படி பரிந்துரைக்கப்படுகிறது. இதை அடியுரமாகப்போடவேண்டும். ஆனுல் இரசாயன உரங்களுடன் கலந்து போடக்கூடாது. ஆண்டுதோறும் தொடர்ந்து 'போராக்ஸ்' போட வேண்டியதில்லை. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தரம் போட்டால் போதுமானது. அல்லது முதலிரண்டு ஆண்டுகள் போட்டு; பிறகு 2 முதல் 3 ஆண்டுகள் வரை போட வேண்டியதில்லை.

வினு : வெள்ளைப் பன்றி பண்ணை வைப்பதற்குக் குறைந்தது எவ்வளவுமுதலீடுதேவைப்படும்? அரசு இதற்கு என்ன உதவிகளைச் செய்கிறது. இதில் இலாபமுண்டா? யாரை அணுக வேண்டும். இது பற்றிய விவரங்களைத் தயவுசெய்து உடனே தெரியப்படுத்தவும்.

—ஆர். முத்தையா,
46, மீனுட்சிபுரம் புதுத் தெரு,
காரைக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்

விடை : ஒரு வெள்ளைப் பன்றிக் குட்டி 3 ராத்தல் உணவு தின்ருல், அதன் எடை 1 ராத்தல் கூடுகிறது! ஆதலால் குறைந்த செலவில் பன்றிப் பண்ணை அமைத்து அதிக இலாபம் பெறமுடியும்! வெள்ளைப் பன்றிப் பண்ணை அமைக்க உங்களிடம் போதிய தீனி வசதி இருப்பின் அதிக முதலீடு தேவையில்லை. முதலீடு செய்ய வேண்டிய தொகை நீங்கள் வளர்க்கும் பன்றிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே அமையும். நீங்கள் குறைந்தது 10 பன்றிகள் வளர்ப்பது சிறந்தது.

அரசு கால்நடைப் பண்ணைகளில் 'யார்க்ஷயர்' என்னும் வெள்ளை இனப் பன்றியின் பெண் குட்டிகள் எடையின் பேரிலும் (கிலோ ரூபாய் 2 வீதம்), ஆண் பன்றிக் குட்டிகள் (எடை எவ்வளவு இருந்தாலும்) மலிவான விலையில் அதாவது 10 ரூபாய் வீதமும் விற்கப்படுகின்றன. 10 பெண் பன்றிக் குட்டிகளையும், 1 ஆண் பன்றிக் குட்டியையும் நீங்கள் வளர்ப்பது சிறந்தது.

பன்றி 8 மாதங்களில் குட்டி போடும்! பன்றியின் கர்ப்ப காலம் 112 நாட்களாகும். ஒரு தடவை கர்ப்பமுற்ருல் 10 முதல் 12 குட்டிகள் போடும். எனவேஒரு 'யார்க்ஷயர்' பெண் பன்றி வளர்த்தால் ஒரு ஆண்டின் முடிவில் குறைந்தது 8 பன்றிக் குட்டிகளும், இரண்டு ஆண்டு முடிவில் 25 பன்றிக் குட்டிகளும் கிடைக்கும். நீங்கள் 10 பெண் பன்றிக் குட்டிகள் வளர்ப்பதாகக் கொண்டால், ஒரு ஆண்டின் முடிவில் உங்கள் பன்றிப் பண்ணையில் குறைந்தது 80 பன்றிக் குட்டிகளும், இரண்டு ஆண்டு முடிவில் 250 பன்றிக் குட்டிகளும் உற்பத்தியாகிவிடும்!

தாங்கள், வளர்க்கும் பன்றிகளைத் தெருவில் திரியவிட்டுக் கண்டவைகளைத் தின்னவிடாமல், கொட்டகையிலேயே அடைத்து, தரமான தீவனம் அளித்து வளர்த்தல் நல்லது.

பன்றித் தீவனக் கலவையை

பின் கண்டவாறு தயாரித்துக் கொள்ளலாம்.

சோளம்	...60 பாகம்
நிலக்கடலைப் பிண்ணாக்கு	...20 பாகம்
கோதுமைத் தவிடு	12 பாகம்
மீன் தூள்	... 5 பாகம்
தாது உப்புகள்	...1.5 பாகம்
உணவு உப்பு	...1.5 பாகம்
மொத்தம்	...100 பாகம்

மேற்கூறியவாறு கலக்கப்பட்ட தீவனக் கலவையைப் பன்றிக்குட்டிகளின் எடைக்குத் தக்கவாறு கால்நடைப் பராமரிப்புத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் நாள்தோறும் கொடுத்து வருதல் வேண்டும். இவ்வாறு தீவனக் கலவையைக்கொடுத்துப் பன்றி வளர்த்தால், பன்றிப் பண்ணை இலாபகரமாக இருக்கும்.

தாங்கள் மலிவு விலையில் பன்றிக் குட்டிகளை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள செட்டி நாடு கால்நடைப் பண்ணையிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். இவ்வாறு வாங்குவதற்கு உங்கள் ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலர் மூலமாக மனு அனுப்ப வேண்டும்.

வினா: 1—1—74 'தமிழரசு' இதழில் 'வெண்மைப் புரட்சிக்குக் கர்ஞல் காட்டும் பாதை' என்ற கட்டுரையில், பால் பண்ணைப் பொறியியல் ஒரு ஆண்டுக்கால 'டிப்ளமா' கல்வி அளிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. இக் கல்வி பயில கல்வித் தகுதி என்ன இருக்க வேண்டும்? விண்ணப்பப் பாரம் எங்கு கிடைக்கும்? பயிலும் இடம், பயிலும் காலம் ஆகியவற்றையும், விண்ணப்பம் அனுப்ப வேண்டிய காலம் ஆகியவற்றையும் தெளிவாகக் கூறவும்.

—இரா. இராமு,
குருந்தமடம்,
வதுவார்பட்டி அஞ்சல்,
இராமநாதபுரம்மாவட்டம்.

விடை: தாங்கள் கேள்விக்குரிய முழு விளக்கமும் அறிய, பின் கண்ட முகவரிக்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

The Director,
National Dairy Research
Institute,
Karnal (Hariyana)-132001.

வினா: அரசு ஊழியர்களுக்கு திருமணக் கடன் அதிகபட்சம் எவ்வளவு வழங்கப்படுகிறது? எத்தனை தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்? ஒன்றியப் பள்ளியில் பணியாற்றும் நான் யாருக்கு மனுச்செய்ய வேண்டும்?

—நேவிஸ்,
அரசம்பட்டு (அஞ்சல்),
(வழி) நெடுங்குணம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

விடை: அரசு ஊழியர் ஆண் எனின், அதிக பட்சம் 1,000 ரூபாயும், பெண் எனின் அதிக பட்சம் 2,000 ரூபாயும் திருமணக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. இக் கடனை 5 ஆண்டுக் காலத்தில் அதாவது 60 மாதத் தவணைகளில் திருப்பிக்கட்ட வேண்டும். ஒன்றியப் பள்ளியில் பணியாற்றுகின்ற நீங்கள் உங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு மனு செய்ய வேண்டும்.

வினா: தமிழரசு 1—11—73 இதழில் கோழி வளர்ப்பு முறை பற்றி விளக்கமான விஷயங்கள் அனைத்தும் உள்ளன. விஞ்ஞான முறையில் கோழி வளர்ப்பை மேற்கொள்வது, ஏழைகளுக்கு எட்டாத விஷயம்! இதைத் 'தமிழரசு' விவரமாகக் கூறி விளக்கியுள்ளது. எனது ஏழு ஆண்டு அனுபவத்தைக் கூறுகின்றேன். தற்பொழுது ஒயிட் லெக்கார்ன் அல்லது மேயர் இனக் குஞ்சுகள் எங்கு கிடைக்கும்? யாரை அணுகுவது? அதன் முகவரியைத் தயவு செய்து கூறவும்.

—எஸ். பி. வேலுச்சாமி,
ஓமியோ மருத்துவர்,
சேனுபதிபாளையம்.

விடை: 'வெள்ளைலெக்கார்ன்' 'மேயர்' முதலிய இனக் கோழிக் குஞ்சுகளை செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காட்டுப்பாக்கம், தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒசூர், மதுரை மாவட்டத்தில் உள்ள கப்பலூர் ஆகிய இடங்களில் உள்ள கோழிப் பண்ணைகளிலிருந்து பெறலாம். உங்கள் ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலர் மூலம் மனு அனுப்பி உங்கள் தேவையைப் பெறலாம்.

—ஆர். எம்.

இங்கே ஒரு புதிய சமுதாயம் உருவாகிறது!

புதுப்பட்டி பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் இருப்போரின் குழந்தைகள் மதுரை சிறுவர் பள்ளியில் (பாலமந்திரத்தில்) படிக்கிறார்கள்.

'எல்லாரும் ஒரு குலம்!'

'எல்லாரும் ஒரு நிறை!'

'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்!'

'ஏற்றத் தாழ்வு இல்லாத சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்!'

—இந்தச் சொற்றொடர்கள் சமதர்ம சமுதாய அமைப்பை விரும்பும் எல்லாராலும் சொல்லப்படுகின்றன.

இந்த எண்ணத்தைச் செயலாக்கிட நமது அரசு வகுத்துள்ள திட்டங்கள் ஏராளம்!

புதிய சமுதாய அமைப்புக்களுக்கான அந்தத் திட்டங்களில், புனிதமான திட்டமாகவும் கருதப்படுவது பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் ஆகும்.

ஏளனத்துக்கு ஆளாகி இரந்துண்டு வாழும் தொழுநோயாளிக்குப் புது வாழ்வு தரும் அந்தத் திட்டம் புனிதமானதுதான்!

நாளைய சமுதாயத்திலும் கேவலத்துக்குரிய நிலையில் அவர்கள் வாழக் கூடாது என்பதற்காக அமைந்த இந்தத் திட்டத்தினால் புதிய வாழ்வு பெறக் கொடுத்து வைத்தவர்கள்.

இந்த உண்மையை அறிந்திட ஒரு பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்திற்குச் செல்வோம்.

மதுரை—அழகர் கோவில் சாலையில் உள்ள கடச்சனேந்தல் என்ற ஊரிலிருந்து சென்றால் வி. புதுப்பட்டி என்று அழைக்கப்படும் புதுப்பட்டிக்குச் செல்லலாம்.

மலை சூழ்ந்த இடம் — தொலைவில், அந்தப் பகுதி மக்களால் ஆனைமலை என்றழைக்கப்படும் குன்று தெரிகிறது.

புதிதாகக் கட்டப்பட்ட கல்லூரி விடுதிகளின் கட்டடமோ என்று காண்போர் வியக்கும் வண்ணம் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்.

அவைதான் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள். அமைதி தவழும் அழகான சூழ்நிலையில் இந்தக் கட்டடங்களுள் மருத்துவ மனை, ஆப்ரேஷன் தியேட்டர் எல்லாம் உண்டு. இரண்டு டாக்டர்களும் உண்டு.

தொழு நோயாளிகளுக்கு அப்போதைக்கு அப்போது

மந்திரமா ? தந்திரமா ? நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

கடந்த 22—4—'73 அன்று திறக்கப்பட்ட இந்தப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் மொத்தம் 430 பேர் உள்ளனர். இவர்களில் ஆண்கள் 293 பேர். பெண்கள் 99 பேர். குழந்தைகள் 38 பேர்.

பிச்சை எடுத்து வாழ்ந்தவர்களின் உழைப்பினால் காய்கறித் தோட்டம் ஒன்று உருவாகியுள்ளது. முள்ளங்கி, தக்காளி, வெண்டை, கத்தரிக்காய், பச்சை மிளகாய், வாழை முதலியன பயிரிட்டுள்ளார்கள்.

இங்கே கோழிப் பண்ணையும் இருக்கிறது. இவ்வளவு வசதிகள் இருப்பதால் உணவுக்கு என்ன குறை?

காலையில்—பொங்கல். டீ.

மதியம்—சாப்பாடு பொரியல்.

மாலையில்—டீ

இரவு — சாப்பாடு.

வாரத்துக்கு ஒரு நாள் அசைவ உணவு.

உணவுக் கவலையில்லை! உறையுளுக்கு அருமையான கட்டடம்! நாள்தோறும் மருத்துவம் பார்த்துக் கொள்ளும் வாய்ப்பு. இந்தச் சூழலில் 59 பேர் குடும்பத்தோடு வாழ்கின்றனர்.

இங்கு வந்த பிறகு ஆறு பேர் காதல் திருமணம் — கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

புதுப்பட்டி பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் இருப்போரின் குழந்தைகளில் 13 பையன்கள், 10 பெண்கள் மதுரையிலுள்ள சிறுவர் பள்ளியில் (பால மந்திரம்) பயின்று வருகிறார்கள்.

மறுவாழ்வு இல்லத்திலுள்ளவர்களின் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான வசதிகளை நமது அரசு செய்து கொடுத்துள்ளது. அந்தச் சின்னஞ் சிறிசுகளை தொழுநோய் தொற்றிக் கொள்ளாமலிருக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மறுவாழ்வு இல்லத்திருப்போருக்கு வருவாய் தரும் தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன. தையல் வேலை, மரவேலை, பாய் பின்னுதல் முதலிய தொழில்களும் கற்பிக்கப் படுகின்றன.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் இன்னிசை நிகழ்ச்சி தொடங்குகிறது.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் தங்கியிருப்போர்களில் சிலரைச் சந்தித்து அவர்களுடைய பழைய வாழ்க்கைக்கும் இன்றைய வாழ்க்கைக்கும் உள்ள வேற்றுமைகளைக் கேட்கின்றோம்.

இப்பொழுதுதான் 'மனிதர்களாகத் தாங்கள் மாறி வரும் உண்மையை' நன்றிப் பெருக்குடன் எடுத்துரைக்கின்றார்கள். இந்தப் பணியைச் செய்த நமது அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கிறார்கள்.

தொழு நோயாளிகளாகப்—பிச்சை எடுப்பவர்களாகச்—சாலைகளில் அலைந்த பொழுது அவர்களுடைய நோயைப் பற்றிக் கவலைப் பட்டதில்லை. நோய்க்கு மருத்துவம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டதில்லை.

ஆனால், இன்று நிலைமை மாறி விட்டது.

அவர்களுக்குப் பக்கத்திலேயே மருத்துவ மனை உள்ளது. சமுதாயத்திலே உள்ள மற்றவர்கள் போல் தாங்களும் வாழ வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. தங்களால் முடியாவிட்டாலும் தங்கள் குழந்தைகளாவது சமுதாயத்தில் மதிப்புள்ள மனிதர்களாக வளர வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தங்களை இப்படி நினைக்கச் செய்தது தமிழக அரசின் பணி என்பதை மனமாரச் சொல்லி வாழ்த்துகிறார்கள்.

இரந்து வாழ்தலை மிகக் கொடியதாகக் கருதத் தொடங்கிவிட்டார்கள்.

ஒரு காலத்தில் மிகச் சுதந்தரமாக எங்கு வேண்டுமானாலும் சென்று கொண்டு, எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து கொண்டு, உடல் உழைப்பை நம்பாமல் திரிந்து கொண்டிருந்தவர்கள்—இன்று பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்திலேயே தங்கியிருப்பது கடினமாக இருக்குமே என்று நாம் நினைக்கலாம். ஆனால், உண்மை நிலை வேறு!

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் மிகுந்த மகிழ்ச்சி

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த ஆண்கள் கைப்பந்து விளையாடுகிறார்கள்.

நாடகங்களை உருவாக்கி அரங்கேற்றிவரும் ராபர்ட் கலீலும் அவர் மனைவி தெரேஸாவும்.

யுடன் இருந்து வருகிறார்கள்.

இவர்களுக்கு இங்குபொழுது போக்கத்தான் என்ன குறைவு!

பெண்கள் கைப்பந்து விளையாடுகிறார்கள்.

ஆண்களும் கைப்பந்து விளையாடுகிறார்கள்.

விளையாட்டுகள் மட்டுமல்ல; மந்திர வேலைகள் என்ற பெயரில் தந்திரங்களால் பல அற்புதங்களைச் செய்து காட்டுகிறார் ஒருவர். அவரும் இந்தப் பிச்சைக்காரர் இல்லத்திலே உள்ள ஒருவர்தான்.

புரபசர் சாக்ரடீஸ் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் அவர் மந்திரமா? தந்திரமா? அறியாமையா? அறிவா? என்ற பெயரில் வேடிக்கைகள்—வித்தைகள் செய்து காட்டுகிறார். மந்திரங்கள் என்ற பெயரில் செய்யப்படும் தந்திர வேலைகளை விளக்குகிறார்.

நாடக அரங்கம் போன்ற மேடை இருக்கிறது. அங்கே இன்னிசைக் கச்சேரி நடைபெறுகிறது.

மதுரை கிருஷ்ணன் என்பவர் இசை மழை பொழிகிறார்.

ஒரு காலத்தில் நன்கு பாடிக் கொண்டிருந்தவர். தொழு நோய்க்கு உட்பட்டு இன்று பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் அடைக்கலம் தேடிக் கொண்டுள்ளார்.

'காலமென்னும் சிற்பி செய்யும்' என்று திரைப்படப் பாடலை பாடுகிறார். திரைப் படப் பாடல்தான் பாடுவார் என்று எண்ணும்போது பாகேஸ்ரீ ராகத்தில் 'தேனாட்சி நடக்குது . . .' என்று தொடங்கிவிடுகிறார்.

யாரிடம் இசை பயின்றார் என்று வினவுகிறோம். 'கேள்வி ஞானம்தாங்க . . .' என்று பதிலுரைக்கிறார்.

கேள்வி ஞானத்திலேயே இப்படி இசை விருந்தளிக்கின்றார் என்று நாம் வியந்து பார்க்கும் பொழுது 'இன்னும் இன்னிசைக் கருவிகள் இருந்தால் நன்றாக இருக்கும்' என்கிறார் பாடகர் கிருஷ்ணன்.

அதே மேடையில் நாடகமும் அரங்கேறியுள்ளது. நாடகத்தை எழுதித் தயாரித்தவர் ராபர்ட் கலீல். அவரும் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் உள்ளவர்தான். அவருடைய பெயரில் கிறித்துவப் பெயரான ராபர்ட்டும் முகமதியப் பெயரான கலீலும் இணைந்துள்ளது.

ஒரு காலத்தில் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்த ராபர்ட் கலீல் எட்டாவது வரை படித்தவர். தொழு நோயால் இன்று பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தை அடைக்கலம் அடைந்துள்ளார்.

ராபர்ட் கலீல் தன் பெயருக்கு ஏற்ற வகையில் எழுதியுள்ள நாடகம் —'எம்மதமும் சம்மதம்'.

ராபர்ட் கலீலும் அவர் மனைவி தெரஸாவும் முக்கிய வேடங்களில் நடித்தனர். நாடகங்களில் நடித்த மற்ற நடிகர்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் உள்ளவர்கள்தான்.

வாத்தியம் இசைப்போரும் இங்கு இருக்கிறார்கள். எலெக்டிரிஷியனாக வேலை பார்த்து பின்னர் தொழு நோயால் இந்நிலைக்கு ஆளானவர்களும் இருக்கிறார்கள்.

இவர்களின் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல; கல்விக்கும் வசதி செய்துதரப்பட்டுள்ளது. முதியோர் கல்வி கற்றுக் கொடுக்கும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

எல்லா வகையிலும் தாழ்ந்து நின்றவர்கள் வாழ்வு பெறவும் அவர்களின் சந்ததிகள் உயர்ந்து நிற்கவும் பேருதவி செய்து கொண்டு வருகிறது நமது அரசு.

அங்கே அமைதியான முறையில் புதிய சமுதாய அமைப்புக்குரிய அடிப்படை உருவாகி வருகிறது. அதனால் நாம் இப்படிச் சொல்வதில் தவறு இல்லை.

மறுவாழ்வு இல்லங்கள்
புனித ஆலயங்கள்.

— மா

தெரிந்து கொள்ளுங்கள்:

உலகில் உயிர்வழி தோன்றியது எப்போது?

பூமியில் உயிரினங்கள் தோன்றியது எப்போது என்பதை அறிய முதலில் பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் உயிரினங்களுக்குத் தேவையான உயிர்வழி (ஆக்ஸிஜன்) தோன்றியது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பூமி தோன்றிய நாள் முதல், பூமியிலுள்ள பல்வேறு கூட்டுப் பொருள்களிலும் உயிர்வழி கலந்திருந்த போதிலும், வாயு மண்டலத்தில் அது ஒரு தனிப் பொருளாக—தாவரங்களில் ஒளிச் சேர்க்கை காரணமாகத்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

தற்போது அறிவியல் வல்லுநர்கள், இப்பிரச்சினையை 'ஐசோடோப்' (Isotope) இரசாயனத்தின் உதவி கொண்டும், புதை உயிர்த் தட ஆய்வு கொண்டும் ஆராய்ந்து வருகின்றனர். வாயு மண்டல உயிர் வழியும் பூமிப் பரப்பிலுள்ள கந்தகமும் கலந்த கூட்டுப்பொருள்கள் பூமியில் காணப்படுவதால், அவற்றை ஆராய்வது இப்பிரச்சினைக்கு முடிவு காண்பதைச் சாத்தியமாக்கும் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

பல்வேறு பாக்டீரியாக்கள் கந்தகத்தை உறிஞ்சுகின்றன; அதே சமயத்தில் அதன் ஐசோடோப்புகளையும் தனிமைப்படுத்துகின்றன. உலகக் கடல்களில் நிறைந்துள்ள கந்தகம் முழுவதுமே, இந்தக் கிரியைக்கு ஆளாகியுள்ள அளவுக்கு இப்போக்கு தீவிரமாக இருந்துள்ளது.

விண் வீழ் கொள்ளிகளில் காணப்படும் கந்தகத்தைவிட, கடலில் காணப்படும் கந்தகம் அணு எடை அதிகமுள்ளதாகும். விண்வீழ் கொள்ளிகளிலுள்ள கந்தகத்தின் 'ஐசோடோப்பு' இயைபுதான், முதன்மையான இயைபாகக் கருதப்படுகிறது.

300—350 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமி தோன்றியிருக்க வேண்டும். அந்தக் காலத்தில், கடல் நீரில் 'சல்பேட்டு'கள் இருந்தனவா? அவை இன்றும் நீரில் உள்ளனவா?

அண்மையில் சோவியத் நாட்டில் பைகால் பகுதியிலும், அல்தன், தெற்கு பாமீர் பகுதியிலும் மிகப் பழமையான சல்பேட் படிவங்களை அந்நாட்டு அறிவியல் வல்லுநர்கள் கண்டு பிடித்துள்ளனர். அவை அணு எடை அதிகமான கந்தக வகையைச் சார்ந்ததாக உள்ளது. அவை உலகின் மிகப் பழங்கால 'சல்பேட்' வகையைச் சார்ந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். பூமியில் உயிரினம் தோன்றிய காலத்தே உருவான கடல் படிவப் பாறைகளிலிருந்த சல்பேட்டுகள் அவை என்பதும் அவர்களது கணிப்பாகும்.

அல்தன், பால்டிக், இந்தியப் புவியியல் படிவப் பாறைகளில், நுண்ணுயிரினங்களின் எச்சமச்சங்களை (கழிவுகளை), ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஐஸோடோப் முறையின் மூலம் அவற்றை ஆராய்ந்தபோது, அவற்றின் வயது 300 கோடிக்கும், 350 கோடிக்கும் இடையேயானதாக இருக்க வேண்டும் என்று தெரிய வந்துள்ளது.

எனவே, பூமியின் வாயு மண்டலத்திலுள்ள உயிர்வழி (ஆக்ஸிஜன்) 300 கோடி ஆண்டுகளுக்கு முன்னே தோன்றியிருக்க வேண்டும். அந்தக் காலத்தில்தான் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த தாவரங்கள் ஒளிச் சேர்க்கையைத் தொடங்கியிருக்க வேண்டும். அதன் விளைவாக வாயு மண்டலத்தில் உயிர்வழி சேகரமாகத் தொடங்கியிருக்க வேண்டும்.

அந்தக் காலமும் இந்தக் காலமும்

ரா. பொன்ராசன்

வீட்டு மாடி உச்சியில்
விளக்கை ஏற்ற வேண்டுமேல்
பாட்டி உங்கள் நாளிலே
பட்ட பாடு கொஞ்சமோ?

இன்று எங்கள் நாளிலே
எந்த மலை விளக்கையும்
இமைக்கும் சிறு பொழுதிலே
ஏற்றி வைக்கக் கற்றுளோம்!

உங்கள் நாளின் ஓசைகள்
ஓங்கித் தாவிப் பாயினும்
ஒரு சிறிது தூரத்தில்
உருச் சிதைந்து பாயுமே!

இன்று எங்கள் நாளிலே
எந்த நாட்டுச் செய்தியும்
காலம் தூரம் வென்றுடன்
கணத்தில் வந்து சேருதே!

அந்த நாளில் காசிக்கு
யாரோ சென்று வந்ததை
விந்தை யாகப் பேசினீர்
வியந்து நாங்கள் கேட்டனம்.

இந்த நாளில் நிலவுக்கே
ஏறி விட்ட மானுடர்
வானின் வேறு கோளுக்கும்
வழி வகுத்துக் கொண்டுளார்.

இந்தக் கால விந்தைகள்
இன்னும் கோடி கோடியாம்!
அத்தனைக்கும் காரணம்
அறிவியலின் வளர்ச்சியாம்!



பணம் காய்க்கும் பருத்தி

சுஜாதா!



இந்தியாவிலுள்ள பருத்தி நூல் தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் 7.68 இலட்சம் பேல் (1961 முதல் 1966 வரை ஆண்டுச் சராசரி) நீண்ட இழைப் பருத்தி (Long stable cotton) தேவைப்படுகிறது: இவைகளை வெளி நாடுகளிலிருந்தே தற்சமயம் இறக்குமதி செய்து வருகிறோம். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பருத்தியில், 2.94 இலட்சம் பேல்கள் 1 3/16 அங்குல இழை நீளம் உள்ள தொகுதியிலும், 4.74 இலட்சம் பேல்கள் 1 3/16 அங்குலத்திற்குக் குறைந்த இழை நீளம் உள்ள தொகுதியிலும் அடங்குகின்றன.

1 3/16 அங்குலம், மற்றும் அதற்கு மேலும் அதிக இழை நீளம் உள்ள மிக நீண்ட இழைப் பருத்தியை Extra Long Stable Cotton தற்சமயம் பெரும்பாலும் ஐக்கிய அரபுக் குடியரசு மற்றும் சூடான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இவ்வாறு இறக்குமதியாகும் பருத்தியின் மதிப்பு ஆண்டிற்கு ரூ. 30 கோடிக்கும் மேலாகிறது.

1 1/16 முதல் 1 3/16 அங்குல இழை நீளம் உள்ள பருத்தியைப் பொறுத்த மட்டில், வெளி நாட்டு பருத்திக்கு ஒப்பான இந்திய பொறுக்கு தினுசுகள் பல உள்ளன. அவைகளுள் முக்கியமான தினுசுகளாவன :

(1) குஜரத்—67,

(2) ஹைபிரிட்—4,

(3) எம்.யு.சி. தினுசுகள்,

(4) பட்னுவார்—1,

(5) பி. 1007.

தீவிர மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம், மேற்கண்ட தினுசுகளின் உற்பத்தியைப் பெருக்குவதால் 1 1/16 முதல் 1 3/16 அங்குல இழை நீளம் உள்ள பருத்தி இறக்குமதியை நிறுத்தி விட இயலும்.

ஆனல் 1 3/16 அங்குலம் மற்றும் அதற்கு மேலும் அதிக இழை நீளமுள்ள பருத்தியைப் பொறுத்த மட்டில் பெருமளவு மேம்படுத்த, பருத்தி ஆராய்ச்சியில் ஒரு பெரிய போர் வேக யுக்தி தேவைப்பட்டது.

"சீ ஐலண்ட்" தினுசு என்னும் பருத்தியை நம் நாட்டில் புகுத்த மேற்கொண்ட முயற்சியில் வரையறுக்கப் பட்ட வெற்றியே கிடைத்தது. எனவே, இதர சிறந்த "பார்படென்ஸ்" தினுசுப் பருத்தியை இந்தியாவில் புகுத்த மேற்கொண்டு ஆராய்ச்சி தேவைப்பட்டது.

இந்தியாவில் வணிக அடிப்படையில் சாகுபடி செய்வதற்கும், 80 முதல் 100-ஆம் நம்பர் நூல் வரை நாற்பதற்கும் ஏற்றதுமான 1 3/16 அங்குலத்திற்கு மேல் இழை நீளம் உள்ள ஒரு எகிப்திய "பார்படென்ஸ்" வகைப் பருத்தியை உருவாக்கி வெளியிடவும், இவ்வகைப் பருத்தியின் தேவையில் தன்னிறைவு பெறவும் வேண்டுமென்ற குறிக்கோளுடன் கோயம்புத்தூரில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச் நிலையத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக இந்தியாவில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற எகிப்திய "கர்னுக்" தினுசிலிருந்து மறு தேர்வு செய்யப்பட்ட ஒரு "பார்படென்ஸ்" பருத்தித் தினுசு உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இத்தினுசின் பெயர் "சுஜாதா" எனப் படுகிறது. பரிசோதனையில் இருக்கும்பொழுது இதை "கோ-பூசா எகிப்தியன்" (Co-Pusa Egyptian) என்று அழைக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் கோடைகால இறைவை பருத்திப் பகுதிக்கும், மாரிகால பருவப் பருத்திப்பகுதிக்கும் 'சுஜாதா" ஏற்றது. இத்தினுசு, கர்நாடகம் ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, தென் ராஜஸ்தான் பகுதிகளில் இறைவையாகப் பயிரிட ஏற்றதாகவும் உள்ளது.



"சுஜாதா"வின் முக்கிய குணங்கள்

* செடியின் உயரம்: — 100 சென்டிமீட்டர் முதல் 120 சென்டிமீட்டர்.
* முதிர்ச்சி:—

	கோடைகாலப்பயிர் (பிப்ரவரி - ஆகஸ்ட்)	மாரிகாலப்பயிர் (செப் - மார்ச்சு)
பூ பூப்பதற்கு ஆகும் நாள்	விதைத்ததிலிருந்து 65	விதைத்ததிலிருந்து 75
பருத்திக்காய் வெடிப்பதற்கு ஆகும் நாள்	,, 120	,, 130
பருத்தி எடுப்பது முடிவடையும் நாள்	,, 175	,, 185

* வயல் நிலைமையில் கருங்கிளை நோயால் தாக்கப்படாது!
* இலைப்புள்ளி நோய்களின் தாக்குதல் மிகவும் குறைவு!
* "சீ ஐலண்ட்" பருத்தியைவிடக் குறைந்த அளவுக்கே தத்தத்துப்பூச்சி, பேன், 'திரிப்ஸ்' ஆகியவைகளினுல் இத்தினுசு தாக்கப்படும்!
* காய்ப்புழுக்களின் தாக்குதலும் சுமாராகவே உள்ளது. இதை முறைப்படி மருந்து தெளித்துக் கட்டுப்படுத்திவிடலாம்!
* "சீ ஐலண்ட்" பருத்தியைவிட அதிக அளவுக்கு உண்ணியின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும்!
* "சீ ஐலண்ட்" பருத்தியைவிட இத்தினுசில் இலைகள் குறைவு இதனுல் ஒரு செடியின் நிழல் அடுத்த செடியில் விழாது!
* "சீ ஐலண்ட்" பருத்திச்செடி காய்த்தவுடன் சாய்ந்துவிடக் கூடும். ஆனுல் இத்தினுசு மிகவும் அதிகமாக காய்களைக் கொண்டிருக்கும் பொழுதும், சாயாது!

* தற்பொழுது இறக்குமதியாகும் "மெனுேபி" என்ற எகிப்தியப் பருத்தியைவிட 'சுஜாதா' பலவகைகளில் சிறந்தது என்பதை பின்கண்ட அட்டவணை விளக்கும்:

வரிசை எண்	குணங்கள்	'மெனுேபி'	'சுஜாதா'
1.	இழையின் சராசரி நீளம் (மில்லி மீட்டர்)	30.2	30.8
	(அங்குலம்)......	1.19	1.21
2.	இழை நீள வேறுபாடு சதவீதம்	22.6	17.8
3.	இழையின் நுண்தன்மை (மைக்ரோனர் அளவு)	3.9	3.9
4.	இழையின் முதிர்ச்சி	0.74	0.74
5.	வலிவு (Pressly index lb/kg)	9.00	9.20

* "சீ ஐலண்ட்" பருத்தியை விட "சுஜாதா" அதிக அளவு மகசூலை அளிக்கும் என்பதைப் பின் கண்ட அட்டவணைகள் விளக்குகின்றன.

(1) 75 செ.மீ. × 40 செ.மீ. இடைவெளிவிட்டு, குழிக்கு 2 செடி வீதம் விட்டு எக்டேருக்கு 67 கிலோ தழைச்சத்து, 34 கிலோ மணிச்சத்து, 34 கிலோ சாம்பல் சத்து இட்டு, 1967-ஆம் ஆண்டு கோடைப்பருவத்தில் கோயம்புத்தூரில் இறவையாகப் பயிரிடப்பட்டத்தில் கிடைத்த மகசூல்

தினுசு	பருத்தி மகசூல் (கிலோ) எக்டேர்	அறைவைச் சதவீதம்	சராசரி இழைநீளம்	வலிவு (பௌ மி. கி.)
1. ''சுஜாதா''	1,581	35	1.15	8.9
2. சீ. ஐலண்ட் ஆண்ட்ரூஸ்	925	32	1.15	7.9

(2) 1967-68ஆம் ஆண்டு மாரிகாலப் பருவத்தில் (செப்டம்பர் 1967-ல் விதைக்கப்பட்டது) கோயம்புத்தூரில் நடத்தப் பெற்ற ஒருங்கிணைந்த மகசூல் சோதனையில் கிடைத்த மகசூல்.

	பருத்தி மகசூல் (கிலோ/எக்டேர்)			
	பூச்சி மருந்து தெளித்துப் பாதுகாக்கப் பட்டது.	பூச்சி மருந்து தெளிக்காதது	அறைவைச் சதவீதம்	சராசரி இழைநீளம்.
1. ''சுஜாதா''	2,009	1,333	35.0	1.20
2. சீ. ஐலண்ட்	819	688	30.0	1.14

(3) பல்வேறு இடப் பரிசோதனைகளில் (1968 கோடை, முன்பருவம் மற்றும் மாரி கால பருவங்களில்) கிடைத்த மகசூல்.

இடம்	பருவம்	பருத்தி (கிலோ எக்டேர்)
1	2	4
1. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலைய மண்டல ஆராய்ச்சி நிலையம். கோயம்புத்தூர்.	கோடை	1,853
2. ,, ,,	மாரிகாலம்	1,740
3. பருத்தி இனப்பெருக்க நிலையம். கோயம்புத்தூர்	,,	2,052 (ஆண்ட்ரூஸ்-923)
4. பேரூர் செட்டிப்பாளையம், கோயம் புத்தூர்	கோடை	1,927
5. வேலான் குறிச்சி, கோயம்புத்தூர்	கோடை	2,595
6. வேடப்பட்டி. ,,	,,	2,965
7. மாநில விதைப்பண்ணை, கண்ணம் பாளையம், கோயம்புத்தூர்	,,	2,137
8. மாநில விதைப்பண்ணை, சத்திய மங்கலம் (கீழ்பவானித் திட்டப்பரப்பு)	,,	1,557
9. கோவில்பட்டி, திருநெல்வேலி	மாரிகாலம்	1,946

''சுஜாதா'' சாகுபடி முறைகள்

தமிழ் நாட்டில் இறைவையாகப் பயிரிட ஏற்றது. எனினும், குறிப்பாக கோவை மாவட்டத்திற்கு ஏற்ற மிகச் சிறந்த இரகமாகும்.

வயது: 170 முதல் 180 நாட்கள்.

பருவம்: கோடைப் பயிர்: பிப்ரவரி—மார்ச் முதல் செப்டம்பர் வரை (மாசி—பங்குனி முதல் ஆவணி புரட்டாசி முடிய).

மாரி காலப் பயிர்: ஆகஸ்ட்—செப்டம்பர் முதல் பிப்ரவரி—மார்ச் வரை. (ஆவணி—புரட்டாசி முதல் மாசி — பங்குனி முடிய).

விதை அளவு: ஏக்கருக்கு 5 கிலோ.

விதையுடன் மருந்து கலத்தல்: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' கலந்து 6 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைக்கவும்.

நிலம் தயாரித்தல்: 4 முறை நிலத்தை நன்கு உழவும். 75 செ.மீ. (2.5 அடி அல்லது 30 அங்குலம்) இடைவெளிக்கு ஒன்று வீதம் கிழக்குமேற்காகப் பார் பிடிக்கவும் அல்லது நிலத்தின் சரிவிற்கு ஏற்ப பார்களை அமைக்க வேண்டும்.

உரமிடுதல்: அடி உரம்: கடைசி உழவுக்கு முன் ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எருவையும், ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்துக் கொடுக்கக் கூடிய யூரியா, 31 கிலோ அல்லது அமோனியம் சல்பேட் 70 கிலோ, ஏக்கருக்கு 14 கிலோ மணிச் சத்து கொடுக்கக் கூடிய சூப்பர் பாஸ்பேட் 87 கிலோ, ஏக்கருக்கு 14 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய மூரியேட் ஆஃப் பொட்டாஷ் 23 கிலோ ஆகியவைகளை இடலாம். அல்லது பார்களின் அடிப் பாகத்தில் மண்ணால் மூடிவிட வேண்டும்.

மேற்கூறிய தனி உரங்கள் கிடைக்கவில்லையெனில், 14 : 14 :14: ''காம்ப்ளெக்ஸ்'' உரத்தில் ஏக்கருக்கு 100 கிலோவை அடியுரமாக இட வேண்டும்.

இரசாயன உரங்களைப் பார்களின் பக்கவாட்டில் விதைக்கும் இடத்திற்குக் கீழ் 2 முதல் 3 அங்குல தூரம் தள்ளி சீராக இட்டு மூடுதல் சிறந்தது.

விதைத்தல்: பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் வரிசையில் செடிக்குச் செடி 40 செ.மீ. (16 அங்குலம்) இடைவெளியில் குழிக்கு 3 விதை வீதம் விதைகளை ஊன்றவும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

செடிகளைக் கலைத்தல் : விதைத்த 4-வது வாரத்தில் குழிக்கு 2 நல்லச் செடிகளை மட்டும் விட்டு, 3-வது செடியை அகற்றி விடவும்.

பின் செய் நேர்த்தி : நிலத்தில் களை தோன்றுமல் இருக்க 20-வது நாளும், 40-வது நாளுமாக 2 முறை களைக்கொட்டினால் கொத்தி விட்டுக் களை எடுக்க வேண்டும். விதைத்த 6 வாரங்களில் அதாவது செடிகள் 1.25 அடி உயரம் வளர்ந்திருக்கும் பொழுது, 'ஜூனியர் கோ' எனப்படும் கொத்துக் கலப்பையால் ஊடு உழவு செய்து செடிகளைப் பார் நடுவில் இருக்கச் செய்து இரு பக்கமும் மண் அணைக்க வேண்டும்.

மேல் உரமிடுதல் : விதைத்த 8-வது வாரத்தில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து கொடுக்கக் கூடிய யூரியா 31 கிலோ அல்லது அமோனியம் சல்பேட் 70 கிலோ உரத்தை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும்.

நீர்ப் பாசனம் : : விதைத்தவுடன் நீர்ப் பாய்ச்சவும், நான்கு நாள் கழித்து உயிர் நீர் பாய்ச்சவும். பின்பு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சவும்.



பயிர்ப் பாதுகாப்பு: விதை ஊன்றிய 40-வது நாள் முதல், அடுத்த பக்கத்தில் கண்டபடி 11 தடவை மருந்து தெளிக்கவும்.

சுஜாதா பருத்திக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள்.

வரிசை எண்.	விதைத்தபின் பயிரின் வயது (மருந்து தெளிக்கும் வயது) நாட்களில்.	பூச்சி கொல்லி அல்லது நோய் தடுக்கும் மருந்தின் பெயர்.	ஒரு ஏக்கருக்கு வேண்டிய மருந்தின் அளவு.	ஒரு ஏக்கருக்கு வேண்டிய மருந்துடன் கூடிய நீர்க்கலவை.	
				கையினால் இயங்கும் தெளிப்பான்.	விசைத்தெளிப்பான்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	40	என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35).	540 மி.லி.	270 லிட்டர்	60 லிட்டர்
2	55	கார்பரில்—50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்—50).	750 கிராம் + 150 மி.லி.	270 ,,	90 ,,
3	60	என்டோஸல்ஃபான் (தையோடான் 35).	750 மி.லி.	360 ,,	120 ,,
4	75	கார்பரில்—50 (நனையும் செவின்)+ மிதைல் பாரத்தியான் (மெடாஸிட் 50).	1 கிலோ + 200 மி.லி.	360 ,,	120 ,,
5	85	என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35).	900 மி.லி.	450 ,,	150 ,,
6	95	கார்பரில்—50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்—50)	1 கிலோ + 200 மி.லி.	450 ,,	150 ,,
7	105	என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35).	1,100 மி.லி.	540 ,,	180 ,,
8	120	கார்பரில்—50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்—50).	1·25 கிலோ + 250 மி.லி.	540 ,,	180 ,,
9	135	என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35).	1,100 மி.லி.	540 ,,	180 ,,
10	150	கார்பரில்—50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்—50).	1·25 கிலோ + 250 மி.லி.	540 ,,	180 ,,
11	165	என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35).	1,100 மி.லி.	540 ,,	180 ,,

குறிப்பு:—*(1) விதைக்கும் சால்களில் குருணை வகை மருந்துகளாகிய டைசல்ஃபோடான் (டைஸிஸ்டான் 5 ஜி அல்லது சால்விரக்ஸ் 5 ஜி-8 கிலோ) அல்லது ஃபோரேட் (தைமட் 10 ஜி-4 கிலோ) போடலாம்.

*(2) விதை போடும் சாலில் குருணை மருந்து போடுவதற்குப் பதில், 'மெட்டாஸிஸ்டாக்ஸ்', 'எக்கட்டீன்', 'ரோகார்' 'ஆன்தியோ' ஆகிய மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 175 மி. லி. அல்லது 'டைமெக்ரான்' மருந்து ஏக்கருக்கு 30 மி. லி. வீதம் 180 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 10, 25-ஆவது நாட்களில் தெளிக்கவும்.

3. 'ஃபைடலான்,' 'குப்ராமர்', 'ப்ளுகாப்பர்' போன்ற தாமிர பூசணக் கொல்லி மருந்துகளில், ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு $1\frac{1}{4}$ கிலோ வீதம் அல்லது 'சிரம்', 'சினெப்' போன்ற மருந்துகளில் ஒன்றை ஏக்கருக்கு 420 கிராம் வீதம் 55-வது நாள் மருந்து அடிப்பதுடன் சேர்த்துத் தெளிக்கவும்.

பிந்திய பயிர் பருவத்தில், காய்ப் புழு தொந்திரவு மிகுந்து காணப்பட்டால் 7-வது மருந்து தெளிப்பதிலிருந்து மருந்து அடிப்பதை 10 நாட்களுக்கு ஒரு முறையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

மழை நாட்களில், மருந்துடன் கூடிய நீர்க் கலவை $4\frac{1}{2}$ லிட்டருக்கு 1 மில்லி லிட்டர் வீதம் 'சான்டோவிட்' மருந்தையும் கலந்து கொள்ளவும். இதனால் மருந்து பருத்திச் செடிகளில் நன்கு ஒட்டிக் கொள்ளும். மழையால் மருந்து பாதிக்கப்படாது.

அறுவடை:—விதை ஊன்றிய 4 மாதத்தில் சுஜாதா பருத்திச் செடிகளில் காய்கள் வெடிக்க ஆரம்பிக்கும். பிறகு பருத்தி வெடிப்பு மேலும் $2\frac{1}{2}$ மாத காலத்திற்கு நீடிக்கும். காலை வேளையில் பருத்தி எடுப்பதே சிறந்தது. காய்ந்த இலைச் சருகுகள் ஒட்டாமல் பருத்தி எடுக்க வேண்டும். மிகவும் தூய்மையாக உள்ள நீண்ட இழைப் பருத்தி ரகங்களுக்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைப்பதால், காய்களைப் பிடுங்காமல், நன்றாக மலர்ந்து வெடித்த பருத்திகளை மட்டுமே பறிக்க வேண்டும்.

வரவும் செலவும்:— மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு 'சுஜாதா' பருத்தி பயிரிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 8 முதல் 12 குவின்டால் பருத்தி எடுக்க முடியும். ஒரு ஏக்கர் 'சுஜாதா' பருத்தி பயிரிட ரூபாய் 1,400 செலவாகும். ஒரு ஏக்கர் 'சுஜாதா' பருத்தியிலிருந்து ரூபாய் 2,800 முதல் ரூபாய் 3,000 வரை வருவாய் பெறலாம். எனவே, செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 1,400 முதல் ரூபாய் 1,600 வரை நிகர இலாபம் கிடைக்கும்.

வேண்டுகோள்!

''சுஜாதா'' பருத்திக்குத் தற்பொழுது மிகுந்த தேவை (கிராக்கி) ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பம்பாய் நகரிலுள்ள நெசவாலைகளும், கோவை நகரிலுள்ள நெசவாலைகளும் 'சுஜாதா' பருத்தி நூல்களை விரும்பி, மிகுந்த விலை கொடுத்து வாங்குகின்றன.

எனவே,
கோவை மாவட்ட உழவர் பெருமக்களை ''சுஜாதா'' பயிரிட்டுப் பயன் மிகு பெற்று வளமோடு வாழுமாறும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறும் வேண்டிக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

நன்கு வளர்ந்துள்ள "சுஜாதா" பருத்தி





ஒரு மீன் விலை ரூ. 7,500.

இல்லங்களை அலங்கரிக்க, தொட்டிகளில் வைத்து வளர்க்கப்படும் தங்க மீனுக்கு (கோல்ட் ஃபிஷ்) உலகம் முழுவதும் நல்ல வரவேற்பு உள்ளது. ஜப்பானில் ஒரு மீன் வளர்ப்புப் பண்ணையில் 10 அங்குலம் உள்ள தங்க மீன் ஒன்று இருந்தது. இந்த வகை மீன்களில் இவ்வளவு நீளமுள்ளது மிகமிக அபூர்வம். எனவே அந்த மீனின் விலை 1000 டாலர் (சுமார் 7,500 ரூபாய்) என்று அந்த மீன் பண்ணை அதிபர் கூறினார்.

''மூர்ஸ்''என்ற ஒரு வகைக் கறுப்பு மீன்(இதுவும் தொட்டியில் வளர்ப்பதுதான்) சில பருவங்களில் சிவப்பு அல்லது வெண்கல நிறமாக மாறுவது உண்டு. இதில் ஒரு குறிப்பிட்ட கறுப்பு மீன், சிவப்பு, வெள்ளை, நீலம் என்று ஒவ்வொரு நிறமாக மாறிக் கொண்டே வந்ததாம். உலகப் பெரும்போர் நடந்த காலத்தில் இந்த மீன் 5000 டாலர் வரை மதிப்பிடப்பட்டதாம்.

இப்படி மீன்களைக் காட்சிக்காக வளர்ப்பது தற்போது ஏற்பட்ட பழக்கமல்ல; சீனாவை ஆண்ட ''சங்பேரரசு'' காலத்திலேயே (கி பி. 960–1276) மீன்களை இல்லங்களில் அழகுக்காக காட்சிப் பொருட்களாக வளர்த்ததாகத் தெரிய வருகிறது.

தற்போது அமெரிக்கா, ஜப்பான் கொரியா, சீனா போன்ற நாடுகள் இந்த மீன் வளர்ப்பினைப் பெரிய தொழிலாக நடத்துகின்றன.



நாற்பது பவுண்டு ராட்சத இருல்!

''லாப்ஸ்டர்'' என்பது இருல் வகையைச் சேர்ந்த ஒரு மீன். தலையின் பக்கத்தில் நண்டுக்கு இருப்பது போன்று இடுக்கியை ஒத்த கை இதற்கு உண்டு. மிகச் சுவையான உணவாகக் கருதப்படுவதால் மேலை நாடுகளில் இவற்றை மிக விரும்பி உண்ணுகின்றனர். இவை, கை விரல் அளவிலிருந்து, கையில் தூக்க முடியாத அளவு மிகப் பருமனாகவும் கிடைக்கின்றன. இதுவரை கிடைத்த ''லாப்ஸ்டர்களில்'' அதிக எடையுள்ளது அமெரிக்காவில் நியூயார்க் அருகேயுள்ள தீவில் கிடைத்தது. அதன் எடை 44½ பவுண்டு (1956-ஆம் ஆண்டு பிடிக்கப்பட்டது).

வனவிலங்குகளைப் போன்று, தனது பகுதிகளில் அதிகாரம் செலுத்துவதற்காக, இவை ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும். கையிலுள்ள இடுக்கியினால் கரடிப்பிடி போன்று பிடித்து தனது எதிரியை மூச்சுத் திணறச் செய்யும். ஏதாவது ஒரு லாப்ஸ்டர் இறந்தால் ஒழிய அவற்றின் போராட்டம் ஓயாது.



அஞ்சுகம் பயிரிடுவீர்! விரைவில் பணம் பெறுவீர்!

''அஞ்சுகம்'' தந்த செல்வம் !

'அஞ்சுகம்' பாசிப்பயறு 1972—73-ஆம் ஆண்டு தேசிய நிருபணத் திட்டத்தில், நிலக்கோட்டை திரு ஜஹாங்கீர் அவர்களது நிலத்தில் மூன்றும் பயிராகப் பயிர் செய்யப்பட்டது. முதல் இரண்டு போகங்களில் ஐ. ஆர். 20 நெல் பயிரிடப்பட்டு நல்ல மகசூலும் கிடைத்தது. இரண்டாம் போக நெல் அறுவடைக்குப் பின் நிலத்தை நான்கு தடவை உழுது, பண்படுத்தி, 8 மீட்டர் × 3 மீட்டர் அளவில் பாத்திகள் அமைத்து ஏக்கருக்கு 8 கிலோ வீதம் விதைத்தார். கடைசி உழவின்போது 100 கிலோ 17 : 17 : 17 கூட்டு உரம் போடப்பட்டது. விதைத்த 25-ஆம் நாள் ஒரு களை எடுத்து 'ரோகர்' என்ற மருந்து 200 மில்லி லிட்டர் தெளிக்கப்பட்டது. பிறகு 45-ஆம் நாளில் 'செவின்' மருந்து 10 கிலோ பயிருக்குத் தூவப்பட்டது. தண்ணீர் அதிகமாக விடாமல் 10 நாட்களுக்கு ஒருமுறை வீதம் மொத்தம் 5 தடவை தண்ணீர் பாய்ச்சப்பட்டது. இதனுல் அதிக அளவில் காய்கள் பிடித்து ஏக்கருக்கு 420 கிலோ பாசிப் பயறு கிடைத்தது. செலவு போக ரூ. 751-80 நிகர இலாபம் கிடைத்தது. திரு ஜஹாங்கீர் மகிழ்ச்சிக்குக் காரணம் குறைந்த செலவில் 60-65 நாட்களில் 'அஞ்சுகம்' பாசிப்பயறு தந்த செல்வமேயாகும்!

சாகுபடி விவரம் (ஏக்கருக்கு)

	ரூ. பை.
நாலு உழவு	56.00
பாத்தி அமைத்தல்	10.00
உரம்	113.70
விதை	15.00
''ரோகார்'', ''செவின்'' ஆகியவற்றின் விலையும், மருந்து தெளிக்கும் கூலியும்	34.50
தண்ணீர் பாய்ச்சுவதற்கு ...	16.00
களை எடுக்க	10.00
அறுவடைச் செலவு... ...	43.00
மொத்தச் செலவு ...	298.20

கிடைத்த மகசூல் 420 கிலோ விதைகளை விற்றதன் மூலம் கிடைத்த மொத்தப் பணம் (கிலோவுக்கு ரூ. 2.50 வீதம்) ...	1,050.00
சாகுபடி செலவு	298.20
நிகர இலாபம்...	751-80

அஞ்சுகம் பாசிப் பயறு மூன்றும் பயிராக மட்டும் அல்லாமல், நல்ல வருமானத்தையும் அளித்து உழவர்களைச் செல்வந்தர்களாக ஆக்கும்!

ஆகவே, கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு, ''அஞ்சுகம்'' பயிரிட்டுச் செல்வந்தர்களாக ஆகும்படி உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

சாகுபடி குறிப்புகள்

விதைக்கும் பருவம் : மார்ச்சு மாதம்.

நிலம் தயாரித்தல் : நிலத்தை நன்கு உழுது 1.5 அடிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அல்லது வசதிக்கு ஏற்ப, தகுந்த அளவில் பாத்திகளாகவும் அமைத்துக் கொள்ளலாம்.

உரமிடுதல் : கடைசி உழவில் ஏக்கருக்கு 20 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் உரத்தை அடியுரமாக இட வேண்டும். விதைத்த 18-ஆம் நாளில் களை எடுத்துக் கொத்தி விட வேண்டும். பிறகு ஏக்கருக்குப் 10 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் உரத்தை மேலுரமாக இட வேண்டும்.

அல்லது கடைசி உழவில் 100 கிலோ 17 : 17 : 17 'காம்ப்ளெக்ஸ்' உரமிடலாம்.

விதை அளவு: ஏக்கருக்கு 8 கிலோ.

விதைத்தல்: விதைகளைப் பார்களின் இரு பக்கங்களிலும் 4 அங்குல இடைவெளியில் வரிசையாக ஊன்ற வேண்டும். பாத்திகள் அமைத்திருந்தால் வரிசைக்கு வரிசை 30 செ. மீட்டர் (1 அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைகளை ஊன்ற வேண்டும்.

நீர்ப்பாசனம்: விதைத்த உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த நான்காம் நாள் முளைநீர் விடவேண்டும். பிறகு 10 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. தண்ணீர் தேங்கி நின்றால் கெடுதல் ஏற்படும்.

களை எடுத்தல்: விதைத்த 18-ஆம் நாள் களை எடுத்துக் கொத்தி விடுதல் வேண்டும். விதைத்த 35-ஆம் நாள் இரண்டாம் முறை களை எடுக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: ''அஞ்சுகம்'' பாசிப் பயறு செடிகளில் அசுவணி, இலைப் புழு, வண்டு முதலியவைகளின் தாக்குதலைத் தடுக்க விதை முளைத்த பிறகு பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ 5 சதத் தூளையும் 1:1 என்ற விகிதத்தில் கலந்து—அதாவது சமஅளவில் கலந்து— ஏக்கருக்கு 10 கிலோ கலவையை 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 2 தடவை தூவிவிட வேண்டும். அல்லது விதைத்த 15 முதல் 20 நாளில் ''ரோகார்'' என்ற மருந்தில் 200 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்துத் தெளிக்க வேண்டும்.

காய்ப் புழுவின் தாக்குதலைத் தடுக்க, பூ பூத்தது முதல் 15 நாள் இடைவெளியில் 2 முறை டி. டி. டீ. 5 சதத் தூளையோ அல்லது கார்பரில் 10 சதத் தூளையோ ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். அல்லது விதைத்த 45-ஆம் நாளில் 10 கிலோ 'செவின்'' மருந்தைத் தூவினாலும் போதுமானது.

மகசூல்: ஏக்கருக்குச் சராசரியாக 400 கிலோவுக்குக் குறையாமல் கிடைக்கும்.

ஆராய்ச்சி முடிவுகள்

*அண்ணா பண்ணையில் மார்ச்சு மாதத்தில் ''அஞ்சுகம்'' பாசிப் பயறு விதைத்ததில் ஏக்கருக்கு 600 கிலோ மகசூல் கிடைத்துள்ளது!

*அண்ணா பண்ணையில், மணிலா அறுவடைக்கு ஒரு நாள் முன்பாக ''அஞ்சுகம்'' பாசிப்பயறு விதைப்பது பயனுடையதாகத் தெரிய வருகிறது. மணிலாக் கொடிகளைப் பிடுங்கும் பொழுது மண் சிதறுவது, ''அஞ்சுகம்'' பாசிப் பயறு விதைகள் மூடப்படுதவற்குப் போதுமானதாகவும், முளைப்பதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது. விதைத்த 18 முதல் 20 நாட்களில் ஒரு முறை களை வெட்டிக் கொத்தி விட்டு, ஏக்கருக்கு 20 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டும் அளிக்கப்பட்டது. எந்த வித ஆரம்பச் சாகுபடி வேலைகளும் மேற்கொள்ளாமல்— சிக்கனமாக — விதைக்கப்பட்ட ''அஞ்சுகம்'' பாசிப் பயறு, செலவின்றி, பெரும் இலாபம் அளிக்கும் அரிய ஒரு பாசிப்பயறு வகை என்பது தெரிய வந்துள்ளது.

*அண்ணா பண்ணையில் நடத்தப் பெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து தொடர் சாகுபடிக்கு (Relay Cropping) ''அஞ்சுகம்'' பாசிப்பயறு சிறந்தது என்பதும் தெரிய வருகிறது. அண்ணா பண்ணையில் மக்காச் சோளம் அறுவடையான உடனே, தண்ணீர் பாய்ச்சி, பார்களின் இரு பக்கமும் ''அஞ்சுகம்'' பாசிப் பயறு ஊன்றப் பட்டது. விதைத்த 18-ஆம் நாள் களை எடுத்து, ஏக்கருக்கு 20 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் மேலுரமாக இடப்பட்டது. இம் முறையினால் 60 முதல் 65 நாட்களில் ஏக்கருக்கு 300 முதல் 350 கிலோ மகசூல் எடுக்க முடிந்துள்ளது.

எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு ''அஞ்சுகம்'' பாசிப் பயறு பயிரிட விரைந்திடுவீர் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.



இசையிலே மருத்துவம்

குமரன்

உள்ளத்தை இசைவிப்பது இசை; அதனால்தான் இசை என்ற பெயரே அதற்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

இசை கேட்டால் உள்ளம் மகிழ்கிறது.

இசை கேட்டால் விலங்குகள் கூட மெய்ம்மறந்து விடுகின்றன.

இசை கேட்டால், அசுணமா என்றொரு பறவை மயங்கி, மக்களிடம் பிடிபடுவதுண்டு என்று, பழங்கால இலக்கியங்கள் கூறுகின்றன.

இசை கேட்டுக் கள்வர்கள் கூடத் தங்களது தொழிலை மறந்திருந்ததாகப் பட்டினப் பாலை தெரிவிக்கிறது.

இசை கேட்டால், செடி கொடிகள் கூட வளர்கின்றன என்று விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள்.

இசை கேட்டால் மன நோய்க்கு ஆளானவர்களும் குணமடைகிறார்கள் என்ற உண்மையை திரு எம். ஆர். பாலகிருஷ்ண நாயுடு என்னும் இசை வல்லுநர் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். இந்த முறைக்கு 'இசை மருத்துவம்' (Musical Therapy) என்று பெயர். அமெரிக்கா, ஜப்பான், இலண்டன் போன்ற வெளிநாடுகளில் இந்த மருத்துவம் உண்டு. ஆனால் இந்தியாவில், அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் 'இசை மருத்துவம்' முதல் முறையாகக் கையாளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சில காலம், சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ மனையில் இந்த இசை மருத்துவத்தைச் செய்து வந்திருக்கும் இவர், தனி ஒரு மனிதர்தான் என்றாலும், தனி வரலாறு படைத்தவராகத் திகழ்கிறார்.

இவரது இசை மருத்துவத் திறமையையும் இசைப்புலமையையும் உணர்ந்த பல பெருமக்கள் இவருக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள்.

மறைந்த குடியரசுத்தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், முன்னாள் ஆளுநர் உஜ்ஜல் சிங், பேராசிரியர் சாம்பமூர்த்தி, மூதறிஞர் ராஜாஜி, காலம் சென்ற திரைப்பட இயக்குநர் கே. சுப்ரமணியம் ஆகியோர் இவரைப் பாராட்டிச் சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர்.

தமிழ் நாடு, மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் திரு அன்பழகன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயே இவரதுஇசைத் திறமையை நேரில் கண்டறிந்து பாராட்டுத் தெரிவித்தார்.

'இசை மருத்துவத்தை' மன நல மருத்துவ மனையில் இவர் அறிமுகப்படுத்தியது எவ்வாறு என்பது சுவையான செய்தி.

1965-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ஆம் நாள் கீழ்ப்பாக்க மனநல மருத்துவ மனையில்-இசை வல்லுநர் பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் தலைமையிலும் மனநல மருத்துவமனை டாக்டர்களின் முன்னிலையிலும் மன நோயாளர்கள் கேட்கும் வகையில் இசை நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்த நிகழ்ச்சியின்போது, பல வகை வாத்தியங்களையும் பயன்படுத்திக் காட்டியதுடன், வாய்ப்பாட்டும் பாடிக் காண்பித்தார். அத்துடன் 'மவுத் ஆர்கன்' என்னும் இசைக் கருவியைக் கொண்டு கருநாடக இசையை இசைத்துக் காட்டி, அனைவரையும் வியப்புக்கு ஆளாக்கிவிட்டார்.

இவரது இசை நிகழ்ச்சியைக் கேட்ட மன நோயாளர்கள் - தங்களையே மறந்து அமைதியுடன் கேட்டுச் சுவைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர், ''அடிக்கடி வந்து இசை நிகழ்ச்சியின் வாயிலாக 'இசை மருத்துவம்' செய்யுங்கள்'' என்று மன நல மருத்துவ மனைக் கண்காணிப்பாளரிடமிருந்து இவருக்குக் கடிதம் வந்தது. அதற்கு ஒப்புக்கொண்டு, ''வாரம் மூன்று முறை வந்து 'இசை மருத்துவத்தை' நடத்துகிறேன்'' என்று ஒப்புக் கொண்டார். 1965-ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 5 ஆண்டுகள் இந்தப் பணி புரிந்திருக்கிறார்.

துவக்கத்தில் மன நோயாளர் 25 பேரை வைத்துக் கொண்டு இசை மருத்துவச் சிகிச்சையைத் தொடங்கினார். ஆர்மோனியம், தபேலா போன்ற இசைக் கருவிகளை மன நோயாளர்களைக் கொண்டே எடுத்து வரச் சொல்லி, பின்னர், கருவிகளை இசைத்து, அவர்களுக்கு இசையின் மீது விருப்பத்தை உருவாக்கினாராம்.

'ஆர்மோனியம்', 'மவுத் ஆர்கன்' போன்ற வாத்தியங்களை இயக்கியவுடன், மன நோயாளர்கள் மெதுவாக இவரது அருகில் வந்தார்களாம்.

அவர்களது உணர்வுகளை ஒருமுகப்படுத்திப் பாட்டுக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். மனநோயாளர்கள், இவரது பாடலைக் கேட்டுத் திருப்பிப் பாடத் தொடங்கினார்களாம்.

இப்படியே மெதுவாக இசையின் ஒலியை அங்கே நிறைத்தவுடன், மன நோயாளர்கள் தங்களது துன்பங்களை எல்லாம் மறந்து, இசை வசப்பட்டார்கள்.

''உங்களுக்குத் தெரிந்த பாடல்களை எல்லாம் பாடுங்கள்''—என்று மன நோயாளர்களிடம் இவர் கூறியதும், ஒருவர் ''உள்ளம் உருகுதையா'' என்ற பாடலைப் பாடினார். வேறு சிலர் தங்களுக்குத் தெரிந்த பாடல்களைப் பாடினார்கள். இந்த அரிய காட்சியைக் கண்டு, மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் பார்த்து ஆமோதித்தார்.

சில நாள் பயிற்சிக்குள் மன நோயாளர்கள், பிறரைக் கண்டால் வணக்கம் கூறுகின்ற அளவுக்கு முன்னேறிவிட்டார்கள். இந்த உண்மையை அறிந்து அங்குள்ள மருத்துவர்களே வியப்படைந்திருக்கிறார்கள்.

15 நாட்களுக்கு ஒரு முறை அங்குள்ள ஓய்வுக் கூடத்தில் இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். இசை மூலம் கோலாட்டம், நாடகம் அனைத்தும் நடத்தினார். அவற்றைப் பார்த்து, மன நோயாளர்கள் பிணி நிலையை மறந்து மகிழ்ச்சியடைந்தார்கள் ; பலர் உணர்ச்சி வயப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே பிறருடன் நேரடியாகப் பேச ஆரம்பித்தார்கள்.

பொதுவாக மன நோயாளர்கள்—திடீரென்று பிறரைத் தாக்குவார்கள்—கடிப்பார்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தகையவர்களிடம் சென்று பழகிடும் போது, அவர்களால் ஏதாவது கேடுகள் ஏற்பட்டதுண்டா என்று கேட்கும்போது, திரு பாலகிருஷ்ணன் அவர்கள் தரும் பதில், நமக்கு வியப்பாகவே உள்ளது.

''எனக்கு எந்தக் கேடும் ஏற்படவில்லை; என்னைக் குருவாகவும் தங்களைச் சீடர்களாவும் எண்ணுகின்ற மனநிலைதான் அவர்களிடம் காணப்பட்டது'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கும் பாலகிருஷ்ணன், 63 வயதைத் தாண்டியவர் என்றாலும் இந்தத் தள்ளாத வயதிலும், அவரது இசை உள்ளம் இளமையாகவே காட்சி தருகிறது.



1968-ஆம் ஆண்டில், டெல்லியில் பணியாற்றிய அரசு அதிகாரி ஒருவர் கால்உடைந்து சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அப்போது, இவர், அவர் முன் சென்று 'மவுத் ஆர்கனில்' அம்சாநந்தி, பாகேஸ்ரீ, சகானா ஆகிய இராகங்களை வாசித்தார். அந்த அதிகாரி, தனது கால் வேதனையை மறந்து — களிப்படைந்திருக்கிறார்.

வாத நோய்க்கு ஆளானவர்களுக்குக்கூட 'இசை மருத்துவச் சிகிச்சை' செய்து குணப்படுத்தியிருக்கிறார்.

மூளைச் சிகிச்சைக்கு முதலில் பூபாளம், தன்யாசி, பிலகரி, மோகனம் ஆகிய இராகங்களை இசைத்துக் காட்ட வேண்டும். பின்னர் மத்யமாவதி, ஆனந்த பைரவி, தோடி, நீலாம்பரி, அசாவேரி, சாவேரி, சண்முகப் பிரியா, சிந்து பைரவி, காபி, ஆபேரி ஆகிய இராகங்களை இசைக்க வேண்டும்.

மன நோயாளர்களின் பிணியை இசை மருத்துவ முறையில் நீக்கிடும் இவர், பலவித இசைக் கருவிகளையும் இயக்கும் திறமை பெற்றவர்.

திருவாரூர், திருத்துறைப் பூண்டி, சென்னை அரும்பொருட்காட்சியகம் ஆக மூன்றே இடங்களில் மட்டும் காணப்படுவது பஞ்ச முக வாத்தியம். அந்த வாத்தியத்தை 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் இயக்கிக் காட்டி அண்ணா அவர்களின் பெரும் பாராட்டைப் பெற்றார்.

விடுதலை நாள் வெள்ளிவிழாவுக்காக 18-1-'73 அன்று மியூசியம் கலை அரங்கில், பழங்கால இசைக் கருவிகளான யாழ், சுரமண்டலி, பஞ்ச முக வாத்தியம் போன்ற 25 இசைக் கருவிகளை இயக்கி, அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

இவரது இசைத் திறமைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் ஆதரவில் இயங்கி வரும் இயலிசை நாடக மன்றம், இவருக்கு மாதம் ரூ. 75 உதவித் தொகையாகக் கொடுத்து வருகிறது.

இவர் பெற்றுள்ள சிறப்புப் பட்டங்கள் :

சங்கீத யந்திர நிர்மாண ப்ரவீண (இசைக் கருவி உருவாக்கும் நிபுணர்), நாதபேரி, பல்துறை இசை வல்லுநர்.

இந்த ஆண்டு பொங்கல் நாளில், அடையாற்றில் உள்ள யோக சமாஜத்தில் இவரது இசை நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. பலரின் பாராட்டுக் கிடைத்தது.

இசை உலகுக்கு ஈடில்லா நன்மை செய்து வரும் இவர், இசை மருத்துவ முறையைச் சில வருடங்கள் மனநல மருத்துவ மனையில் நடைமுறைப் படுத்திப் பல பிணியாளர்களை நலம்பெறச் செய்த இந்தத் திறமையாளர், விரைவில் சித்திரைத் திங்களில் 'இசை மருத்துவ ஆச்ரமம்' ஒன்றினை அமைத்திடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவரது தொண்டுகள் வெற்றி பெறுவதற்கு இவர் கற்றுள்ள இசை கட்டாயம் பயன்படும் என்று நம்புகிறோம்.

—த. பி.

பிறந்ததைக் காக்க விளைந்ததைக் காப்போம்!

மக்கள் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது! பிறப்பினைத் தடுக்க மக்களும், அரசும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வெற்றிகரமாக அமைந்திருந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கம் வெகு வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது! இந்தியாவில் மட்டுமல்ல எல்லா நாடுகளிலும் இதே நிலைதான் நிலவுகிறது!

பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்து, உணவு உற்பத்தியை வெகு விரைவாகப் பல மடங்கு பெருக்கி இருந்தாலும் உணவு தானிய உற்பத்தி வேகத்தைவிட, மக்கள் தொகைப் பெருக்க வேகம் வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது. உணவு தானிய உற்பத்தியை மேலும் வேகமாகப் பெருக்கிட உழவர் பெருமக்களும், அரசும் ஓயாது பாடுபட்டு வந்தாலும், இயற்கை மாறுபாடுகளினால் சில நேரங்களில் எதிர்பார்த்த அளவில் உணவு உற்பத்தி பெருகவில்லை. இதன் காரணமாகவே, நாட்டின் பல பகுதிகளில் பசியும், பஞ்சமும் தலைவிரித்தாடுகிறது! இதனால் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்குப் போதிய சத்துணவுகளைக் கொடுக்க முடியாமல், கால்பட்டினி, அரைப்பட்டினி ஆக அவைகளை வளர்த்து, அறிவும், ஆற்றலும் அற்ற மந்தமான ஒரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்கி வருகிறோம்! எனவே பிறந்த குழந்தைகளை வளமாக வளர்க்க, போதிய உணவுகளை உற்பத்தி செய்ய, பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால் இதற்குக் காலமும், பொருளும் தேவைப்படுகிறது! இந்த நிலையில், பிறந்த குழந்தைகளைக் காக்க உள்ள எளிய வழி, விளைந்ததைக் காப்பதேயாகும்!

ஆண்டுதோறும் இந்தியாவில், உணவு தானியங்களை அறுவடை செய்யும் காலம் முதல் சேமித்து வகைக்கும் காலம் வரையான இடைக்காலத்தில் (Post-harvest period) மட்டும், ஏறத்தாழ பத்தில் ஒன்று பாழாகிவிடுகின்றது என்று வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர்!

அறுவடைக்குப் பிறகு களத்து மேட்டில் மட்டுமே ஆண்டுதோறும் 13 இலட்சம் டன் உணவு தானியங்கள் சேதமாகிவிடுகிறதாம்!

வீட்டு எலிகள் மட்டுமே 19 இலட்சம் டன் உணவு தானியங்களைத் தின்று விடுகின்றனவாம்!

சேமிப்பில் 46 இலட்சம் டன்கள் உணவு தானியம் பாழாகிவிடுகிறதாம்; இதில்20 இலட்சம் டன் உணவுதானியத்தை பூச்சிகள் தின்று விடுகின்றனவாம்!

பூச்சிகள், அறுவடைக்கு முன்பு பயிர்களில் தோன்றி அளவிடற்கரிய அளவு சேதத்தை உண்டாக்குவதுடன் அறுவடையான பிறகு சேமிப்பிலும் தோன்றி உணவு தானியங்களைப் பாழாக்கி விடுகின்றன. இதைத் தவிர்த்தால் இன்றைய இந்தியாவில் உள்ள உணவுப் பற்றுக்குறையைக் கணிசமாகக் குறைத்திட இயலும்! எனவே பிறந்ததைக் காக்க, விளைந்ததைக் காப்பது உழவர் பெருமக்களுடைய கடமை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பசுமைப் புரட்சியின் பயன்களைப் பெற உயர் ரக வித்துக்களையும் ஊட்டம் மிக்க உரங்களையுமிட்டு நல்ல பயிர்களை வளர்க்கின்றோம். பூஞ்சாள நோய்களையும், பூச்சி தாக்குதலையும் பல்வகையில் கட்டுப்படுத்தி பாதுகாப்பு செய்கின்றோம். ஆனால் அத்துடன் இப்பணி நின்றுவிடக்கூடாது. அறுவடையான விளைபொருட்களை சேமித்து வைக்கும் காலங்களில் உரிய பாதுகாப்புத் தராவிடில் அத்துணை முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீர் போலாகும்!

இந்தியாவில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களில் 5 சத அளவுக்கு மேல் கிடங்குகளில் சேமித்து வைத்திருக்கும்போது சேதமடைகின்றன. பூச்சிதாக்குதல், எலிகள் சேதப்படுத்தல், தவறான முறையில் சேமித்தல் போன்ற பல்வேறு காரணங்களால் கிடங்குகளில் சேதம் ஏற்படுகிறது. பூச்சிகள் உணவுக்காகவோ அல்லது விதைக்காகவோ சேமிக்கப்பட்டிருக்கும் தானியங்களைத் தாக்கி, அதிக சேதத்தையும், நட்டத்தையும் விளைவிக்கின்றன. இப்பூச்சிகளுள் முக்கியமான சிலவற்றைக் கீழே விவரித்துள்ளோம்.

1. அரிசி மூக்கு வண்டு: (''சைட்டோபைலஸ் ஒரைசே''):

இப்பூச்சி உலகம் முழுவதும் பரவியுள்ளது. சேமித்து வைத்த அரிசி, கோதுமை, சோளம், மக்காச் சோளம் போன்றவற்றில் காணப்படுகிறது. இவ்வண்டு கருப்பு அல்லது கருஞ்சிவப்பாயும், 2.5 மில்லி மீட்டர் நீளமுள்ளதாயும், தலையானது மூக்கு அல்லது அலகு போல் நீண்டும் வளைந்தும் காணப்படும். வண்டுகளும், அதன் புழுக்களும் சேமிப்பிலுள்ள தானியத்தில் உற்பத்தியாகி, உண்டு, சேதத்தை விளைவிக்கின்றன. அவற்றின் தாக்குதலைத் தானியங்களில் காணப்படும் துவாரத்திலிருந்து அறியலாம். இதன் மொத்த வாழ்நாள் சுமார் ஒரு மாதமாகும்.

2. நெல் துளைக்கும் வண்டு ('ரைஸோபெர்த்தா டொமினிக்கா'):

இது ஒரு சிறிய பழுப்பு நிற வண்டு. இவ்வண்டு நெல், கோதுமை, மக்காச் சோளம் மற்றும் சிறுதானியங்கள், பயறு வகைகளைத் தாக்குகிறது. அரிசி மூக்கு வண்டைவிட இது சிறியது. இதன் தலை, கீழே மடிந்தும், வாயுறுப்புகள் அடிப்பாகத்திலும் காணப்படும் வண்டுகளும், அதன் புழுக்களும் தானியத்தைத் தின்று மாவாக்கிவிடும். உமி நீக்காத நெல்லுக்கு அதிக சேதம் விளைவிக்கும். தானியங்கள் துளைக்கப்பட்டும் மூட்டைகளின் மேல் மாவு சிதறியுமிருந்தால் இவ்வண்டு தாக்கியுள்ளதற்கு அறிகுறியாகும். இதன் வாழ்க்கைக் காலம் சுமார் இரண்டு மாதமாகும்.

தமிழ்நாட்டின்

பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

1966-67ல்	2100.87
1972-73ல்	5618.15

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

என்.எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குனர்.

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

3. சிவப்பு தானிய வண்டு ("டிரைபோனியம் கேஸ்டேனியம்"):

இது சர்வ சாதாரண மாக எல்லா விதமான சேமித்து வைக்கப்பட்ட தானியங்களி லும், முக்கியமாக அரிசி, கோதுமைமாவு, கடலைமாவு ஆகியவற்றில் சேதமேற்படுத் தும், சிறியதும், சிவப்பும், தட் டையுமான இவ்வண்டும், அதன் புழுக்களும் உடைந்த தானியங்களையும் மாவுப் பண் டங்களையும் உண்டு அதிமாகச் சேதப்படுத்துகின்றன. இதன் தாக்குதலால் சேமிப்புப் பொரு ளில் மக்கிய வாசனை தோன் றும்.

4. தானிய அந்து ("சைட்டோட் ரோகா சீரியலெல்லா"):

இது ஒரு சிறிய நுண்ணிய அந்து. கிடங்குகளில் இவை கள் தானிய மூட்டைகளின்மீது பறந்து கொண்டிருக்கும். இதன் புழுக்கள் நெல்லைப் பெருவாரி யாகத் தாக்குகின்றன. இவை களின் தாக்குதலால் நெல் சேத மடைந்து, தவிடு போன்றுகி, இறுதியில் உமி மட்டும்தான் மிஞ்சுகிறது. இவ்வந்துவின் வாழ்நாள் ஆறு வாரங்களா கும்.

5. அரிசி அந்து (கார்சைரா சிபலோனிகா"):

இப்பூச்சி, தானிய அந்தைவிட அளவில் பெரியதாகவும், சாம்பல்நிறம் உடையதாகவும் இருக்கும். இவற்றின் புழுக்கள் தானியங் களில் கூடுகட்டி உள்ளிருந்து கொண்டு சேதத்தை விளைவிக் கின்றன. எல்லாவித தானி யங்களையும், குருணைகள், ரவை கள், மாவுப் பண்டங்கள் போன்றவற்றையும் இவை சேதப்படுத்துகின்றன. இப் பொருள்களில் புழுக்கூடுகளும், உரிந்த தோல்களும் நிறைந்து தரத்தைக் குறைத்துவிடும். வாழ்க்கைக் காலம் 7—8 வாரம்.

6. பயறு வண்டு ("கேலா ஸோப்ரூக்கஸ் சைனென்சிஸ்"):

இவ்வண்டுகள் கடலை, துவரை, அவரை, பச்சைப் பயறு, காரா மணி, முதலியவற்றைத் தாக்கி சேதத்தை விளைவிக்கின்றன. சிறிய இவ்வண்டுகள் பழுப்பு நிறமாயும், பின்பாகம் மழுங்க லான உருண்டை வடிவம் கொண்டனவாகவும் இருக்கும். இவைகளால் தாக்கப்பட்ட பயறுகள் உண்ணத் தகுதி யற்றவையாகின்றன. பயறு களின் மேல் காணப்படும் சிறிய, வெண்மையான முட்டை களும், துளைகளும் அதன் தாக்குதலின் அறிகுறியாகும்.

தடுப்பு முறைகள்

தானியங்கள் குவியலாக வோ அல்லது மூட்டைகளிலோ சேமித்து வைக்கப்படுகிறது. குவியலாக வைக்கப்படும்தானி யங்களில் பூச்சி தாக்குதல் அவ்வளவு காணப்படுவதில்லை. அறுவடை செய்துவரும் தானி யங்களில் பூச்சிகள் இருப்ப தாலோ, பழைய சாக்குகளில் தானியங்களைச் சேமிப்பதாலோ அல்லது தாக்குதலுக்குள்ளான மூட்டைகளுக்கு அருகில் புதிய மூட்டைகளை வைப்பதாலோ பூச்சி தாக்குதல் உண்டாக லாம். இப்பூச்சிகளின் தாக்கு தலின்றும் தானியங்களைக் காக்க, பின்கண்ட தடுப்பு முறைகளை முன்னெச்சரிக்கை யாகக் கையாளலாம்.

தானியங்களைச் சேமிப்ப தற்கு முன் வெய்யிலில் உலர்த் திப் பூச்சிகளையும், ஈரத்தையும் நீக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தானியங்களில் 10-12 சத ஈரத்துக்கு மேலி ருக்கக்கூடாது. அதிக ஈரம் வெப்பத்தை ஏற்படுத்தி, பூச்சி தாக்குதலுக்கு வழி கோலுவதல்லாமல் பூஞ்சாள நோய்களையும் உண்டாக்கு கிறது. தானியங்களை வெய்ய லில் உலர்த்தி ஈரமில்லாத தூய்மையான கிடங்குகளில் சேமித்து வைப்பதே மேலான முறை.

நல்ல வெளிச்சமும், காற் ரோட்டமும் உள்ள கிடங்கு களில்தான் தானியத்தைச் சேமிக்க வேண்டும். காலிக் கிடங்குகளை நன்றாகச் சுத்தம் செய்து 'பி.எச்.சி.' 10 சதம் அல்லது 'டி.டி.டீ.' 5 சதம் அல்லது 'மாலத்தியான்' 4 சத தூளை, நூறு சதுர அடிக்கு 8 அவுன்சு வீதம் தூவ வேண்டும். மூட்டைகளை மூங்கில் பாய்கள் மீதோ அல்லது மரக்கட்டை கள்மேலோ தான் அடுக்கவேண் டும். ஒழுங்காகவும், சுவரில் படாமலும், சுற்று வெளியும், இடைவெளியும் விட்டு மூட் டைகளை அடுக்க வேண்டும். இதனால் காற்றோட்டமும், சோதனை செய்து மருந்து தெளிக்க வசதியும் கிடைக்கி றது நாள்தோறும் 8 மணி நேரம் கிடங்குகளைத் திறந்து வைக்க வேண்டும். அடிக்கடி கிடங்கு களைச் சுத்தம் செய்து சிதறிய தானியங்களைத் தனிச் சாக்கு களில் போட்டு வைக்க வேண் டும். தானியங்களைப் பூச்சிகள் தாக்காமல் இருப்பதற்கு மூட் டைகள் மேல் 'பி.எச்.சி.' 10 சதம் அல்லது 'டி.டி.டீ.' 5 சதம் அல்லது 'மாலத்தியான்' 4 சதம் அல்லது 'செவின்' 10 சதத் தூளை 100 சதுர அடிக்கு 8 அவுன்சு வீதம் தூவ வேண்டும். மாலத்தியான் 50 சதத் திரவத்தை (45 மில்லி லிட்டர் மருந்தை 14 லிட்டர் நீரில் கலந்து) 1,000 சதுர அடி பரப்பிற்குத் தெளிக்கலாம்.

தாக்குதலை அறிந்து கட்டுப் படுத்துவது எப்படி ?

அவ்வப்போது தானியங் களில் மாதிரிகளை எடுத்துப் பரி சோதிக்க வேண்டும். அரைக் கிலோ தானியத்தில் 2—3 பூச்சிகள் காணப்படுமாயின் உடனே பூச்சிக் கொல்லிகளை உபயோகித்து அவைகளை அழிக்க வேண்டும். இவற் றிற்குப் புகை நச்சுக்கள் பயன் படுத்தப்படுகின்றன. 'பாஸ் டாக்சின்' வில்லைகளை 1 டன் தானியத்திற்கு 1—2 வில்லை கள் வீதம் உபயோகிக்கலாம். அல்லது (ஈ.டி.சி.டீ.) என்ற திரவத்தை 1,000 கன அடிக்கு 20 ராத்தல் வீதம் உபயோகிக்க லாம். இவைகளைப் பயன்படுத் தும்போது மிக்க கவனத்துடன் இருக்க வேண்டும். மூட்டை களைச் சீராக அடுக்கி, வெளிப் புறத்தில் அலுமினியம் பூசப் பட்ட ரப்பர் தார் பாய்களால் மூடி, கீழே சுற்றிலும் மண் வைத்துக் கட்டி, காற்றுப் புகாமல் செய்து, இப்புகை நச்சுக்களையிட்டு 3—5 நாட்கள் வரை வைத்திருக்க வேண்டும்.

விதைக்காக மட்டும் தானி யத்தை வைப்பதாயின் 'டி.டி. டீ. 10' சதம் அல்லது 'மாலத் தியான்' 4 சதத் தூளை விதை யுடன் கலக்கலாம். 100 கிலோ விதைக்கு 1 கிலோ பூச்சி மருந்து தேவைப்படுகிறது. அப்படிக் கலந்த நெல், சிறு தானியம் மற்றும் பயறு வகை களை, பூச்சிகள் ஒரு வருடம் வரை தாக்குவதில்லை.

எனவே, மேற்கூறிய வகை களில், விளைந்த தானியங்களைக் காத்து, பிறந்த குழந்தைகளைப் பசிப்பிணியிலிருந்து காப்பாற்ற வும், இந்தியாவில் உள்ள உணவுப் பற்றுக்குறையை நீக்கிடவும் உழவர் பெருமக்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.



வாழ்க்கைக்கு ஒரு பாடம்!



எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெப்பாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த சுட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

பீங்கான் பொருட்கள் உற்பத்தியால் ஓங்கிடும் நமது தொழில் வளம்!

ஒரு நாட்டின் வளர்ச்சி எதை அளவு கோலாகக் கொண்டு மதிப்பிடப்படுகிறது தெரியுமா?

அந்நாட்டில் உற்பத்தியாகும் இரும்பின் அளவை வைத்து மதிப்பிடுவது வழக்கம். அந்த அளவுக்குச் சமுதாய வாழ்க்கைக்கு இரும்பின் தேவை மிக அவசியமாகும். பெரிய தொழிற்சாலைகளின் யந்திரங்கள் முதல் சிறிய தொழிற்சாலைகளின் கருவிகள் வரை இரும்பால் தயாராகின்றன.

ஆனால், இன்றையச் சூழ்நிலையில் ஒரு நாட்டின் வளர்ச்சியை எதை அளவு கோலாகக் கொண்டு மதிப்பிடுவது?

பீங்கான் பொருட்கள் தொழிலின் வளர்ச்சியை வைத்து மதிப்பிடுவதே சரியானதாகும்.

ஏனெனில், அந்த இரும்பு உற்பத்திக்கே பீங்கான்பொருட்கள் தொழில் அவசியமாகிறது.

கண்ணாடி உற்பத்திக்குக் கண்ணாடியை உருக்கிட வெப்பம் மட்டுமல்ல, பீங்கான் தொழில் பொருட்களும் பயன்படுகின்றன.

மின் உற்புத்திக்கு, இன்சுலேட்டர்கள் தயாரிப்பதற்கு, இரசாயனத் தொழிலுக்கு, எலெக்ட்ரானிக் தொழிலுக்குப் பீங்கான் பொருட்கள் மிக அவசியமாகும். மோட்டார் தொழிலுக்கும், விண்வெளி ஆராய்ச்சிக் கருவிகளுக்கும் பீங்கான் பொருட்கள் பயன்படுகின்றன.

புதை வடிகால் அமைத்திடப் பயன்படுத்தும் பல்வேறு வகையான குழாய்களும் பீங்கான் தொழில் மூலமே கிடைக்கின்றன.

நவீன நாகரிகத் தேவைக்கு உரிய பல்வேறு பொருட்களும் பீங்கானிலேயே செய்யப்படுகின்றன.

கலைப் பொருள்களின் வடிவமைப்பிலும் பீங்கான் சிறந்த இடத்தைப் பெறுகிறது.

எந்தப் பொருள் உற்பத்திக்கும் வடிவமைப்பை அளித்திடப் பயன்படுத்தும் பொருளாகப் பீங்கான் தொழிலில் உற்பத்தியாகும் பொருட்கள் பயன்படுகின்றன.

பீங்கான் தொழிலில் நம் நாடு பழைய காலத்திலிருந்து ஈடுபட்டு வருகிறது. சீனா,

எகிப்து போன்ற நாடுகள் போல இந்தத் தொழிலில் நீண்ட நெடுங் காலமாகத் தொடர்பு இருந்தும், வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக நாம் வளர முடியாத சூழ்நிலை இருந்தது. எனினும் நம் நாடு விடுதலையடைந்த பின்னர் இத் தொழிலில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. நம் நாட்டில் உற்பத்தியாகும் பீங்கான் தொழில் பொருட்களுக்கு உலகச் சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. கடந்த ஆண்டில் ஏறத்தாழ இருபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பீங்கான் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் பீங்கான் தொழில் வளர்ச்சியடைய ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. பீங்கான் தொழிலுக்கான மூலப் பொருட்கள் தமிழ் நாட்டில் ஏராளமாக உள்ளன. இத்தொழிலுக்குரிய மூலப் பொருட்களான Quartz, Felspar, China clay, Bauxite, Magnasite, Gypsum, Fire clay, Steafite மற்றுமுள்ள பொருட்களும் தமிழ் நாட்டில் கிடைக்கின்றன.

பீங்கான் பொருட்களுக்குத் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களிலும் நிரம்பத் தேவை உள்ளது. எனவே, இத் தொழில் வளர்ச்சியில் நமது அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது.

முதல்வர் கலைஞர் உருவாக்கிய கண்ணொளி வழங்கும் திட்டத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ள சிலை.

தென்னார்க்காடு மாவட்டம் விருத்தாசலத்தில் நமது அரசு வணிக முறையிலான இரண்டு பீங்கான் தொழிற்சாலைப் பிரிவு, பீங்கான் தொழில் பயிற்சிப் பள்ளி, கலைப்பொருள் உற்பத்திப் பிரிவு முதலிய பிரிவுகளை அமைத்துள்ளது.

வணிக முறைப் பிரிவில் உற்பத்தியாகும் புதை சாய்க்கடைக்குரிய பொருட்களுக்கு நமது மாநிலத்திலும், மற்ற மாநிலங்களிலும் தேவையுள்ளது. இங்கு உற்பத்தியாகும் இன்சுலேட்டர்களைத் தமிழ் நாடு மின்சார வாரியம் வாங்குவது மட்டுமல்ல, ஆந்திர மின் வாரியம்—கேரள மின் வாரியங்களும் வாங்குகின்றன. இங்கு உற்பத்திசெய்யப்படும் ஏனைய பொருட்களை இந்தியன் ஏர்லைன்ஸ், ரயில்வே, இந்திய ஓட்டல் கார்ப்பரேஷன், ஷிப்பிங் கார்ப்பரேஷன், ராணுவ காண்டின்கள், இந்தியாவிலுள்ள உயர்தர ஓட்டல்கள் முதலியன வாங்கியுள்ளன.

இப்பொழுது விருத்தாசலத்திலுள்ள தொழிற்பேட்டையில் 29 சிறு தொழில் பிரிவுகள் பல்வேறு தரப்பட்ட பீங்கான் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இங்கு உற்பத்தியாகும் பொருட்களுக்கு 1965-ஆம் ஆண்டில் ரூ. 22,600-க்கு ஆர்டர் கிடைத்தது. 1972—73-ஆம் ஆண்டில் ரூ. 2.8 இலட்சத்துக்கு ஆர்டர் கிடைத்தது. 1974 சனவரியிலோ ரூ. 4.2 இலட்சத்துக்கு ஆர்டர் கிடைத்துள்ளது. இப்படி நாளுக்கு நாள் இந்தத்தொழில் மிகுந்த வளர்ச்சியடைந்து வருகிறது.

ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தியாகுமளவுக்கு விருத்தாசலத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் இத் தொழிற் பகுதி பரவியுள்ளது. இது ஆண்டுதோறும் 1,000 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு அளிக்கிறது.

விருத்தாசலத்தில் அமைந்திருப்பது போன்று பீங்கான் தொழில்கள் சம்பந்தமான தொழிற் பகுதியைச் சேலம் மாவட்டம் ஓமலூரிலும் அமைக்கும் திட்டம் ஒன்று உள்ளது.

விருத்தாசலம் பீங்கான் கலைப் பொருட்கள் பிரிவில் தயாரிக்கப்படும் பொருட்களும் பெரம்பூரிலுள்ள கலைப் பொருட்கள் தயாரிக்கும் பிரிவும் இதுவரை தயாரித்திக்கும் பீங்கான் கலைப் பொருட்களை நாட்டிலுள்ள எல்லாத் தரப்பினரும் பாராட்டியுள்ளனர். எல்லா வடிவமைப்பிலும், வண்ணக் கலப்பிலும் இவைகளுக்கு நிகரானவை இல்லை என்று பாராட்டப்படுகின்றன. வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை இவை நன்கு கவர்கின்றன. இந்த இரு பிரிவுகளிலும் ஆண்டுதோறும் முந்நூறு புதிய வடிவங்களில் பீங்கான் கலைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை 1500-க்கு மேற்பட்ட வடிவங்களில் மட்டும் ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் மதிப்புக்குப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பீங்கான் கலைப் பொருட்கள் விரைவில் ஏற்றுமதியாக இருக்கின்றன.

ஆண்டுதோறும் பீங்கான் கலைப் பொருள்கள் காட்சி சென்னையில் நடைபெறுவது வழக்கம். கடந்த ஆண்டு ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாயின. இந்த ஆண்டு ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள பீங்கான் கலைப் பொருட்கள் விற்பனையாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

புதிய தோற்றமுள்ள மலர்த்தொட்டி
செய்தவர் திரு. எஸ். அனந்தகிருஷ்ணன்.



இவ்வாண்டு செய்யப்பட்ட கலைப்பொருளில் சிறந்ததாகக் கருதப்படும் நிருத்திய விநயகர்.
இதைச் செய்த ஓவியர் திரு. ஜி. பொன்னம்பலம்.

ஏசு—சுவரொட்டி ஓவியம்.
செய்தவர் திரு. டி. நடராசன்.

இவ்வாண்டு தயாராகிய புதிய வடிவங்களில் மூன்று வடிவங்கள் சிறந்தனவாகக் கருதப்பட்டுப் பரிசு பெற்றுள்ளது.

நிருத்திய விநயகர், மலர் வைக்கும் தொட்டி, இயேசுவின் தோற்றம் முதலியன பரிசுகளைப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் அயல் நாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ் நாட்டுக் கலை, பண்பாடுகளை எடுத்துரைக்கும் பீங்கான் கலைப் பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் திட்டத்தை வகுத்து வருகிறது.

நம் மாநிலத்திலும், அண்டை மாநிலங்களிலும், இந்தியா முழுமையிலும், அயல் நாட்டிலும் நம்முடைய பீங்கான் தொழில் தொடர்புடைய எல்லாப் பொருட்களுக்கும் அருமையான சந்தை உள்ளது. எனவே, பீங்கான் தொழில் சிறப்புடன் வளர இத்தொழில்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்திடப் புதிதாகத் 'தமிழ்நாடு செராமிக்ஸ் லிமிடெட்' என்ற நிறுவனத்தை நமது அரசு ஏற்படுத்தியுள்ளது.

— மா.

சிறந்த நூல்களை வெளியிட

நூலாசிரியர்க்கு நிதியுதவி

நிலையான மதிப்பு அல்லது பெருமையுடைய கீழ்க்கண்ட வகையைச் சார்ந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் தனிப்பட்ட நூலாசிரியர்களுக்கு அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமொன்று தமிழக அரசில் (தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில்) செயல்பட்டு வருகிறது.

1. தொல்பொருள் ஆய்வு குறித்த நூல்கள்.

2. கல்வெட்டுகள், செப்பேடுகள் குறித்த நூல்கள்.

3. தமிழர்களின் பழக்க வழக்கங்கள் குறித்த நூல்கள் (திருவிழாக்கள் உள்பட)

4. தமிழ் நாட்டுக் கவின் கலைகள் குறித்த நூல்கள் (ஆராய்ச்சி நூல்கள் உள்பட)

5. மொழி, இலக்கியம் குறித்த நூல்கள்.

6. நவீன விஞ்ஞானம் குறித்த நூல்கள் (பாட நூல்கள் நீங்கலாக)

7. மேலே குறிக்கப் பெற்ற பொருள்களில் ஏதேனும் ஒன்று எழுதி இதுவரை வெளியிடப்படாமலுள்ள, இலக்கிய நூல்கள்.

8. பயனுள்ள அரிய நூல்களை மீண்டும் வெளியிடுதல்.

9. தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பெயர்களின் கலைக் களஞ்சியம்.

10. பல்வகை அகர முதலிகள்.

11. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்.

12. அறிவியல் நூல்கள்.

13. கலை நுணுக்க நூல்கள்.

கதைப் புத்தகங்கள், நாவல்கள், நாடகங்கள், முற்றிலும் சமயம் பற்றிய நூல்கள் ஆகிய வற்றிற்கு இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட மாட்டாது.

இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வேண்டும் நூலாசிரியர்கள் இதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்துடன் நூலின் கையெழுத்துப் படியை இணைத்துத் தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-1 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தையும் நிதியுதவி அளிப்பதற்குரிய விதிமுறைகளடங்கிய படியையும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

நிதியுதவி அளிப்பதற்குரிய விதிமுறைகளில் காணும் வகையைச் சார்ந்த நூல்களுக்கு மட்டுமே இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குவது

உலக சாதனை!

பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஒரு வீரர் கயிற்றின் மேல் நடந்து உலகச் சாதனையை ஏற்படுத்தியுள்ளார்! அவர் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 28-ஆம் நாள் செயின்ட் எட்டியென்னி (Saint Etianne) என்ற நகரில் உள்ள ஒரு சதுக்கத்தில் ஒரு கயிற்றை இருபுறமும் இழுத்துக் கட்டி, அந்தக் கயிற்றின் மேல் நடந்து, பிறகு அதன் மேலேயே தங்கி இருக்கத் துவங்கினார். அவர் அந்தக் கயிற்றின் மேலேயே கொட்டும் மழையிலும், கொடிய காற்றிலும், குலை நடுங்க வைக்கும் குளிரிலும் 6 மாத காலம் தங்கி இருந்துள்ளார். அவர் கயிற்றின் மேல் இருந்து கொண்டே உணவு உண்டு வந்துள்ளதுடன், அங்கேயே உட்கார்ந்து கையில் ஒரு கம்பைப் பிடித்துக்கொண்டு தூங்கியுள்ளார். 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் நாள் அவர் கயிற்றிலிருந்து கீழே இறங்கி வந்தபோது, ஏறத்தாழ 15,000 மக்கள் கையொலி எழுப்பி வரவேற்றனர். கயிற்றிலேயே தங்கி இருந்த போது ஒரு நாள் இரவு அவருக்கு இலேசான மயக்கமும், இழுப்பும் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் இவ்வாறு கயிற்றின் மேலேயே 6 மாத காலம் தங்கி இருந்து உலகச் சாதனையை ஏற்படுத்தியுள்ளார் அந்த வீரர்.

குறித்து அரசு கருதும். அரசினால் நியமிக்கப் பெற்றுள்ள வல்லுநர் குழு இத்திட்டத்தின் கீழ்ப் பெறப்படும் நூல்களை ஆய்ந்து அரசிடம் நிதியுதவி பெறத்தக்க நல்ல தரமான நூல்களைத் தேர்ந்தெடுத்து அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. இக் குழுவின் பரிந்துரையையொட்டி, அரசு இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிப்பது குறித்து இறுதி முடிவெடுக்கிறது.

நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி கீழே கொடுத்துள்ள இரு வகைகளில் ஒன்றன் பாற்படும்.

'அ' வகை நிதியுதவி :

நூலாசிரியர்கள் எழுதியுள்ள நூல்களின் கையெழுத்துப்படி ஏற்கப்பட்டால், அவற்றை அரசாங்கம் எடுத்துக் கொண்டு அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நிறுவனம் வாயிலாக அந்நூல்கள் வெளியிடப்படும். நூல் வெளியீட்டிற்கு முன்னர் நூலாசிரியர்க்குத் தக்க ஊதியம் வழங்கப்படும். ஏற்கப்பட்ட கையெழுத்துப் படிகளின் தரம் தீர்மானிக்கப்பட்டுஅதை மூன்று வகைகளாகப் பிரித்துக் கீழ்க்கண்ட அடிப்படையில் நூலாசிரியர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

(அ) அச்சடித்த நூலின் சரியான டெம்மி அளவுப் பக்கம் ஒன்றுக்கு ரூ. 10.

(ஆ) அச்சடித்த நூலின் சரியான டெம்மி அளவுப் பக்கம் ஒன்றுக்கு ரூ. 8.

(இ) அச்சடித்த நூலின் சரியான டெம்மி அளவுப் பக்கம் ஒன்றுக்கு ரூ. 6.

இவ்வாறு மதிப்பிடப்பட்ட உதவித் தொகையில் முக்கால் பங்கு முன்னதாகவே வழங்கப்படும். எஞ்சிய கால் பங்கு நூல் வெளியான உடனே வழங்கப்படும். நூற் பதிப்பு உரிமை அரசாங்கத்திடமே நிலைபெறும்.

'ஆ' வகை நிதியுதவி :

ஏற்கப்பட்ட நூல்களின் கையெழுத்துப் படிகளை நூலாசிரியர்களே ஏற்ற ஏற்பாடுசெய்து வெளியிடுவதற்கு அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். நூல் வெளியீட்டிற்கு ஆகும் செலவிற்கு வழங்கப் பெறும் உதவித் தொகையில் அதிக அளவுத் தொகை 50 சதவீதமாகும். ஒவ்வொரு நூலுக்கும் வழங்கப்படும் அதிக அளவுத் தொகை ரூபாய் 5,000. மிகச் சிறந்த நூல்களுக்கு மேற்சொன்ன தொகைக்கும் சதவீதத்திற்கும் மேலாகவே பொருத்தமான அளவில் உதவித் தொகை வழங்க அரசு ஆலோசிக்கலாம். சாதாரணமாக ஒரு நூலுக்கு ஆயிரம் அச்சுப்படிகள் வெளியிடப் பெறும் என்ற முறையில் செலவு கணக்கிடப்படும். மிகச் சிறப்பான நூல்களைப்பொறுத்த அளவில் அரசு படிகளின் எண்ணிக்கையை உயர்த்தக் கூடும். அச்சிடப்படுகின்ற படிகளின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கினை இந்த விதியின் கீழ் உதவித் தொகை பெறுபவர் அரசுக்கு அளிக்க வேண்டும். பதிப்புரிமை நூலாசிரியர்க்கு உரியதாகும்.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்த அனைத்திலும் அரசின் முடிவே இறுதியானதாகும்.

மேற்கூறிய திட்டத்தினை நூலாசிரியர்கள் அறிந்து பயன் பெறலாம்.

திட்டம்

திட்டக் கமிஷன் சார்பில் தமிழில் வெளியிடப்படும் படங்கள் நிறைந்த இருவார இதழ்

* நடப்புப் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும் இந்தியாவில் வளர்ச்சிப் பணிகள் பற்றியும் தலைசிறந்த நிபுணர்கள் நடுநோக்குடன் எழுதும் கட்டுரைகள்.
* திட்டத்தின் பல்வேறு துறைகளில் நமது வெற்றி தோல்விகள் பற்றிய ஒளிவு மறைவற்ற மதிப்பீடு.

சந்தா

ஆண்டு : ரூ. 5, இரண்டாண்டு : ரூ. 9,
மூன்றாண்டு : ரூ. 12. தனிப் பிரதி ; 25 பைசா

* நகர நியூஸ் - ஏஜண்டுகளுக்கு விற்பனையில் தாராள தள்ளுபடியும் வாபஸ் வசதிகளும் உண்டு.
* விளம்பரங்களுக்கு மிகவும் சக்தி வாய்ந்த சாதனம்.

''யோஜனா'' சந்தாதாரர்கள் எல்லோருக்கும், ஆங்கிலம், ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளில், 5 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள எமது வெளியீடுகளை வாங்கினால் விசேஷ 20% சலுகை கிடைக்கும்.

சந்தா ஆர்டர்களுக்கும், வர்த்தக விவரங்களுக்கும், விளம்பர விகிதங்களுக்கும் எழுதவும் :

ஆசிரியர் - நிருபர்,
திட்டம்,
பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்,
கிரவுண்ட் ஃப்ளோர், பிளாக் எண் 2,
சாஸ்திரி பவன், 35, ஹாடோஸ் ரோடு,
சென்னை-6 (தமிழ்நாடு)

மாமல்லபுரத்துச் சிற்பப் பள்ளியின் எதிரேயுள்ள மாஞ்சோலை! அங்கு வருவோருக்கு எல்லாம் பல்லவன் காலத்துச் சிற்பக்கலையை நினைவூட்டும் அரிய காட்சிகள்!!

நீளமான ஒரு கல்லில் இரு சிற்பிகள் அமர்ந்து ஒரு சிலையை உருவாக்குகின்றனர். சிற்பப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் அவர்கள். இன்னும் சில திங்கள்களில் அந்தக் கல், அழகுமிழும் சிலையாக — கண்ணகி சிலையாக வடிவுபெறும். 10 அடி உயரமுள்ள இந்தச் சிலை பூம்புகார் கலைக் கூடத்தில் வைக்கப் பெறுவதற்காக, கணபதி ஸ்தபதியின் மேற்பார்வையில் விரைவாக உருப் பெற்று வருகிறது.

கண்ணகி சிலை தவிர, பூம்புகார்க் கலைக்கூடத்தில் நிறுவப் பெறவிருக்கும் இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம் ஆகியவற்றிற்காகவும் சிற்பங்களும் கட்டடச் சுவருக்கான ஓவிய வேலைப் பாடுகள் நிறைந்த கற்களும் தயாராகின்றன. இலஞ்சி மன்றத்தில் இடம் பெறவிருக்கும் நீச்சல் குளத்திற்கான சுவர்கள் இதுவரை எந்த நீச்சல் குளத்திலும் இல்லாத அளவு சிறப்பு வாய்ந்தவையாக அமையும்! பளபளக்கும் கருங்கல்லில் வரையப்பட்டுள்ள பூ வேலைப்பாடுகள் திரைச் சீலைகளிலுள்ள ஓவியம் போன்று விளங்குகின்றன. கல்லா? கண்ணாடியா? என்று பார்த்தோர் திகைக்கும் வண்ணம் மெருகேற்றப்பட்ட கற்களில் பூ வடிவங்களை உளிகளால் வடித்தெடுக்கின்றனர் கைதேர்ந்த சிற்பிகள்.

ஒரு பக்கத்தில் இயந்திரத்தினால் கருங்கற்கள் கண்ணாடி போல் மெருகேற்றப்படுகின்றன. மறு புறம் சிலைகள், சிற்பங்கள், கட்டடங்களுக்கான கற்கள் தயாராகின்றன. சிலைகளைச் செய்வோர் சிற்பக்கலையில் திறம் பெற்ற முன்னாள் மாணவர்கள் 5 பேர். பிற பணிகளைச் செய்பவர், கல்வேலைகளில் தேர்ந்தவர்கள் சுமார் 120 பேர். இதற்காக வெளியூர்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்குவதற்காக இந்த மாஞ்சோலையின் மறுபுறத்தில் வரிசையாகத் தென்னங்கீற்றினால் வேயப்பெற்ற குடிசைகள்.

சிலைக்கான கற்கள் செங்கற்பட்டை அடுத்து 10 கல் தொலைவிலுள்ள பட்டு மலைக்குப்பத்திலிருந்தும், கட்டடங்களுக்கான கற்கள் திருச்சியை அடுத்த விஜயகோபாலபுரத்திலிருந்தும் கொண்டு வரப் பட்டுள்ளன.

காலத்தால் அழிக்க முடியாத இந்த அரும்பணிகள் நிறைவெய்தி, பூம்புகார்க் கலைக்கூடத்தில் இடம் பெறும்போது, பூம்புகார் கலைக் கூடத்தின் எழிலுக்குச் சிகரம் வைத்தாற் போன்று இவை அமையும் என்பதில் ஐயப்பாடில்லை.



(11 -ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்காகச்சிலபொதுவான நெறி முறைகளையும் நியதிகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. அவற்றில் பெரும்பான்மை யானவை அரசுக்கு உடன்பா டானவையே. நிதி நிலைமை இடம் தருவதற்கு ஒப்ப இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தி லேயே அவற்றைச் செயல் படுத்த வேண்டுமென்பதில் அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

மாணவர்களின் எதிர்கால நலனைக் கருதி, 110 கோடி ரூபாய்க்கு மேல் அரசு கல்வி யில் முதலீடு செய்து வரு கின்றதை அறிந்து, இம் முயற்சிகளினால் முழுப் பலன் களும் ஏற்படும் வகையில், கல்வி வாய்ப்புக்களைக் கருத் துடன் போற்ற மாணவர் களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள் கிறேன்.

கலை, இலக்கியம், வரலாறு.

தமிழர்களின் மரபும், வர லாறும் காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலும், கலை, கலாச்சாரம், நாகரிகம் ஆகி யவை போற்றப்பட வேண்டு மென்பதிலும் அண்ணா அவர்கள்



கொண்டிருந்த கொள்கைகளைச் செயல்படுத்தும் வகையில், தொன்மைவாய்ந்த சோழப் பெருநகராம் கடல்கொண்ட பூம்புகார்ப் பட்டினத்தைப் புதுப்பிக்க, தஞ்சைத் தரணி யில் நமது அரசு எடுத்து, முடித்து, இன்னும் தொடர்ந்து நடத்திவருகிற முயற்சியை மேலைநாட்டினரும் போற்றிப் புகழ்கின்றனர். இதற்கு இது வரை 6.5 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மண்ணைக் காத்திட, மானப் போர் தொடுத்து, சிரித்த முகத் துடன் அழிவை அணைத்துக் கொண்ட வீரபாண்டியக் கட்ட பொம்மனின் வரலாற்றுப் புகழ்மிக்க பாஞ்சாலங்குறிச்சி யில் மண்மூடிக் கிடந்த கோட்டை கொத்தளங்களை அகழ்ந்தெடுத்து சரித்திரக் காட்சியாக்கி யுள்ளதோடு அந்தத் தீரமகனின் நினைவாகப் பாஞ்சையில் ஒரு நினைவுக் கோட்டையையும் இந்த அரசு அமைத்துக் கொண்டிருக்கிறது ஐந்து இலட்ச ரூபாய் செலவில்.

தமிழெடுத்து உலகுக்கு அறம் வகுத்த திருவள்ளுவர்க்குச் சிறப்புச் செய்ய, மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பிப்பதோடு, சென்னை நுங்கம்பாக்கத்தில் ஏரிக்கரை நிலம் ஏறத்தாழ 80 மனை களில் (Grounds) திருவள்ளுவர் நினைவாலயத்தை மிகச் சீரிய முறையில் அமைத்திட, குற ளின் பெருமையைக் குவலயம் உணரச் செய்திடும் நோக்கு டன், முதற்கட்டமாக 10 இலட்ச ரூபாய் ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத் தப்பட்டோர் நலன்

தாழ்த்தப்பட்டோர், பிற் படுத்தப்பட்டோர் நலன் குறித்த நிதி ஒதுக்கம் வரும் ஆண்டு 16.06 கோடி ரூபாயாக இருக்கும். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட் டுள்ளது :—

	மொத்தம் (ரூபாய் கோடியில்)	மாநில அரசால் செய்யப்படும் (திட்டத்தில் சேராத பணித் திட்டச்) செலவு.	மாநில அரசுத் திட்டம்.	மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்.
தாழ்த்தப்பட்டோர் நலன் ...	8.98	6.18	2.24	0.56
தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதிக் கழகம் ...	1.00	...	1.00.	..
பிற்படுத்தப்பட்டோர் நலன் ...	9.98 6.08	6.18 5.37	3.24 0.53	0.56 0.18

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட படி தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதிக் கழகம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. வங்கிகளிடமிருந்தும் நிதி உதவி செய்யும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் இக் கழகத்திற்கு நிதி உதவியை நாம் எதிர்பார்த்தோம். பல்வேறு காரணங்களைக் கூறி இந்தக் கோரிக்கையை இந்நிறுவனங்கள் தட்டிக் கழித்ததால்தான், இக் கழகம் அமைக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் மாநில நிதியிலிருந்தே 1973-74-ல் ஒரு கோடி ரூபாயும், 1974-75-ல் ஒரு கோடி ரூபாயும் கொடுத்து இவ்வீட்டு வசதிக் கழகத்தை அரசு தொடங்கியுள்ளது. குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதிக்காக மாநில அரசால் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட மனைகளையும் சேர்த்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக ஒரு இலட்சம் வீடுகளை ஐந்தாண்டுக் காலத்தில் கட்டுவதற்கு இந்த வீட்டு வசதிக் கழகம் தீவிரமாகச் செயல்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலன் :

சமூக நலனைப் பேணுவதில் குறிப்பாக அடித்தளத்தில் அவதியுறும் மக்களுக்கு ஊன்றுகோலாக இருப்பதில் இந்த அரசு முன்னணியில் நிற்கிறது. கண்ணொளி வழங்குதல், தொழுநோய்ப் பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு அளித்தல், கைரிக்ஷா அகற்றுதல் போன்ற சமூக நலத் திட்டங்களுடன், ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டமொன்றினையும் இந்த அரசு செயல்படுத்த முனைந்துள்ளது. ''கூனன் நிமிர, குருடன் பார்வை பெற'', என்பது வெறும் முழக்கமாக இல்லாமல் அவர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பும், நிவாரணமும் அளிக்கும் நோக்கத்துடன் நமது மாநிலத்தில் உள்ள அங்கஹீனர்கள் பற்றிய விவரங்களை ஆராய்ந்து விரைவில் கணக்கெடுக்குமாறு அரசு ஆணை பிறப்பித்து அதன் தொடர்பான செயல்கள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகப் பொதுப் பாதுகாப்புத் திட்டம்.

இம்மாநில அரசின் ஓய்வூதியத் திட்டத்தில் அரசு அலுவலாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டுமே பலன் கிடைக்கிறது. தனிப்பட்ட சில நிறுவனங்களும், தமது ஊழியர்களுக்கு ஓய்வூதியம் அளித்து வருகின்றன. இவற்றைத் தவிர மிகப் பெரும்பாலான பொது மக்கள் ஓய்வூதியம் பெறுவதில்லை. பொது மக்கள், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் மக்களின், நலனில் கண்ணும் கருத்துமாயுள்ள இந்த அரசு இவர்களுக்கெனப் புதியதோர் திட்டம் கொண்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து ஓய்வூதியம் பெறுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு உண்டு. உதாரணமாக இத்திட்டத்தின்படி, 30 வயதான ஒருவர் திங்கள்தோறும் 10 ரூபாய் கொடுப்பதாக வைத்துக் கொண்டால் அவருக்கு 55-வது வயதில் இருந்து உயிரோடிருக்கும் வரையில் திங்கள்தோறும் 100 ரூபாய் என்ற வீதத்தில் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் திங்கள் தோறும் பணம் செலுத்திக் கொண்டிருக்கும் நபர் ஒருவர் இடையிலே இறந்துவிட்டால் அவர் செலுத்தியுள்ள முதலும் வட்டியும் அவரைச் சார்ந்தவருக்குப் போய்ச் சேரவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதன்னியில் வேறு எந்தவகைகளில் அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் அளிக்கலாம் என்பதும் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தைக் குறித்து விரிவான விதிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. இரண்டொரு திங்களில் இத்திட்டம் செயல் வடிவம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சத்துணவு—குழந்தைகள் நலன் :

குழந்தைகள் நலனில் இம்மாநில அரசு மிக அக்கறை காட்டி வருகிறது. வறுமை வாட்டும் குடும்பத்திலுள்ள



குழந்தைகளுக்கும், செல்வச் செழிப்புடன் வளர்க்கப்படும் குழந்தைகளுக்கும் இடையே வாய்ப்பு வசதிகளில் வேறுபாடுகள் இருந்தால் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்தமுடியாது. எந்தக் குடும்பத்தில் உள்ள குழந்தைகளாயினும் சரி, வளர்ச்சிக்குச் சம வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். ஆக, குழந்தைகள் நலன், சமதர்ம சமூகத்தின் தலையாய கடமையாகும். இதை மனத்தில்கொண்டு 1974-75-ல் குழந்தைகள் நலனுக்காக முனைப்புத் திட்டம் ஒன்றை நடத்தப் போகிறோம். இதன்கீழ் 10 மும்முர முனைப்புத் திட்டப்பணிகள் ஏற்படுத்தப்படும். ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள 2,639 குழந்தைகள் காப்பகத்திற்கு மேலாக இத்திட்டத்தின்கீழ் 1,000 குழந்தைகள் காப்பகங்கள் கூடுதலாக நிறுவப்படும். இக் காப்பகங்களுக்கு மருத்துவ மேற்பார்வையும் சத்துணவும் வழங்கப்படும்.

குழந்தைகளுக்கு வரும் பல்வேறு நோய்களைச் சத்துணவு அளிப்பதனால் தவிர்க்க முடியும். பிறக்கும் குழந்தைகள் பெரும்பகுதி ஐந்து வயதுக்கு முன்னமேயே இறந்து விடுவதைச் சத்துணவினாலும் மருத்துவ வசதியினாலும் தவிர்க்கலாம். இவ்வுண்மைகளை மனத்திற் கொண்டு குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஆக மொத்தம் ஐந்து இலட்சம் பேருக்குச் சத்துணவு அளித்து வருகிறோம். இந்த எண்ணிக்கையை 1974-75 ல் ஆறு லட்சமாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்காகவும், மேலே கூறிய குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்திற்காகவும் 3.3 கோடி ரூபாய் செலவிடப்படும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், முதன் முதலாகத் தொழிலாளர் சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ், கேர் (CARE) நிறுவனம் வழங்கிய சத்துணவுப் பொருள்கள் உணவாக்கப்பட்டுத் தொழிலாளருடைய குடும்பத்தினர் அன்றாட உணவில் சத்துணவாகச் சேர்த்துக்கொள்வதற்காக, அக் குடும்பத்தினரில் சூலுற்ற மகளிருக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகின்றன. இத் திட்டம் இப்போது சுமார் 23,000 பேருக்குப் பயன்படும் வகை

யில் சுமார் 92 தொழிற்சாலைகளிலும் மலைத் தோட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது.

வீட்டு வசதி



மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வீட்டு வசதியை விரிவாக்கும் பணியில் தமிழ்நாடு முன்னேறியுள்ளதைப் பலரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். 1974-75 இல் வீட்டு வசதி வாரியத்தின் வேலைகள் எட்டுக் கோடி ரூபாய் மதிப்புள்ளவையாக இருக்கும். 7,200 வீடுகள் அடுத்த ஆண்டு கட்டி முடிக்கப்படும். இதற்கு மேலாகத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 1974-75 இல் சுமார் எட்டுக் கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வழங்கும். 1968-69-ல் இந்த இரண்டு நிறுவனங்களும் சேர்ந்து 3.7 கோடி ரூபாய் மட்டுமே வீட்டு வசதிக்காகச் செலவு செய்தன என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் இத்துறையில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் தெளிவாக விளங்கும். மேலும் காவலர் வீட்டு வசதிக்காக 54 இலட்சம் ரூபாயும், அரசு அலுவலர்கள் வீடு கட்டுவதற்காகக் கடன் வழங்க 80 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1973-74 வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டில் தொடங்கப்பட்ட குறைந்த செலவிலான வீட்டு வசதித் திட்டத்திற்கு நாம் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கவில்லை. இருந்த போதிலும், அரசின் நிதியில் இருந்தே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குறைந்த செலவிலான 1,417 வீடுகளை அரசு கட்டத் தொடங்கியுள்ளது. இத் திட்டம் மேலும் வளர்ச்சி பெறுதல் மத்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் கிடைக்கின்ற நிதியைப் பொறுத்ததாகும்.

குடிசைப் பகுதிகளை மாற்றுதல்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட பின்னர் 1973 டிசம்பர் திங்கள் வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை 11,092. 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளுக்கு முன்னர் கட்டிமுடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 4,378. 1974-75-ல் மேலும்4,200 குடியிருப்புகளைக் கட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆக 1970-71-ல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் விளைவாக 1975 மார்ச் முடிய 19,670 குடியிருப்புகள் எல்லா வசதிகளுடனும் விளங்குமென்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்றுத் திட்டப் பணிகளில் கணிசமான அளவு பணிகளை மேற்கொண்டுள்ளது. எட்டு வெளியூர் நகரங்களில் வீட்டு வசதி வாரியம் குடிசைப் பகுதிகளை மாற்றி இதுவரை 7,412 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. 1974-75-ல் குடிசை மாற்றுத் திட்டத்திற்கும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் மொத்தம் 4.75 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கிராமப் பகுதி மேம்பாடு, சாலைகள், குடிநீர் வசதி

நாட்டின் முதுகெலும்பாய் உள்ள கிராமங்களின் வசதி

வாய்ப்புகளைக் கவனிப்பதில் இந்த மாநிலம் முன்னணியில் நிற்கிறது. மாநிலத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் நீர் வசதி, மின்விசை ஆகியவற்றை வழங்கவும், பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும், சாலைகள் அமைத்திடவும், நாம் மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்கள் பற்றி இந்த மாமன்றம் நன்கறியும். நமது திட்ட முயற்சிகள் அனைத்திலும் கிராம வளர்ச்சியையே நாம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். மக்கள் தொகை 1,500-க்கு மேற்பட்டு இருக்கின்ற ஊர்கள் ஒவ்வொன்றையும் நெடுஞ்சாலைகளுடன் இணைத்திடக் கிராமச் சாலைகள் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். இதற்கு 1973-74-ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினோம்.

1974-75-ஆம் ஆண்டிற்கும் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இத்திட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு மட்டும் நாற்பது கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. தற்போதைய நிதி நிலைமையில் பத்தாண்டுகளுக்குள்ளே நிறைவேற்றி விடலாம் என எதிர்பார்க்கிறோம். மக்கள் தொகை 1.500-க்கு மேற்பட்டுள்ள ஊர்களை இணைக்கின்ற முயற்சிக்கு ஒரு படி மேலே சென்று மக்கள் தொகை 1,000-லிருந்து 1,500-க்குள் உள்ள கிராமங்களையும் நெடுஞ்சாலைகளுடன் இணைத்திட வேண்டுமெனில் கூடுதலாக 25 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு ஆகும் என்பதால் அதனை அடுத்த கட்டமாக எடுத்துக் கொள்வதென்று முடிவு செய்துள்ளோம்.

உள்ளூர்ச் சாலைகளைப் பேணி வருவதற்கும் மேம்படுத்துவதற்கும் என, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நாம் மானியங்கள் வழங்கி வருகிறோம். இதுவரையிலும் ஆண்டுதோறும் இதன் பொருட்டு 1.19 கோடி ரூபாய் வழங்கப்பட்டு வந்துள்ளதை, வரும் ஆண்டிலிருந்து 2.19 கோடி ரூபாயாக உயர்த்தி அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகைகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செலவிடப்படும்.

கிராமங்களுக்குக் குடிநீர் வசதி வழங்குவதற்கு நாற்பது கோடி ரூபாய் அளவில் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை மேற்கொள்வதாகச் சென்ற நிதிநிலை அறிக்கையில் கூறியிருந்தேன். இதன்படி, தமிழ்நாடு குடிநீர் வழங்கு வாரியத்தின் வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன. நரம்புச் சிலந்தி நோய் முதலான நோய் பரவியுள்ள நீர்நிலைப் பகுதிகளில் உள்ள 2,230 ஊர்களிலும், நீர்நிலை அறவே இல்லாத 4,960 ஊர்களிலும் நீர் வழங்கு திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவுநீர் அகற்று வாரியமே செயல்படுத்தும். இந்தப் பகுதிகளில் 1974-75-ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கு திட்டங்களை மேற்கொள்ளுவதற்காகத் தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு மானியம் அளிப்பதற்காக 2.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு ஊர்களில் நாம் குடிநீர் வசதிகள் ஏற்படுத்த முயற்சி எடுத்துள்ளோம். எனினும், 11,814 ஊர்கள் போதுமான குடிநீர் கிடைக்காமல் உள்ளன. இந்தப் பகுதிகளைப் பொறுத்த

வரை அவ்விடங்களில் நீர் வழங்கு திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக ஊர் வளர்ச்சித் துறையின் இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டு நிறைவேற்றும். இதற்கென 1974-75-ஆம் ஆண்டில் 1.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்களும் கடன்களும் வழங்குவதற்காகக் கணிசமான அளவு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1974-75-இல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்களாகவும் கடன்களாகவும் உதவி அளிக்கும் வகையில் செய்யப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கம் 21.67 கோடி ரூபாயாகும். இதற்கு மேலாக ஆரம்பக் கல்விக்கு 39.23 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் வாயிலாகச் செலவிடப்படுகிறது.

மாவட்ட வளர்ச்சிக் கழகம்

மாவட்டத்திற்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளைச் சீராகவும் விரைவாகவும் நிறைவேற்றவும் அதற்கான நிதி ஆதாரங்களை மாவட்ட அளவிலேயே வரிவிதிப்புத் தவிர்த்த முறைகள் வாயிலாகத் தேடிக் கொள்ளவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதனை நிர்வாக நிபுணர்களும், பொருளாதார நிபுணர்களும் வரவேற்றுக் கருத்துக்களை வழங்கியுள்ளனர். அதற்கேற்ப முதல் கட்டமாக இராமநாதபுரம், கோவை, தர்மபுரி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் இந்த அமைப்பு, மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையின் கீழ் நிறுவப்படும். இதற்காக அரசின் பங்குத் தொகையாக இரண்டு கோடி ரூபாய் அளித்திட வழி செய்யப்படும்.

நகர் நலன். 

நகர்ப்புற வளர்ச்சிக்காகவும் போதிய நிதி வசதி ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறச் சாலைகள் பராமரிப்பு போன்ற வேலைகளுக்காக மாநில அரசின் நிதியில் இருந்து 1.13 கோடி ரூபாய் மானியமாகவும், கடனாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நம் மாநிலத்திலுள்ள 2 மாநகராட்சிகள், 99 நகராட்சிகள், 13 நகரியங்கள், 626 பேரூராட்சிகள் ஆகியவைகளில் 2 மாநகராட்சிகளிலும், 87 நகராட்சிகளிலும், 8 நகரியங்களிலும், 71 பேரூராட்சிகளிலும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 3 நகராட்சிகளிலும், 37 பேரூராட்சிகளிலும் குடிநீர் வசதித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1974-75-ல் குடிநீர் வசதி வாரியத்திற்கு, வீராணம் திட்டத்திற்கான செலவு உட்பட, சுமார் 20 கோடி ரூபாய் அளவில் திட்ட முதலீடு செய்ய வகை செய்துள்ளோம்.

நகராட்சி நிதி நிலை ஆய்வுக் குழு (Municipal Finance Enquiry Committee) ஒன்று நிறுவப்பட்டு செயல் பட்டு வருகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் (Madras Metropolitan Development Authority) 1973, டிசம்பர்



திங்களில் அமைக்கப்பட்டுள்ளது. பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மறைமலை நகரை ஏற்படுத்துவதென்ற அரசு முடிவை 1973-74 நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டேன். மறைமலை நகருக்கான , நிலங்களைக் கையகப்படுத்தி இன்றியமையா அடிப்படை வசதிகள் பலவற்றையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மணலியில் சுற்றுப்புற நகர் மேம்பாட்டுப் பகுதி ஒன்றை உருவாக்குவதையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து அண்மையில் சென்னை மாநகருக்கு வருகை தந்த வல்லுநர் குழு, சென்னை மாநகரில் சுரங்க இரயில் பாதை ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புக்கு இசைவளித்துள்ளது. இதற்குத் தேவையான நிதிக்கு வகை செய்ய மத்திய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

ஆண்டுக்காண்டு கிராமங்களிலிருந்து அதிக மக்கள் மாநகருக்கு வந்த வண்ணமிருப்பதால் பெருநகர்ப் பகுதிகளில் பல சிக்கல்கள் எழுகின்றன. பெருநகர் வளர்ச்சி இம்மாநிலத்தின் சிறப்புப் பிரச்சினையாகும். இதைச் சமாளிக்க நமக்குப் போதுமான நிதி உதவி வழங்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம். சென்னை மாநகரை மாநிலத்தின் தலைநகரென்று மட்டும் கருதக் கூடாது என நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்துள்ளோம். இது ஒரு வட்டாரப் பொருளாதார மையமாகும். சென்னை மாநகரிலிருந்து கணிசமான வருவாயைப் பெற்று வரும் மத்திய அரசு இம்மாநரின் வளர்ச்சி நேரிய வழியில் அமைந்திடுவதை உறுதிப்படுத்தப் போதிய தொகை செலவிடுவது சாலவும் பொருத்தமாக இருக்கும். பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களின் வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு கணிசமான அளவில் உதவி கொடுப்பதைப் போலவே சென்னைக்காகவும் கொடுக்க முன் வர வேண்டும்.

போக்கு வரத்து. 

இம்மாநிலத்தில் போக்குவரத்துத் துறை செவ்வியவகையில் செயல்பட்டு வருகிறது என்பதையும், நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனங்கள் நன்கு நடந்து வருகின்றன என்பதையும் சம்பந்தப்பட்ட அனைவர்களிடமிருந்தும் நாம் பாராட்டுப் பெற்றுள்ளோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தனியார்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட போக்குவரத்துத் துறை நிறுவனங்கள் அனைத்தும் திறமையாக நிர்வகிக்கப்பட்டுக் கணிசமான ஆதாயத்தை நமக்குத் தொடர்ந்து அளித்து வருகின்றன. இவைகளில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கையையும் நாம் கூடுதலாக்கியுள்ளோம். மேலும் மாநில அரசே நடத்தும் சாலைப் போக்குவரத்துத் துறையும் தனது நடவடிக்கைகளைச் சீர்படுத்தியுள்ளது.

போக்குவரத்துத் துறையை மேம்படுத்தத் தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான முறையில் கப்பல் போக்கு

வரத்துக் கழகம் ஒன்று அமைக்கப்படும். அது ''பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்'' என்று அழைக்கப்படும். இந்தக் கழகம் 5 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கும். இதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இதன் கப்பல்கள், நமது அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வருவதில் ஈடுபடும். பண்டைய காலத்தில் தமிழ்நாட்டில் இருந்ததைப் போலவே இக்கழகத்தின் கப்பல்கள் நாளாவட்டத்தில் உலகம் முழுவதிலும் பணியாற்றிப் பொருளும் புகழும் சேர்க்குமென நம்புகிறோம்.

சாலைகள்.

தொழில் வளர்ச்சிக்கும், வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கும் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்ப்பது, இன்றியமையாததாகும்.

குறிப்பாக இந்த அரசு மேற்கொண்ட தீவிர முயற்சியால் திருச்சி மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கிற திருமானூர் பாலம் இந்தியாவிலேயே நீளமான பாலங்களில் ஒன்றும், புதுமையானதும் ஆகும்.

முசிறியையும், குளித்தலையையும் இணைக்கிற மிகப் பெரியதோர் பாலமும் உருவாகிக்கொண்டு வருகிறது. இந்தப் பாலம் அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும்.

சென்னையில் மிகப் பெரும் அளவுக்குப் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்துள்ள அண்ணா மேம்பாலம், இந்தியாவிலுள்ள மூன்று பெரிய மேம்பாலங்களில் ஒன்றாகும்.

திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் ஈரடுக்குப் பாலமும், கோவையில் அமைக்கப்பட்டுள்ள மூன்றடுக்குப் பாலமும், புதிய முறையில் இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள பாலங்களில் தலை சிறந்து விளங்குவனவாகும்.



தொழிலாளர் நலன்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களிடம் பற்றும் பரிவும், பாசமும் நேசமும் கொண்டதாக இம்மாநில அரசு இருந்து வருகிறது. இந்தியாவிலேயே முதல் தடவையாகப் பேருந்துப் போக்குவரத்து நிர்வாகத்தில் தொழிலாளர்களைப் பங்கு கொள்ளச் செய்ததையும், சுமார் 35,000 பேருந்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை நீட்டித்ததையும் அரசின் இக்கொள்கைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம், முதலாளிக்குக் கிடைக்க வேண்டிய லாபம், பொருள்களுக்குக் கொடுக்கவேண்டிய விலைகள் இம்மூன்றும் ஒன்றுக்கொன்று இணைந்த தன்மையுடையவை. இவற்றைக் குறித்து ஒரு சரியான கொள்கை வகுக்கப்படவேண்டிய அவசியத்தை நான் தேசிய வளர்ச்சிக்குழுவின் பல கூட்டங்களில் வலியுறுத்தியுள்ளேன். தொழிலாளர்களுக்கு அரசு நிறுவனங்களில் பங்குகள் கொடுக்கும் திட்டத்தை முழுமைப்படுத்த மத்திய அரசின் சில சட்டங்களில் மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இதைக் குறித்து மத்திய அரசுக்குக் கடந்த ஆண்டிலேயே நம் அரசு எழுதியுள்ளதை நானும் தலைமை அமைச்சருக்குக் கடிதம் மூலமாக வற்புறுத்தியுள்ளேன். மத்திய அரசின் இறுதி முடிவு இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையிலுள்ள பல்வகைப் பணிகளுக்கும் வேளாண்மைக்குத் துணையாகவுள்ள பணிகளுக்கும் குறைந்த பட்ச ஊதிய வீதங்களை வரையறுப்பதற்காக, இந்த அரசு ஒரு குழுவை நியமித்தது. இக்குழுவின் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, பல்வேறு பணிகளுக்கும் குறைந்த பட்ச ஊதிய வீதங்களையும் அறிவித்துள்ளது. உயர்நீதி மன்றத்திலுள்ள வழக்குகள் தொடர்பாகத் தொழிற்சங்கங்களுக்குச் செலவுத்தொகை கொடுக்கவும் அரசு வகை செய்துள்ளது. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்டவாறு, தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் மூன்றினை அரசு நியமித்துள்ளது. தொழிலாளர்களும் சிறு தொழிற் சங்கங்களும் நீதி மன்றத்தில் நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் அது தொடர்பான மற்றவை குறித்தும் அவர்களுக்கு ஆலோசனை அளிப்பதே இக்குழுவின் பணியாயிருக்கும்.

ஐந்து இலட்சம் ரூபாயுடன் தொழிலாளர் நலநிதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோவை ஆகிய ஊர்களில் தொழிலாளர் நல நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தொழிலாளருக்கான அரசுக் காப்புறுதித் திட்டத்தை, வரும் ஆண்டு கீழ்க்கண்ட புதியபகுதிகளுக்கு நீட்டிக்கக் கருதியுள்ளோம்:—

(1) சென்னைப் புறநகர்ப் பகுதி (அடையாறு, நந்தம்பாக்கம்). (2) கரூர். (3) மேலூர். (4) ஆத்தூர். (5) ஆம்பூர். (6) காரமடை.

வேலை வாய்ப்பு

தற்போதைய பொருளாதாரச் சிக்கலின் காரணமாக நாட்டில் படித்தவரிடையேயும் படிக்காதவரிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துகொண்டே வருகிறது. திட்ட வேலைகளின் வேகம் உயர்ந்தால்தான் வேலைவாய்ப்புகளை அதிகமாக்க முடியும். கிராமப்புற வளர்ச்சிகளின் வாயிலாகவும் தான் நம்மால் வேலையின்மையைத் தவிர்க்க முடியும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஒருபுறம் திட்டத்திற்கான மத்திய நிதி உதவியையும் வங்கிக் கடன்களையும் குறைத்து விட்டு மறுபுறம் வேலையில்லாத் திண்



டாட்டத்தைப் போக்குவதற்கெனச் சிறப்புத் திட்டங்களைத் தொகுத்துச் செயல்படுத்துவது திட்டமிடும் முறையில் உள்ள குறைபாட்டைத்தான் சுட்டிக் காண்பிக்கிறது. எனினும் மத்திய அரசினர் இம்முறைப்படி வகுத்துள்ள சிறப்புத் திட்டங்களை நாம் முழுவதும் பயன்படுத்தி வந்துள்ளோம். அனைத்திந்திய அளவில் ஐந்து லட்சம் வேலை வாய்ப்புகள் அளிப்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்துள்ள திட்டத்தின்கீழ் இதுவரை நாம் 6.6 கோடி ரூபாய் செலவில் பல பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறோம். இதன் பயனாக, 35,000 வேலைகள் கிடைக்கும். இதற்கும் மேலாக, நம் நிதி வசதிகளிலிருந்தே நாம் இளைஞர் அணியை அமைத்து இதுவரை 4,576 இளைஞர்களுக்கு கிராமப் புறங்களில் வேலை செய்ய வாய்ப்பளித்தது நினைவு கூரத்தக்கது.

அரசு அலுவலர் நலன்



ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலாளர்களின் ஊதியங்களை மாற்றியமைத்தல், அவர்களின் பணி நிலைகளை மேம்படுத்தல் ஆகியவற்றில் கடந்த மூன்றாண்டுகளில் நாம் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அதனையடுத்து, சம்பள ஆணைக் குழுவின் அறிக்கையில் சில முரண்பாடுகள் இருப்பதைக் கண்ணுற்று, இந்த முரண்பாடுகளையும் சில பணியாளர் சங்கங்கள் தெரிவித்த குறைபாடுகளையும், களையும் பணிகளை மேற்கொள்ள ஒரு நபர் ஆணைக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்தது. இந்த ஒரு நபர் ஆணைக் குழுவின் பரிவுரைகளையும் அரசு ஒப்புக்கொண்டு அவற்றை நிறைவேற்றி வருகிறது. இதைத்தவிரத் தேவைக்கேற்ப அகவிலைப் படியையும் அரசு அதிகப்படுத்தி வருகிறது. 1970 அக்டோபர் திங்களில் செய்யப்பட்ட சம்பள விகித மாற்றத்தினை அடுத்து, இதுவரை மூன்று அகவிலைப்படி உயர்வுகளை அரசு அளித்துள்ளது. இந்தச் சம்பள வீத மாற்றங்களின் காரணமாகவும் அகவிலைப்படி உயர்வுகளின் காரணமாகவும் ஏற்படும் செலவையும் ஒரு நபர் ஆணைக் குழுவின் பரிவுரைகளை நிறைவேற்றுவதற்கான செலவையும் சேர்த்து ஆண்டுக்குச் சுமார் 50 கோடி ரூபாய் வரை கூடுதல் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாநில அரசு அலுவலாளர் ஓய்வூதியம்—பணிக்கொடைத் திட்டத்தின்கீழ் அரசு அலுவலாளர்கள் பெற்றுவரும் நலன்களுடன் மேலும் நலன்களை அடைவதற்காகத் தமிழ்நாடு அரசு அலுவலாளர்களுக்கு 1974 ஜனவரி 1ஆம் நாள் முதல் ''சிறப்பு குடும்ப நலத் திட்டம்'' என்ற புதிய திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், அரசு அலுவலாளர் தனது பணிக்காலம் முழுவதும் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் தொகை செலுத்தி வருவார். அலுவலாளர் பதவியில் இருக்கும் காலத்தில் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படும். அலுவலாளர் ஒருவர் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றால் அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பணியிலிருந்து வெளியேறினால் அவருக்கு அவர் அதுவரை செலுத்திய தொகையுடன் வட்டியும் சேர்த்து அளிக்கப்படும். தற்காலிகப் பணியிலும் ஓய்வூதியம் பெறத் தகுதியற்ற பணிகளிலும் உள்ளவர்கள் உட்பட அரசு அலுவலாளர்கள் அனைவருக்கும் இத் திட்டம் பொருந்தும். மானியம் பெறும் கல்விக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களும் உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

உயர்ந்து வரும் விலைவாசிக்கேற்ப ஊதிய வீதங்களையும் அகவிலைப்படியையும் மாற்றி அமைப்பது குறித்து நாம் ஆறாவது நிதி ஆணைக் குழுவிடம் சில கோரிக்கைகள் கொடுத்தோம். மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் அலுவலர்கள் சம்பள வீதங்கள் கூடுதலாக இருப்பதாகவும் ஆகவே சம்பள வீதங்களை உயர்த்துவதற்குத் தனி மானியங்கள் நம் மாநிலத்திற்குக் கொடுக்கப்படமாட்டா என்றும் நிதிக் குழு



வினர் கூறியுள்ளார்கள். மத்திய அரசின் அலுவலர்கள் பெறும் சம்பள வீதங்களையோ மத்திய அரசு நடத்தும் நிறுவனங்களில் கொடுக்கப்படும் சம்பள வீதங்களையோ கணக்கில் எடுத்துக் கொண்டோமேயானால் இந்த வாதம் சரியானதல்ல என்பது தெளிவாகும். மத்திய அரசு நியமித்த சம்பளக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு நிறைவேற்றியதால் இந்த இடைவெளி இன்னமும் கூடுதலாகவே மாறியுள்ளது. இந்த இடைவெளியைச் சுரிக்கட்ட மாநிலங்கள் தங்கள் நிதி வசதிகளை மட்டும் நம்பியிருக்க முடியாது என்றும் மத்திய அரசு இதற்காக உதவி அளிக்க வேண்டுமென்றும் நாம் கோரியிருந்ததை நிதிக்குழு மறுத்துவிட்டது வருந்தத்தக்கது. மேலும், ஆண்டுக்காண்டு அகவிலைப்படி உயர்வு கொடுப்பதற்காக ஆகும் அதிகச் செலவை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் நாம் கூறியிருந்தோம். இதையும் நிதிக்குழு ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் அரசு அலுவலாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊதிய, அகவிலைப்படி உயர்வு கொடுப்பதற்கு நம்முடைய சொந்த நிதி வசதிகளையே நாம் எதிர்பார்த்துச் செயல்பட வேண்டியிருக்கிறது. எனினும், எப்போதும் நன்னயம் செய்தல் எனும் நமது கொள்கைக் கிணங்க, அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 1974 ஏப்ரல் திங்கள் முதல் அகவிலைப் படியை 10 ரூபாய் அதிகப்படுத்த அரசு முன்வந்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ஆகும் செலவு ஆறு கோடி ரூபாய் அளவில் இருக்கும்.

நிர்வாகச் சீர்திருத்தம்



திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்த வேண்டுமானால் நிர்வாக அமைப்புகளை மேம்படுத்தவும் நடைமுறைகளைக் காலத்திற்கு

ஏற்ப மாற்றியமைக்கவும் வேண்டும். 1971-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு இது வரை ஏழு அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்குழு தனது பணிகளை 1974 ஜூன் அல்லது ஜூலை திங்களுக்குள் முடிக்குமென நம்புகிறேன். கிராம வளர்ச்சி, பொதுப் பணித்துறை, வருவாய்த்துறை இவை குறித்துள்ள இக்குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவுகள் எடுத்துள்ளது. இம் முடிவுகள் குறித்து சம்பந்தப்பட்ட மானியங்கள் விவாதிக்கப்படும்பொழுது அவைமுன் விவரங்கள் வைக்கப்படும்.

உணவுக் கொள்கையும் விலைவாசி நிலவரமும்.

அரிசியையும் ஏனைய தானியங்களையும் பொறுத்தவரை, தமிழ்நாடு ஓரளவு உபரி மாநிலமேயாகும். எனினும், பயறு வகைகளும் எண்ணெய் வித்துக்களும் வேண்டிய அளவுக்கு உற்பத்தியாகவில்லை. இந்தியாவின் ஏனைய பகுதிகளில் உணவு தானியங்களின் விலை உயர்வும் அவை கிடைக்காமலிருக்கின்ற நிலையும் இருந்திடும்போது, தமிழ்நாட்டில் நாம் மேற்கொண்டுள்ள பயன் தரு உணவுக் கொள்கையால் உணவு தானியங்களின் விலைகள் ஓரளவு சீராக உள்ளன. ஏழை எளியவர்களுக்கு உதவிடும் பொருட்டு, சென்னை மாநகரிலும்கோவைநகரிலும்கன்னியாகுமரி மாவட்டத்திலும் அரசு நியாயவிலைக் கடைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. வியாபாரிகளுக்கு ''லெவி'' விதிப்பதன் அடிப்படையில் உணவு தானியக் கொள்முதல் ஏற்பாடும் தொடர்ந்து செயல் பட்டு வருகிறது.

இந்த ஆண்டு நமது உணவுத் தேவைகளுக்குப்போக மத்திய அரசுத் தொகுப்புக்கு (Central Pool) 50,000 டன் அரிசி நாம் வழங்கியுள்ளோம். மேலும், கேரளம், கர்னாடகம், குஜராத், மேற்கு வங்கம், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் நிலவிய உணவு நெருக்கடியைப் போக்குவதற்காக நம்மால் இயன்ற அளவு 40,000 டன் அரிசியை அம்மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தோம். அவ்வண்ணமே, அண்டை மாநிலங்களுக்கு வரகு, சோளம் போன்ற தானியங்களை 22,000 டன் வழங்கினோம். உணவு தானிய விலைகள் அனைத்திந்திய நிலையில் 64 புள்ளிகள் கூடியுள்ளதற்கு மாறாக, தமிழ்நாட்டில் மாநில அரசு பின்பற்றி வரும் உணவுக் கொள்கையின் விளைவாக, இந்த விலை உயர்வு 27 புள்ளிகள் அளவுக்கே இருந்தது. இன்றுங்கூட அனைத்திந்திய நிலையைவிட, நமது மாநிலத்தில் உணவு தானிய விலைவாசி 50 புள்ளிகள் குறைவாகும்.

இன்றியமையாப் பொருள்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு நம்மால் ஆனதையெல்லாம் செய்து வருகிறோம். ஓரளவு கட்டுப்பாடுகள் விதித்தல், உணவு தானியங்களை வேண்டிய அளவு கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த தானியங்களைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்குத் தகுந்த அமைப்பினை ஏற்படுத்தல், போதிய இருப்புகளைக் கைவசம் வைத்திருத்தல் ஆகிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் விலைவாசியை முடிந்தவரை கட்டுப்படுத்த முயலுகிறோம்.

விலைவாசி குறித்து நமது அரசின் சார்பில் என்ன சொல்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

இதுபற்றி 1967-68 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிஞர் அண்ணா அவர்கள் தந்த விளக்கத்தை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்—

''அரசியல் சட்டத்தின் ஏழாவது அட்டவணையிலுள்ள மத்தியப் பட்டியலில் 36 முதல் 38 வரை உள்ள விதிமுறைகள், பணம் வெளியிடுதல், அந்நியச் செலாவணி போன்ற துறைகளை மத்திய அரசுடையது ஆக்கி வைத்திருப்பதன் மூலம், பணவீக்கம், பற்றுக்குறை நிதிநிலை, என்பவைகளுக்கு மத்திய அரசு முழுப் பொறுப்பேற்றிருக்கச் செய்கிறது. இதனால், விலை ஏற்றம் ஏற்படுவதற்கான பொறுப்பும் மத்திய அரசினையே சாருகிறது. எனவே விலை கட்டுப்படுத்தப்படுவதற்கான பொறுப்பும் மத்திய அரசே மேற் கொண்டாக வேண்டியதாகிறது. மத்திய அரசின் நடவடிக்கையால் விலைகள் கட்டுக்கடங்காமல் ஏறி விடுவதன் விளைவாக ஏற்படும் இன்னலையும் இழப்பையும் மாநில அரசு தாங்கித் தத்தளிக்க வேண்டி வருகிறது. விலைகளைக் குறைத்து நிலைமையைச் சரிப்படுத்தும் வலிமையை இந்திய அரசியல் சட்டம் மாநில அரசுகளுக்கு அளித்திடவில்லை.''



இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் நம்மால் முடிந்த அளவில் விலைவாசியைக் குறைக்கத் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

1973 - 74 வரவு - செலவு திருத்த மதிப்பீடுகள்.

1974-75 வரவு-செலவு மதிப்பீடுகள்.



1973-74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் 49 இலட்சம் ரூபாய் உபரி இருக்குமென மதிப்பிட்டிருந்தோம். ஆனால், திருத்த மதிப்பீடுகளின்படி 4.84 கோடி ரூபாய் வருவாய் பற்றுக்குறை இருக்குமென மதிப்பிட்டுள்ளோம். வருவாய் 465.56 கோடி ரூபாயிலிருந்து 468 கோடி ரூபாயாக உயர்ந்துள்ள போதிலும், செலவு 465.07 கோடி ரூபாயிலிருந்து 472.84 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. பல இனங்களின் கீழ் வருவாய் உயர்ந்திருப்பதே, மொத்த வருவாய், மதிப்பிட்டதைவிட உயர்ந்துள்ளதற்குக் காரணம் ஆகும். ஆனால், ஒருசில இனங்களில் வருவாய் குறைந்தும் உள்ளது. ''வணிக வரிகள்'', ''மோட்டார் வண்டி வரிகள்'', ''ஏனைய மாநில வரிகள்'' ஆகியவற்றின் கீழ் வருவாய் உயர்ந்திருக்க, திட்டத்தின் கீழ் வரும் பணிகளுக்கும் திட்டத்தின்கீழ் வராத பணிகளுக்கும் மத்திய அரசு தரும் உதவி மானியம் குறைந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து உதவி மானியமாக, 61.54 கோடி ரூபாய் கிடைக்குமென முதலில் எதிர்பார்த்ததற்கு மாறாக,

41.15 கோடி ரூபாய்தான் கிடைக்குமென, இப்போது எதிர்பார்க்கிறோம். மாநிலத் திட்டப்பணிகள், குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய அரசு தரும் நிதி அளவு குறைந்ததும், வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளுக்கு மத்திய அரசு உதவித்தொகை முற்றிலுமாக மறுக்கப்பட்டதுமே இக் குறைவுக்குக் காரணம் ஆகும். செலவு உயர்ந்திருப்பதைப் பார்த்தோமானால், 1973 அக்டோபரில் அகவிலைப்படியை உயர்த்தியது, ஆண்டின் இடைப் பகுதியில் மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் (ஐந்து இலட்சம் பேர் வேலை வாய்ப்பு போன்ற திட்டங்கள்) சிலவற்றை மேற்கொண்டது ஆகியவையே செலவு உயர்வுக்குக் காரணமாகும்.

1974-75-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி வருவாய்க் கணக்கில் 470.69 கோடி ரூபாய் வருவாயும் 483.25 கோடி ரூபாய் செலவுமாகவும் நிகரத் துண்டு 12.56 கோடி ரூபாய் எனவும் எதிர்பார்க்கப் பட்டுள்ளது. மாநில ஆயத்தீர்வைகள் வகையில், நமது வருவாய் 1973-74-ல் 45 கோடி ரூபாயாக இருந்தது, 1974-75ஆம் ஆண்டில் 17.89 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது தென்படும். 1974 ஆகஸ்ட் திங்கள் முடிவில் படிப்படியான மதுவிலக்கு நடைமுறையில் வருவதால் ஏற்படும் இந்த இழப்பு ஆறாவது நிதி ஆணைக்குழுவினால் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. வளர்ச்சிப் பணிகளின் வேகத்திற்கேற்ப வேறு மானியங்களும் நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் சேர்க்கப்படவில்லை. ஆகவேதான். இத்தனை பெரிய வருவாய்ப் பற்றுக்குறை நமக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த வருவாய்ப் பற்றுக்குறைக்கும் மேலாக 56 கோடி ரூபாய் மூலதனச் செலவுக்கும் கடன் முன்பணங்கள் வகையில் 36 கோடி ரூபாய் அளிப்பதற்கும் மத்திய அரசிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக 39.67 கோடி ரூபாய் செலவுக்கும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

வருவாய்க் கணக்கில் 12.56 கோடி ரூபாய் துண்டு விழுந்துள்ளதையும், எஞ்சிய எல்லாக் கணக்குகளிலும் துண்டு விழுந்துள்ளதைச் சேர்த்து 22.42 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. இதனை ஈடு கட்டவும் அதே நேரத்தில் மாநில வளர்ச்சி தடைப்படாதிருக்கப் போதிய வசதிகளை எழுப்பவும் சில முறைகளைக் கையாண்டுள்ளோம். மத்தியத் திட்டக் குழுவும் நாம் புதிய திட்டங்களுக்காக அதிக வரிகளை எழுப்ப வேண்டும் என நம்மிடம் கூறியுள்ளது. இதை மனத்திற்கொண்டு தாங்கக் கூடியவர்கள் மீது வரி விதிக்கும் நமது கொள்கையின்படி நிதி வசதிகளை எழுப்ப வரி விதிப்பு முறைகளையும் வரி விதிப்பல்லாத புது முறைகளையும் பற்றிச் சில முடிவுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இம் முடிவுகளின் வாயிலாகச் சுமார் 10 கோடி ரூபாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, வருவாய்க் கணக்கில் விழும் துண்டு 2.56 கோடி ரூபாயுட்பட மொத்தத் துண்டு 12.42 கோடி ரூபாயாக இருக்கும்.



வணிக வரி விதி முறைச் சீரமைப்பு

வணிக வரி விதிமுறைகளை ஆய்வு செய்ய அரசு நியமித்த சிறப்பு அதிகாரி கொடுத்துள்ள பரிந்துரைகளை அரசு பரிசீலித்து, வணிகவரி விதி அமைப்புகளைச் சீரமைப்பது குறித்து சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது.

விற்பனை வரியைப் பொறுத்த வரையில் பல நாட்களாக இருந்து வந்த கோரிக்கை, பொருட்களின் மீது பலமுனை வரியை மாற்றி ஒருமுனை வரியாக ஆக்க வேண்டுமென்பது. எல்லாப் பொருட்களின் மீதும் இப்படி வரியை மாற்றி அமைப்பது என்பது இயலாத காரியம் என்றும் தற்பொழுது இருக்கும் ஒருமுனை வரிப்பட்டியலை ஒரு சில பொருட்களைக் கூடச் சேர்த்து விரிவுபடுத்தலாம் என்றும் சிறப்பு அதிகாரி பரிந்துரைத்துள்ளார். இப்பரிந்துரைகளை ஆராய்ந்து அரசு 59 பொருட்களை ஒருமுனை வரியின் கீழ் கொண்டுவர முடிவு செய்துள்ளது. தற்பொழுது பல கட்டங்களிலாக பலமுனை வரியின்கீழ் விதிக்கப்படும் மொத்த வரியை மனத்தில் வைத்துக் கொண்டும் வசதி வாய்ந்தவர்கள் பயன்படுத்தும் சில பொருள்களுக்கு இச்சீரமைப்பின் வாயிலாக வரியை உயர்த்தும் நோக்கத்துடனும் ஒருமுனை வரியின் அளவை நிர்ணயித்துள்ளோம். உதாரணமாக, தற்போதுள்ள பலமுனை வரி விகிதம் 3.5 சத விகிதம் என்றிருக்க, ஒரு பொருள், இரண்டு அல்லது மூன்று கட்டங்களுக்கு பலமுனை வரிக்கு உட்படும் பொழுது 7-ல் இருந்து 10.5 சதவீதம் அளவுக்கு மொத்த வரிப்பளு இப்போது இருக்கிறது. இதை மனத்தில் வைத்துக்கொண்டு ஒருமுனை வரியை பெரும்பாலும் 7 சதவீதமும் அதற்குள்ளாகவும் மாற்றி அமைத்துள்ளோம். சில ஆடம்பரப் பொருட்கள் மீதும் வசதி படைத்தோர் பயன்படுத்தும் பொருட்களின் மீதும் 10, 15, 25, 30 சதவிகித வரி என்றும் இச்சீரமைப்பின்படி விதிக்கப்பட்டுள்ளது. அந்த விவரங்களைப் புதிய முறைப்படி விதிக்கப்பட்ட ஒருமுனை வரியின் அளவுப் பட்டியல் அவைமுன் வைக்கப்பட்டுள்ளதில் தெளிவாகக் காணுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பலமுனைகளில் இரண்டு கட்டங்களிலாக 7 சத வீதம் வரி விதிக்கப்படும் பருப்பு வகைகள், எண்ணெய்கள் மீது இனி மேல் 3.5 சத வீதம் ஒருமுனை வரியே விதிக்கப்படும் என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விறகு, மாட்டுத் தீவனம், மற்றும் கண்ணாடி வளையல்கள் ஆகியவை இதுவரை பலமுனை வரிக்குட்பட்டிருந்தன. இனி இவற்றிற்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது வெளிநாட்டு மது வகைகள் மீது ஒருமுனை வரி 24 சத வீதமாகவும் கள், சாராயம் நீங்கலான மற்ற மது வகைகள் மீது 12 சத வீதமாகவும் உள்ளது. இந்த வரி விகிதங்கள் 25 சதவீதமாக உயர்த்தப்படுகின்றன. அரிஷ்டம் எனப்படும் பொருளுக்கு ஒருமுனை வரி 30 சதவீதமாக விதிக்கப்படும்.

மேற்கூறியபடி விதிக்கப்

படும் வரிகள் இன்று முதலே அமலுக்கு வரும். இன்றே விற்பனை வரிச்சட்டத்தின் 59-ஆம் பிரிவின் கீழ் அறிவிப்புச் செய்வதன் மூலம் இம்மாற்றங்கள் செயல்படுத்தப்படும்.

இந்தச் சீரமைப்பில் வரி விதிப்புக்கு நாம் இப்பொழுது வரையறுத்துள்ள விற்பனையின் அளவு ஒரு முக்கியமான முடிவாகும். 1967-68-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், ''வரிவிதிப்பு, வசூலித்தல் ஆகிய எந்தக் கட்டத்திலும் மெலிந்த நிலையினரான சிறு வியாபாரிகளுக்குச் சங்கடம் விளைவிக்கக் கூடாது, சலுகை காட்ட வேண்டும்'' என்று குறிப்பிட்டு ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வியாபாரம் செய்யும் விற்பனையாளர்களுக்கு இருந்த விற்பனை வரி விலக்கை 15,000 ரூபாயாக உயர்த்திச் சலுகை அளித்தார்கள். அதைத் தொடர்ந்து 1972-73-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்கு விற்பனை செய்பவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இப்போது அதனை மேலும் சிறு வியாபாரிகளுக்குச் சலுகை அளிக்கும் விதத்தில் 50,000 ரூபாய் என்கிற அளவுக்கு உயர்த்தி அவர்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு இதனை வர்த்தக சமுதாயமும், சிறு வியாபாரிகளும் பொது மக்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இதனால் 40,000 சிறுகடை வியாரிகள் பயனடைவார்கள், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ஏற்படும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இழப்பை ஈடு கட்டுவதற்கும் நிதி வசதியைப் பெருக்குவதற்கும் ஏற்றவகையில் 10 இலட்ச ரூபாய்க்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் தற்பொழுது கொடுக்கும் உபரி வரியான 5 சத விகிதம், 10 சத விகிதமாக உயர்த்தப்படும். தாங்கும் சக்தி உள்ளவர்கள் மீது வரி உயர்த்தும் கொள்கைப்படி இது சரியானது என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வர்.

கேளிக்கை வரிகளைப் பொறுத்த வரையில் தற்போது மூன்று முறைகள் கையாளப்படுகின்றன. மாநில அரசு விதிக்கும் கேளிக்கை வரி, ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் விதித்துள்ள உபரி வரி, அண்மையில் அரசு விதித்துள்ள உபரி வரி என்று மூன்று முறைகளின்கீழ் இவை விதிக்கப்படுகின்றன. இம்மூன்று முறைகளையும் ஒருங்கிணைத்து ஒரே வரிவிதிப்பு முறையை அரசு ஏற்க முடிவு செய்துள்ளது. இதன்படி வரிப் பளு அதிகமாகாது. வரி வசூல் செய்வது தற்போதைய முறையைவிட எளிதாகும். வரும் வருவாயில் அரசுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கிடைக்க வேண்டிய பங்குகள் குறையாதபடி பகிர்ந்தளிப்பு முறைகள் வகுக்கப்படும். இது கேளிக்கை வரிச் சீரமைப்பே தவிர, கட்டண உயர்வுக்குக் காரணமாகிற அளவிற்கு வரி உயர்த்துவதாகாது.

மோட்டார் வாகனவரிச் சீரமைப்பு

தற்போது மோட்டார் வண்டிகளைப் பொறுத்தவரை இரண்டு வகையான வரிகள் விதிக்கப்படுகின்றன. 1931-ஆம் ஆண்டுமோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின்படி பயணியர் வண்டிகள் மீது இருக்கைகளின் அடிப்படையிலும், நிற்கும் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், பேருந்துகளுக்கு அன்றாடம் அனுமதிக்கப்பட்ட உச்ச தூர அளவின் அடிப்படையிலும் வரி விதிக்கப்படுகிறது. இதைத் தவிர, 1952-ஆம் ஆண்டு பயணிகள்-சரக்குகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் (Taxation of Passengers and Goods Act) ஏற்றிச் செல்லப்படும் பயணிகள், சரக்குகள் இவற்றிற்காக வசூலிக்கப்படும் கட்டணங்களைப் பொறுத்து வரி விதிக்கப்படுகிறது. இந்த இரண்டு வரிகளுக்குப் பதிலாக, இவற்றினை ஒருங்கிணைத்து வரி முறையைச் சீராக்கி மாற்றியமைக்கத் தீர்மானித்துள்ளோம். இந்தச் சீரமைப்பின் சுருக்கத்தை மட்டும் இங்குச்சொல்ல விரும்புகிறேன். பேருந்துகளைப் பொறுத்தவரை உட்காரும் பயணிகளுக்கும், நிற்கும் பயணிகளுக்கும் தற்போதுள்ள தனித்தனி வரி விகித வேறுபாடு அகற்றப்படும். மேலும், தற்போது நாளொன்றுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிற தூரத்தின் அடிப்படையில் வரி விகிதங்கள் விதிக்கப்படுகின்ற முறைக்குமாறாகப் பேருந்துகள் எந்தெந்தப் பகுதிகளில் செல்கின்றனவோ, அவற்றைப் பொறுத்து கீழ்க்கண்டவாறு வரிவிகிதங்கள் மாற்றி அமைக்கப்படும்:—

		காலாண்டுக்கு வரிவிகிதம். ரூபாய்.
(1) சென்னைப் பெருநகர் பகுதியில் ஓடும் வண்டிகள்	...	50
(2) ஏனைய நகர்ப்புற வண்டிகள்	...	80
(3) இதர பகுதிகளில் ஓடும் வண்டிகள்	...	120
(4) விரைவுப் பேருந்துகள்	...	140
(5) உபரி வண்டிகள்	...	உரிமையாளர் கொடுக்கும் உச்ச விகிதத்தில் 75 சதவீதம்.



இவை பேருந்துகளின் நபர் கொள்ளளவின் (Passenger Capacity) அடிப்படையில் விதிக்கப்படும். சரக்கு வண்டிகளைப் பொறுத்தவரை தற்போது எடைக்கேற்ப 19 வரி விதிப்பு நிலைகள் உள்ளதைக் குறைத்து, 7 நிலைகளாக மாற்றப்படும்.

ஒப்பந்த ஊர்திகளாகப் பயன்படுத்தப்படும் பேருந்துகளுக்கு விரைவுப் பேருந்து வண்டிகளுக்கான வரி விகிதம் விதிக்கப்படும். சுற்றுலா சொகுசு வண்டிகளாக ஓட அனுமதிக்கப்பட்ட பேருந்துகளுக்கு மேற்படி வீதத்தில் பாதி வரி விதிக்கப்படும்.

இதன் காரணமாகப் பேருந்துப் பயணிகள் கட்டணம் பொது மக்களைப் பெரிதும் பாதிக்காத வகையில் ஒரு கட்டுப்பாட்டுக்குட்பட்டுத் தான் உயர்வதற்கு அனுமதிக்கப்படும்.

புதிய பரிசுப் பத்திரத் திட்டம்.

புதிய பரிசுப் பத்திரத் திட்டம் ஒன்றை அறிவிக்க விரும்புகிறேன். இத்திட்டத்தின்படி 10 ரூபாய், 100 ரூபாய் மதிப்புள்ள இரண்டு வகைப் பரிசுப் பத்திரங்கள் வெளியிடப்படும். இவற்றின் மூலம் கிடைக்கும் தொகை அரசுக் கணக்கில் இரண்டாண்டுக் காலம் வைக்கப்பட்டு இரண்டாண்டுகள் முடிவில் பத்திரங்களின் முக மதிப்பு (Face-Value) அப் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். இந்த 2 ஆண்டுகளில் 6 தடவை பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பரிசுச் சீட்டு வாங்குபவர்களுக்குப் பரிசு கிடைக்காவிட்டாலும் அவர்களுடைய முதல் திரும்பக் கிடைக்கும். நாலு திங்களுக்கு ஒன்று வீதம் ஆறு தடவை சீட்டுக் குலுக்கலில் வெற்றி பெற்றால் ஒவ்வொரு முறையும் பரிசுகள் பெறும் வாய்ப்பும் ஒவ்வொரு பரிசுச் சீட்டுக்கும் இருக்கிறது. 100 ரூபாய் பத்திரங்களுக்கு 112 பரிசுகளும் 10 ரூபாய் பத்திரங்களுக்கு 222 பரிசுகளும் ஒவ்வொரு குலுக்கலிலும் உள்ளன. மொத்தமாக ரூபாய் 43 இலட்சம் பரிசுத் தொகையாகக் கொடுக்கப்படும்.



100 ரூபாய் வரிசையில் 5,00,000 ரூபாயும் 10 ரூபாய் வரிசையில் 2,00,000 ரூபாயும் என்ற இரு சிறப்புப் பரிசுகளும் இருக்கின்றன. இச்சிறப்புப் பரிசு பெறுபவர் கடைசிக் குலுக்கலில் தேர்தெடுக்கப் படுவர். இப் புதிய பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகைகள் வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும். தமிழ்நாட்டு மக்கள் இதை ஒரு புதிய சேமிப்பு முறையாகக் கருதிச் செயல்படுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

செய்வதைச் சொல்லி, சொல்வதைச் செய்து, நமது தமிழ் மாநிலம் நல்வளங்கள் பெற்றுத் திகழவும்—சமதர்மத் திட்டங்கள் நாவின் நடனங்களாக இல்லாமல் நடைமுறை வடிவங்கள் பெற்று விளங்கவும்—சமுதாய நலன்களைக் காப்பதில் கண்ணின் இமைக் கதவுகள்போல் செயல்படவும்—தன்னை ஒப்படைத்துக் கொண்ட இந்த அரசு, ஏழு ஆண்டுக் காலமாக மக்களின் முன்வைத்துள்ள சாதனைகளின் பட்டியலோடு, இந்த நிதி நிலை அறிக்கையின் திட்டங்களையும் இணைப்பதில் பெருமைகொள்கிறது.

இந்த அறிக்கையினைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து உறுதுணை புரிந்த நிதித்துறைச் செயலாளர், மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றியவர்கள், ஏனைய துறை அலுவலர் அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்த 1974-75-ஆம் ஆண்டுக்குரிய நிதி நிலைத் திட்ட மதிப்பீடுகளை அவையினர் ஏற்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.



[முதல்வர் கலைஞர் அவர்கள் 1974–75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டப் பேரவை முன் வைத்து 4–3–74-ல் ஆற்றிய உரை].

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு — சில தகவல்கள்

முதல் குலுக்கல்: 14—10—1968.

இதுவரை (28—2—74) 63 குலுக்கல்கள் நடை பெற்றுள்ளன. 316 வரிசை பரிசுச் சீட்டுகள் வெளியிடப் பட்டுள்ளன.

(ஒவ்வொரு வரிசையிலும் 10 லட்சம் சீட்டுகள்)

இதுவரை மொத்த வருமானம்:

1968 ஆகஸ்ட் முதல் 1974 பிப்ரவரி முடிய	வருமானம்	ரூ. 34,61,20,900
	செலவு	ரூ. 15,75,64,500
	நிகர வருமானம்	ரூ. 18,85,56,400

பொங்கல் சிறப்புப் பரிசுக் குலுக்கல் 63ல்

மொத்த வருமானம்	ரூ. 79,60,500
செலவு	ரூ. 49,86,050
நிகர வருமானம்	ரூ. 29,74,450

பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து கீழ்க்கண்ட திட்டங்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை.

1. தேசீய பாதுகாபபு நிதிக்கு	ரூ. 2,09,00,000
2. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட நிதிக்கு	ரூ. 43,27,200
3. சமூகநல நிதிக்கு	ரூ. 5,33,18,260
மொத்தம்	ரூ. 7,85,45,460

ஆண்டு	மொத்த வருமானம் ரூ. பை.	நிகர வருமானம் ரூ. பை.
1968 ஆகஸ்ட் முதல் 1969 மார்ச் வரை	7,16,14,178.00	4,60,40,946.18
1969-70	7,04,52,721.64	3,70,80,989.21
1970-71	8,50,42,177.00	4,36,05,638.37
1971-72	7,10,83,764.13	4,32,29,798.92
1972-73	2,46,39,959.59	1,00,06,760.59
1973-74 (பிப்ரவரி முடிய)	2,32,88,099.64	85,92,266.73
மொத்தம்	34,61,20,900.00	18,85,56,400.00

மொத்தச் செலவு ரூ. 15,75,64,500.00

செலவு விவரம்:

1. ஏஜெண்டுகளுக்கு கமிஷன்	ரூ.	3,24,58,900.00
2. பரிசுகள் (ரொக்கம்)		9,85,82,300.00
3. ஏஜெண்டுகளுக்கு போனஸ்		1,03,11,900.00
4. அச்சுச் செலவு		73,75,300.00
5. நிர்வாகச் செலவு		34,16,800.00
6. விளம்பரச் செலவு		54,19,300.00
மொத்தச் செலவு		15,75,64,500.00

பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து கீழ்க்கண்ட இனங்களுக்குச் செலவு செய்கிறோம்.

- * கிராமப் பள்ளிக் கட்டடங்கள்
- * கிராமச் சாலைகள்
- * கிராமங்களுக்கு மருத்துவ வசதிக்காக
- * குடிசை மாற்று வாரியத்திற்குக் கடன்
- * தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 1971-72-ல் ரூ. 2 கோடி 9 லட்சம் கொடுத்துள்ளோம்.
- * பிச்சைக்காரர் மறு வாழ்வுத் திட்டத்திற்கென்று தனியாக (1971-72ல்) நடத்தியதில் நிகர வருவாய் ரூ. 43,27,200-00.

பரிசு விழுந்தும் தொகையைப் பெற்றுக் கொள்ளாத வகையில்:

இத்திட்டம் துவக்கிய காலத்திலிருந்து இதுவரை சுமார் ஒரு கோடி ரூபாய் கிடைத்திருக்கும்.